617

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்

617
28 JUL 1938
MADRAS

"ஹா! தயையுடன் செய்தது தலை போகும் குற்றமா?..... ஆம்! ஆம்! மன்னிக்க முடியாத குற்றம். துரோகம் நிறைந்த குற்றம்..............................."

? ? ? —சுரேந்திரநாத்.

"மானம் பெரிதா பிராணன் பெரிதா? உங்களைப்போல் மானத்தை விற்றுப் பிராணனைக் காக்கக்கூடிய புத்தி ஹீனை நானல்ல..........." "ஹா! மெத்த சந்தோஷம். உங்கள் பிரியப்படியே இதோ சமுத்திரத்தில்..........."

? ? ? —நிர்மலா.

"ஆதரவைக் கோரி வந்தும் சொந்த மனிதர்களால் வேலைக்காரியென்று கருதப்பட்டு வாழ்வதை விடக் கூலி வேலை செய்து மானமாயும், சுதந்தரமாயும் பிழைக்கலாமல்லவா?"

? ? ? —அலமு.

உள்ளே காணுங்கள்.

1269

| ஜூலை 1938 | ஜீவியச் சுழல் அல்லது சீரிய ஒழுக்கம் (தொடர்ச்சி) | அணா 2 |
|---|---|---|

எங்கும் வெற்றிக் கொடியை உயர்த்தி வருகிறது!

நெஞ்சு திடுக்கிடும் வீரச் செயல்கள்!

காட்டு மிருகங்களின் ஆர்ப்பாட்டம்!

உயிருக்குத் துணிந்த பாய்ச்சல்கள்!

அதியற்புத நாய்

மோத்தி

நடிக்கும்

# வனராஜ கார்ஸன்

முதல் தமிழ் வனக் காட்சிப் படம்

●

ஜான் காவன் (கலியுக பீமன்)

மிஸ். செல்லம்

நடித்தது.

---

விநியோகிப்பவர்கள் :—

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன்,

7, பெல்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி,

சென்னை.

மிகவும் நேர்த்தியானது !
கண்ணைக் கவர்வது !
உள்ளத்தைக் கொள்ளை கொள்வது !
செவிக்கோர் இனிய விருந்து !

OFFICE OF THE RE...TRAR OF BOOKS
28 JUL 1938
MADRAS

அது தான்

வேல் பிக்சர்ஸாரின் மகோன்னத

தமிழ் டாக்கி

ஸங்கீத வித்வான்

**எஸ். வி. ஸுப்பய்யா பாகவதர்**

நடிக்கும்

# கம்பர்

**சென்னை பிராட்வே டாக்கிஸில் ஆரம்பம்**

**6—7—38** புதன்கிழமை முதல் தினசரி **3** காட்சிகள்

**அதே சமயத்தில் கீழ்க்கண்ட இடங்களிலும் ஆரம்பம்**

| | |
|---|---|
| ஸில்வர் ஜுபிலி டாக்கீஸ் | மதுரை |
| வெல்லிங்டன் டாக்கீஸ் | திருச்சி |
| எடிஸன் தியேட்டர் | கோயமுத்தூர் |
| டைமண்ட் ஸினிமா | கும்பகோணம் |
| ராக்ஸி டாக்கீஸ் | வேலூர் |



நம் "மோகினி" பிரசுரங்களில்

## மூன்று டாக்கீ நாவல்கள்!

### ராஜமோஹன் : (ரூ. 1—4)

நீங்கள் வெகு நாட்களாக ஆவலுடன் எதிர் பார்த்த இரண்டாம் பதிப்பு தயாராகி விட்டது. 'பணமா, குணமா? அந்தஸ்தா, அன்பா? தாயின் சேவையா அல்லது தன் சுக வாசமா?'.... இவை போன்ற பல கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் அற்புதமான கதை.

### அனாதைப் பெண் : (ரூ. 1—4)

மனத்தை யுருக்கிக் கண்ணீரைப் பெருகச் செய்யும் பலவித சம்பவங்கள் நிறைந்த மகத்தான நாவல். இரண்டாம் பதிப்பு சுமார் 40 அழகிய ஆப்டோன் படங்களுடன் வெளிவந்துவிட்டது.

### தியாகக் கொடி : (ரூ. 2)

சம நிலைத் தொண்டின் உயர்வையும், தியாக புத்தியையும் புகட்டும் நவீனம். எப்பேர்ப்பட்டவரும் பிரமிக்கும் துப்பறிதல்........மிகச் சிறந்ததென எல்லோராலும் கொண்டாடப்பட்ட கதைப் போக்கையுடையது.

இவைகளை நீங்கள் இன்னும் படித்திராவிடில், உடனே தருவித்துப் படித்து இன்புறுங்கள்.
**பிறகு படத்தைப் பார்த்துக் களியுங்கள்!**

# "பக்தமீரா"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1938
MADRAS

உள்ளங் கவரும் ஒய். வி. ராவின்
உயர்தரச் சித்திரம் டைரெக்ஷன்

இத்துடன்

## "ஷோக் சுந்தரம்
## கிராமத்திற்குப் போகிறான்"

என்னும் ஹாஸ்யப் படத்தையும்

கண்டு களியுங்கள்.

சென்னை நியூடோன் ஸ்டுடியோவில்

தயாரித்தது.

---

சிந்தாமணி பிக்சர்ஸ் லிமிடெட்,

116, ராயப்பேட்டை ஹைரோடு,

சென்னை.

தந்தி : "காமதேனு" டெலிபோன் : 8331

---

"பக்த மீரா"வின் கீதங்களை

ஒடியன் ரிக்கார்டுகளில் கேட்டு மகிழுங்கள்.

1938-ம் வருஷத்திய வெற்றிப் படம்

# கிருஷ்ணன் தூது

அண்டு

## நவீன தெனாலி ராமன்

டைரக்ஷன்: ஆர். ப்ரகாஷ்

பாட்டு: பாபநாசம் சிவன் சகோதரர் ராஜகோபாலய்யர்

ஸ்டுடியோ: மோஷன் பிக்சர்ஸ்

செருகளத்தூர் சாமா, வி. என். சுப்பிரமணிய பாகவதர்,

எம். ஆர். வாசவாம்பாள், என். எஸ். கிருஷ்ணன்,

ஜாலி கிட்டு, குஞ்சிதபாதம்பிள்ளை

முதலியோர் நடித்தது

விவரங்களுக்கு:

ராஜகோபால டாக்கீஸ்,

27, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை,

சென்னை.

போன்: 86006

தந்தி: "தூது"

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.



| மலர் 15 | பகுதான்ய ஹு ஆனி மீ ஜூலை 1938 | இதழ் 7 |
|---|---|---|



## திருமால் துதி

அளவின் மறைபுக ழவ்வீ டளிக்கும்
களவின் நிறத்தான் கழல். 1

பனைத்தாள் மதகரி பார்த் தழித்தானை
நினைத்தாற் றுயர்போம் நினை. 2

பாலை வணங்கு மொழியார் பழிகெட
மாலை வணங்கு மகிழ்ந்து. 3

கயல்புரை வாள்விழிக் காரிகை மோக
மயல்கெட மாலை வணங்கு. 4

அடங்காத் துயரொழித் தணியுலகு சேர்க்கும்
படந்தா ரவன் பதம். 5

பண்ணார் பவளவாய்ப் பாம்பணையான் பைங்கழலை
எண்ணார் மனமே இயம்பு. 6

— ஸ்ரீ வீரராகவ கவி.

# நான்தான் "ராஜாஜி"

[சென்னையில் அகில இந்திய ரேடியோ ஸ்தாபனத்தை **16-6-38**-ல் திறந்து வைக்கும்போது பிரதம மந்திரி ஸ்ரீ. ராஜகோபாலாசாரியார் செய்த பிரசங்கம். அவரே தமிழில் எழுதியது இது.]

### தயவு செய்து கேளுங்கள்

வெகு தூரத்திலிருந்து பேசுகிறேன். என்னவானாலும் யந்திரம் யந்திரம்தான். ஆகையால், குரலிலிருந்து பேசுகிறவன் யார் என்று சொல்லுவது உங்களுக்குக் கஷ்டம். நான்தான் "ராஜாஜி" முந்தியே டைரக்டர்வாள் சொன்னார்களல்லவா?

"சர்வ இந்திய ரேடியோ விச்சு" ஸ்தாபனத்தில் சென்னை ஆகாசவாணி மண்டபத்திலிருந்து பேசுகிறேன். இந்த ஸ்தாபனத்தின் சென்னைக் கிளையைத் திறந்து வைக்கும் கௌரவத்தை எனக்குத் தந்திருக்கிறார்கள்.

நான் பழைய தினுசு மனிதன். வைதிக மனப்பான்மை. புது நாகரிகங்கள் அவ்வளவாகப் பிடிக்காது. அநாகரிகங்களுக்குள் பழையனவே தேவலை என்று எண்ணுகிறவன். ஜனங்களுக்குப் பேசும் படங்களாலும், யந்திரப் பாட்டாலும் உபதேசங்கள் அவ்வளவாக ஏறாது என்பதே என் எண்ணம். ஆயினும் சரியான முறையில் உபயோகித்தால் எதுவும் ஓரளவு பயன்படும் என்பது ஒருபுறமிருந்து கொண்டிருக்கிறது. ஆகையால், இந்த ரேடியோவுக்கு என்னுடைய பூரண ஆசி தருகிறேன்.

### ரேடியோ என்பது என்ன?

இந்தச் சந்தர்ப்பத்தில் கொஞ்சம் சொல்லப் பார்க்கலாமென்று எண்ணுகிறேன். ஒருவன் பேசினால் பேச்சானது சுற்றியுள்ள வாயு மண்டலத்தில் சின்னஞ் சிறு அலைகள் உண்டாகி அந்த அலை விச்சுகள் பரவிக்கொண்டே போய்க் கேட்பவன் செவிக்குள் புகுந்து அங்கே உள்ள ஒரு சிறிய தம்பட்டத் தோலின்மேல் தாக்கி அதை அதிரச் செய்கிறது. பேச்சு நடக்க நடக்க அந்தச் செவித் தம்பட்டம் அதிர்ந்து அதிர்ந்து சமாசாரத்தை உள்ளே இருக்கும் நரம்புகளுக்குத் தருகிறது. அதுவே ஒலி யுணர்ச்சி. பாடின பாட்டு வாயு மார்க்கம் அலை அலையாகச் சென்று கேட்பவன் மூளையில் நுட்பமான வேலை செய்த பின்னரே, "பேஷ்" என்று தலை அசைக்கிறோம். இதெல்லாம் வாயுவேகம் மனோவேகமாக முடிந்து போகிறபடியால், சிரமம் ஒன்றும் தெரிகிறதில்லை. காது கெட்டுப் போய் செவிடு ஆனபோதுதான் சொல்லுவதும் கேட்பதும் வெவ்வேறு என்பது புலனாகிறது. இயற்கை இரகசியங்களெல்லாம் இவ்விதமே. கெட்டால் தான் உண்மை தெரிகிறது. சரியாய் அமைந்திருக்கும்போது யாரும் லட்சியம் செய்வதில்லை.

18324
சென்னை 600 008

ஒலிக்கு வாகனம் காற்று என்று சொன்னேன். இந்த வாயு வாகனம் வெகு தூரம் செல்லாது; பெரிய கூட்டங்களில் பேசுகிறவர்களுக்குங்கூட ஒரு வரம்புக்கு மேல் தொண்டையின் வேகம் செல்லாது. நல்ல இரும்புத் தொண்டை படைத்தவர்களே ஜன நாயக வீரர்களாவது உங்களுக்குத் தெரியும். ஆனால், இப்போது ஒலிப் பெருக்கிகளைக் கொண்டு வெகுதூரம் கேட்குமாறு சிரமமில்லாமல் யாரேனும் பேசலாம். தொண்டை யில்லாதவர்களும் தலைவர்களாகி விடலாம். அதனுடன் வேறு யந்திரங்கள் சேர்த்துக்கொண்டு பேசினால், ஆயிரம் மைல் தூரம் கேட்கும்படியும் பேசலாம். லண்டன் நகரத்தில் ஒரு ஹாஸ்யம் பேசினால், சென்னையில் கேட்டுச் சிரிக்கலாம். ஜெர்மனியில் பாடுவதை இங்கே கேட்டுச் சங்கீதம் கண்டவர்கள் அநுபவிக்கலாம்.

இம்மாதிரி மலையும் கடலும் தாண்டிச் செல்ல வாயு வாகனம் போதாது. காற்றுக்குப் பதில் வேறு சவாரி வேண்டும். சர்வ வியாபகமாகி நிற்கும் "ஆகாச" அணுக்களின் அதிர்ச்சி மூலம் ஒலியைச் செல்லச் செய்து, ஆயிரம் மைல் தூரத்திலுங் கூடப் பேசுவதையும் பாடுவதையும் கேட்கச் செய்யலாம். சில நாட்களுக்கு முன் "ஆகாச" அணுக்களின் மேல் ஒலி யதிர்ச்சியை எவ்வாறு செலுத்துவது என்பதைக் கண்டுபிடித்து விட்டார்கள். பிறகு இந்த ரேடியோ யந்திரம் ஏற்பட்டுவிட்டது. தேசங்களும் கண்டங்களும் ஆறும் மலையும் கடலும் தாண்டிச் செல்லும் பாட்டுக் கச்சேரிகளும் பேச்சுக் கச்சேரிகளும் இப்போது உலகத்தில் நடைபெறுகின்றன.

சூரிய வெளிச்சம், மின் சக்தி, காந்தக் கவர்ச்சி இவையெல்லாம் ஆகாசக் கடலின் அலைகள். ஒலி மட்டும் இவ்வளவு காலம் வாயுவை நம்பிப் பிழைத்தது. இப்போது அதுவுங்கூட "ஆகாச" அலைகளின் மேல் சவாரி செய்ய யந்திரம் செய்து விடப்பட்டது. இதுவே ரேடியோ, அல்லது ஆகாசவாணி. இதன் விவரம் இன்னும் கொஞ்சம் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், கேட்டீர்களானால்.

## ஒலியின் நிழல்

முதலில் மின் காந்த அலைகள் உண்டாக்கி அது கொண்ட ஒரு வெள்ளம் பரவச் செய்கிறார்கள். அது ஒரே அளவான அதிர்ச்சியைக் கொண்டு செல்லுகிறது. சூரியனிடமிருந்து கிரணங்கள் பாய்வதுபோல், ரேடியோ யந்திரத்தினின்று இந்த மின்னதிர்ச்சி பாய்கிறது. டில்லியிலிருந்தும் அதற்கப்பாலிருந்தும் இங்கு வந்து தாக்குகிறது. இதற்குக் கம்பி வேண்டியதில்லை. சூரியனிடமிருந்து வெயில் வந்து சேரக் கம்பியோ குழாயோ வேண்டுமா? இல்லை; அதைப்போலவே ரேடியோ அதிர்ச்சிக்குக்

கம்பி வேண்டியதில்லை. ஆனால், சூரியனுடைய கிரணங்கள் இடைவிடாமல் வந்துகொண்டேயிருக்கின்றன—இந்த மின் கிரணங்கள் யந்திரத்தில் உண்டாக்கின போதுதான் வருகின்றன. மற்ற போது இல்லை. கண்ணுக்குப் புலப்படாது. வெயில் காதுக்குப் புலப்படுமா? பாட்டு கண்ணுக்குப் புலப்படுமா? மின் சக்தி கண்ணுக்கும் புலப்படாது, காதுக்கும் புலப்படாது, ரிஸீவருக்குத்தான் புலப்படுகிறது. பாட்டு கேட்டு ஒருவன் சந்தோஷப் பரவசமாகித் தலையசைத்து ஆடினால், அது கண்ணுக்கும் புலப்படும். சப்தம் கேட்டு ஒருவன் நடுங்கினால் அது கண்ணுக்கும் புலப்படும். அதைப்போல் மின் சக்தி யலைகளால் வேறு காரியம் நடைபெற்றால், அது நமக்குக் கண், செவி முதலியவற்றால் புலனாகும். நேராக அதுவே புலப்படாது. மின் கிரணங்களை உண்டாக்கி, அதே இடத்தில் ஒரு யந்திரத்தின் மூலமாக ஒலி யதிர்ச்சிகளை அந்த மின் அலைகள்மேல் ஒழுங்காகத் தாக்கச் செய்தால், அந்த மின்னதிர்ச்சி அலைகளின் வடிவம் சத்தத்திற்குத் தக்கவாறு மாறுகிறது. பாடுகிறவனும் பேசுகிறவனும் உண்டாக்கும் ஒவ்வொரு ஸ்வரத்தின் வேகமும் அந்த மின் வெள்ளத்தின்மேல் தன் வடிவத்தை முத்திரை போட்டு விடுகிறது—கிராமபோன் தட்டில் சப்தக் கோட்டு வரிகள் பதியச் செய்கிற மாதிரி, ஒலி யதிர்ச்சியின் வேகத்தால் அடைந்த உருமாற்றத்துடன் மின் வெள்ளம் வந்து சேருகிறது. சேருமிடத்தில் ஒரு நட்பமான யந்திரத்திலுள்ள ஸன்னத் தகட்டை அது அதிரச் செய்கிறது. அது அதிர அதிர, எந்த ஒலியால் மின் கிரணங்கள் தீண்டப்பட்டனவோ, அந்த ஒலி மறுபடி உண்டாகிறது, கிராமபோன் தட்டிலிருந்து பாட்டு உண்டாவதுபோல், காரண காரிய அவினச் சம்பந்தம் இதுவே. உண்டான ஒலியை ஒலிப் பெருக்கியால் பெருக்கி, அனைவரும் உட்கார்ந்து கேட்கச் செய்கிறோம்.

இந்த முறையை விளக்க இன்னொரு திருஷ்டாந்தம். சூரியன் வெளிச்சம் தருகிறான். வெயில் என்றால் என்ன? சூரியனிடமிருந்து ஆகாச அணு அதிர்ச்சிகள் கிளம்புகின்றன. அந்த அலை வெள்ளம் நம்மைத் தாக்குகிறது. இந்தத் தாக்கின் வேகத்தை நம்முடைய புலன்கள் மூலமாக வெளிச்சமாகவும் வெப்பமாகவும் உணர்கிறோம். பத்துக் கோடி மைலுக்கப்பாலிருக்கும் சூரிய மண்டலத்திலுள்ள அதிர்ச்சி யலைகளை ஆகாச அணுக்கள் கொண்டு வந்து சேர்ப்பிக்கின்றன. இதற்கு மத்தியில் குறுக்கே ஒரு மரம் நின்றால், அதன் கிளைகளும் இலைகளும் தம் உருவத்தை அந்தக் கிரணங்களின்மேல் பதியச் செய்கின்றன. இதுவே வெயில் படுமிடத்தில் நிழலாகிறது. கிளையும் இலையும், நிற்பதும் ஆடுவதும், நிழலில் காண்கிறோம். இவ்வாறே மின் காந்தக் கிரணங்களைத் தடுத்த பாட்டும் பேச்சும், கிரணங்கள் தாக்குமிடத்தில் நிழல்களைப்

போல் மறுபடியும் உண்டாகின்றன. நிழல் கண்ணுக்குப் புலப்படும் படம். ரேடியோ காதுக்குப் புலப்படும் படமாகும். நான் இப்போது ஒரு படத்திலிருந்து பேசுகிறேன், நீங்கள் கேட்பது என் பேச்சின் நிழல்.

வேண்டாமப்பா, கட்டை வண்டியே போதும்!

எல்லாம் மிகவும் அற்புதம். வெகு தூரத்தில் போடும் சப்தம் இங்கே வந்து சேருவதும், யந்திரத்தால் ஆகாசத்தை மடக்கி ஆளுவதும், எல்லாம் பெரிய வெற்றியே. ஆனால் பயன் என்ன? போடும் சப்தம், கேட்கும் பேச்சு, பாடும் பாட்டு இவை நல்லவை யானால் புருஷார்த்தம் உண்டு. கழுதைகள் எங்கிருந்து கத்தினாலும் ஒன்றே. கிராமத்தில் மேயும் கழுதையானா லென்ன, சீமையில் கத்தும் கழுதையானா லென்ன? கட்டை வண்டிக்குப் பதில் ரயிலும் மோட்டாரும் வந்து, திருடர்களையும் மோசக்காரர்களையும் ஊரில் வேகமாய்க் கொண்டுவந்து தள்ளுவதா யிருந்தால், 'வேண்டாமப்பா, கட்டை வண்டியே போதும்' என்போம். வெகு தூரத்தில் பேசும் பேச்சு நமக்கு நன்மையும் சுகமும் நல்ல புத்தியும் தருவனவாக இருந்தால், ஆகாசவாணி பயன் தரும். இந்தச் சென்னை ரேடியோ யோக்கியர்களையும் அறிவாளிகளையும் நல்ல பாடகர்களையும் கண்டு அவர்களின் உதவி பெற்று நன்மை தரும் பேச்சும், சாந்தம் தரும் பாட்டும் சம்பாதித்துத் தரும்.

விலையற்ற ரேடியோ ஒன்றுண்டு.

இன்னொரு விஷயம். நல்ல புத்திமதிகளைப் பேசச் செய்து ஒலிப்பெருக்கியைக் கொண்டு கம்பீர துவனியுடன் ஊரார் காதுக்குத் தரலாம். ஆனால், அதைக் கேட்போர் ஒப்புக்கொண்டு நடந்தால் தான் பயன். ரேடியோ யந்திரத்தைப் போலவே மனிதன் மூளையும் கேட்கும் ஒலிக்குத் தகுந்தவாறு உள்ளம் அதிர்ச்சி கொள்ள வேண்டும். உணர்ச்சியும் அதிர்ச்சியுமற்று நின்றுமானால், எவ்வளவு ஆகாசவாணிகள் கத்தினாலும் யாதொரு பயனும் உண்டாகாது. ஒலியதிர்ச்சி "குண அதிர்ச்சி" யாக மாற வேண்டுமானால் உள்ளம் என்ற யந்திரம், அழுக்கும் பழுதுமில்லாமலிருக்க வேண்டும். இந்த யந்திரமே பெரிய—சிறந்த—விலையற்ற ரேடியோ.

மோனப் பரம்பொருள்

குடிக்காதே, கெட்டுப் போகாதே, சம்பாதித்த கூலியை நாசமாக்காதே, பெண்டாட்டியைத் திட்டாதே, அடிக்காதே என்று ரேடியோ தினமும் சொல்லும். பெண்டுகளுக்கும் புத்தி சொல்லும். வீட்டுக்கு வரும் புருஷனைச் சந்தோஷச் சிரிப்புடன் எதிர்கொள், வீட்டை அன்புக்கு ஒரு கோயிலாக வைத்துக்கொள், புருஷனிடம் பொறுமையும் அமைதியும் காட்டி அவனை நேசிக்க வேண்டும், குழந்தைகளை அடிக்கக்கூடாது என்று சொல்லும்.

குழந்தைகளுக்குங் கூட ரேடியோ சொல்லும். பெரியோர்கள் சொல்படி நடக்க வேண்டும், சிரித்து விளையாட வேண்டும், படிக்க வேண்டும், குளிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லும். எல்லா ருக்கும் நல்ல புத்திமதிகள் ரேடியோவிலிருந்து கூப்பாடு கிளம்பும். சமாசாரப் பத்திரிகைபோல் விஷயங்களைப் படிக்கத் தெரியாதவர் களுக்கும் வெளிப்படுத்தும். நல்ல பஜனைகள் நடத்தும், புராணக் கதைகள் சொல்லும். சோம்பித் திரியாதீர்கள், சூதாட்டம் வேண்டாம், கஞ்சா அபினி மகா விஷமாகும், அதை உபயோ கித்தால் உடல் நாசமாகிவிடும் என்றெல்லாம் ஆத்திச்சூடிபோல் சொல்லும். உடம்பும் வீடும் ஊரும் சுத்தமாக வைத்துக் கொள் ளுங்கள் என்று கொன்றை வேந்தன்போலும் சொல்லும். ஊர் எக்கேடு கெட்டால் என்னவென்று இராதீர்கள் என்று அடிக்கடி வற்புறுத்தும். ஆனால், இது வெறும் யந்திர ஒலியாக முடியாமல் உள்ளமும் வீடும் ஊரும் பயனடைய வேண்டும். அப்போது தான் நம்முடைய ரேடியோ உண்மையான ஆகாச வாணியாகும். ஆகாசம்தான் இந்தச் சப்தத்தைக் கொண்டு வந்து தருகிறது. ஆகாசம் என்பது எங்கும் பரவி நிற்கும் மோனப் பரம்பொருள். அலைகள் புரண்டு தீர்ந்ததும் மறுபடி அறிதுயில் கொள்ளும். நாமும் அவ்வாறே கம்பீரமும், சாந்தமும் கொண்டு என்ன கஷ்டம் வந்தாலும் கலக்கம் தீர்ந்து நிற்போமாக.

சென்னைக்கு ரேடியோ புதிதல்ல. கார்ப்பொரேஷன் பல நாட்களாக ரேடியோ நடத்தி வந்தது உங்களுக்குத் தெரியும். ஆனால் அந்த, ரேடியோ, கார்ப்பொரேஷனில் பாடும் பாட்டுகளை மட்டும் வழங்கி வந்தது. இந்தப் புது ஸ்தாபனத்திலிருந்து பல மாகாணங்களிலிருந்தும் பல தேசங்களிலிருந்தும் பேச்சும் பாட்டும் இனிமேல் வழங்கப்பெறும். சென்னை மட்டுமல்ல, பல கிராமங் களிலும் இந்தப் பேச்சும் பாட்டும் கேட்கும்.

### கனவு காண்கிறேன்

இந்த ஆகாசவாணி அமைப்பை நாம் நல்ல வழியில் உபயோ கித்துக் கொண்டால், பெரும் பயன்கள் அடையலாம். கிராமத்தில் வசிக்கும் பணக்காரர்களுங்கூட ஒலி பிடிக்கும் பெட்டிகள் வாங்கி வைத்துக் கொள்ளலாம். இந்த ஆகாசவாணிப் பாட்டையும் பேச் சையும் வேடிக்கையையும் ஊரார் எல்லாரும் அனுபவிக்குமாறு கிராமங்களிலும் பிடித்து ஒலிப் பெருக்கி வைத்து நல்ல தருமம் செய்யலாம். இம்மாதிரி, ஒவ்வொரு ஊரிலும் கள்ளுக்கடைக்குப் பதில் மாலைச் சங்கீதமும், புராணமும், பஜனையும், ஆகாசவாணி மூலம் நடத்தலாம்.

பெரிய கனவு காண்கிறேன்.

— "ஆனந்தவிகடன்"

# நாதன குறள்

தொடங்கும் வினையானே வேறோர் வினையை
அடங்கும் வகையறிதல் நன்று. 1

தம்மரசன் மேன்மை தனைக்கூற வேற்றரசன்
விம்முங்கா லஞ்சாமை வேண்டு. 2

அவாவிற் சகந்தோன்றும் அன்றேல் நல்லின்பம்
தவாஅது மேன்மேல் வரும். 3

செஞ்சொல் இலக்கணச்சொல் சேர்குறிப்போ டிம்மூன்றும்
எஞ்சலிலாச் சொல்வகையா எண். 4

அவையறிந்து நிற்பர் அறிவுடையார் சொல்லின்
சுவையறிந்த தூய்மை யவர். 5

— திரு. ராகவாசாரியர்.

கற்பனை சித்திரம்!

கர்தல் களஞ்சியம்!

**ம ந் தா கி னி**

காதல், சோகம், உண்மைத் தேசப் பணி, தியாக வாழ்வு முதலியவற்றை நன்கு விளக்கிக் காட்டும் அருமையான நாவல்.

வை. மு. கோதைநாயகி அம்மாள் முன்னுரையுடன்

விலை அணு 8

**வத்ஸா கம்பெனி,**
திருவல்லிக்கேணி,
சென்னை.

**திரு. ராகவாசாரியர்**

இயற்றிய நூல்கள்

| | | |
|---|---|---|
| துருவ வெண்பா | 0 | 8 |
| சம்பு ராமாயணம் | 0 | 10 |
| நீதி மஞ்சரி | 0 | 5 |
| திருமால் வெண்பா | 0 | 3 |
| சிவபிரான் துதி | 0 | 4 |
| ராஜ ராஜேச்வரி | (அச்சில்) | |

ரூ. 1—8 முன்பணமனுப்புவோருக்கு 5 புத்தகங்களும் தபாற் செலவின்றி அனுப்பப் படும்.

**ஜகன்மோகினி ஆபீஸ்,**
திருவல்லிக்கேணி,
சென்னை.

# டாக்கி விமர்சனம் :: கம்பர்

தமிழ்ப் பாஷையில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் கம்பநாட்டாழ்வார் அருளிச்செய்த இராமாயணத்தின் மகிமையை அறியாதிருக்கமுடியாது. அத்தகைய கம்பரின் சரிதையை நேரில், கண்டு களிக்கும்படியாக வேல் பிக்சர்ஸார் பேசும் படமாகத் தமிழ்நாட்டிற்கு உதவி யிருப்பது போற்றத்தக்கது. படம் வெகு உயர்ந்த முறையில் அமைந்திருப்பது பெருமையே யாகும்.

பாகவதர் கம்பராக நடிப்பதில் பாட்டு விஷயத்தில் உள்ள பொருத்தம் நடிப்பு அம்சத்திலும் இருக்குமாயின், இந்தப் படம் அபார வெற்றி யடையும் என்பதில் சந்தேகமே இல்லை. குலோத்துங்கனாக நடிக்கும் ஸ்ரீ. எம். கே. கோபாலன், வெகு திறமையுடன் தன் பாகத்தை நடித்திருக்கிறார். கம்பர் திரும்புகையில், இவ்விருவருடைய மனோ நிலைமையை நன்கு வெளிப்படுத்தி யிருத்தல் வேண்டும். மற்ற நடிகர்களும் (ஸ்திரீகளைத் தவிர) செவ்வனே நடித்திருக்கிறார்கள். தாசியாய் நடிப்பவள் தன்னைச் சாந்தா ஆப்தே என நினைத்துக்கொண்டு விட்டதுடன் நின்றிருக்கிறதே யன்றி, அந்த அம்சத்தில் ஒரு துளிகூட அங்கு காணப்படவில்லை. ராணியாக நடிப்பவளுக்குச் சாதாரணக் குடும்பப் பெண்களுக்கு இருக்கும் கம்பீர பாவங்கூடக் காணப்படவில்லை. இவ்விரண்டு பாத்திரங்களுக்கும் உயர்ந்த நடிகைகளைப் போட்டிருந்தால், படம் இன்னும் சோபித்து விளங்கும்.

நடிப்பில் அம்பட்டதம்பதிகளுக்கு இதில் முக்ய ஸ்தானங் கொடுக்க யாரும் தயங்கமாட்டார்கள். நாவித வீரனாக நடிக்கும் எல். நாராயண ராவின் நடிப்பு தத்ரூபமாயும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்த முக பாவத்துடனும் அமைந்திருக்கிறது.

கதைப் போக்கில் இன்னும் கொஞ்சம் விறுவிறுப்பு இருந்தால் நன்றாயிருக்கும். கம்பரின் வாழ்வில் முக்கிய சம்பவங்களாகிய (1) ஔவைக்கும் கம்பருக்கும் நடந்த விஷயங்கள். (2) கம்பர் பொருளுக்காக இரண்டடி பாடியது (3) ராமாயணம் அரங்கேற்று முன் கம்பர்—ஹநுமார் சந்திப்பு. (4) ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதர் அர்ச்சகர் மூலமாகக் கட்டளையிட்டதன் பேரில், சடகோபரந்தாதி பாடி, பிறகு ராமாயணத்தை அரங்கேற்றியது முதலியவற்றைக் கதைப்போக்கில் விட்டுவிட்டதானது பெருங் குறையாகும்.

ஒலியும் ஒளியும் சில இடங்களைத் தவிர, மற்ற இடங்களில் வெகு அழகாயிருக்கின்றன. முக்கியமாக இப்படம் கிராமாந்திரத்துப் பெண்களும் கண்டு களிக்கத்தக்கதாக விருக்கிறது. கடைசி பாகம், எல்லோருடைய உணர்ச்சியையும் கிளப்பி ஆனந்தத்தை யுண்டாக்குகிறது.

கம்பர் செய்த கவிகளிலேயே இன்னும் சில பாடல்களைப் பாடச் செய்திருந்து மற்ற சாதாரணப் பாட்டுகளைக் கொஞ்சம் குறைத்திருந்தால் அழகா யிருந்திருக்கும். பாகவதரின் பாட்டுக்களும், சேர ராஜனுடைய பாட்டுக்களும் வெகு அழகாக இருக்கின்றன.

# வெளிநாட்டுச் செய்திகள்

---

## அயர் தேர்தல் முடிவு

டிவேலரா 77, காஸ்கிரேவ் 45, தொழிற்கட்சி 9, சுயேச்சை 7. எனவே, மற்ற எல்லாக் கட்சிகளேயும்விட டி'வேலரா கட்சிக்கு 16 அதிக ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. 1927-க்குப் பிறகு இவ்வளவு பெரிய மெஜாரிடி எந்தக் கட்சிக்கும் கிடைக்கவில்லை.

## யூதர்களுக்குத் தலை வேதனை

யூத முதலாளிகள் உட்பட தொழிற்சாலைகளை நடத்தும் எல்லோரும் ஜூலை 1-ந் தேதிக்குள், ஆரியர்களல்லாத சிப்பந்திகளை யெல்லாம் டிஸ்மிஸ் செய்துவிட வேண்டுமென்ற உத்தரவு இன்று பிரகடனமாயிற்று. இதற்கு முன் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளும் இதுவுமாகச் சேர்ந்து, அடுத்தவாரக் கடைசிக்குள் இங்குள்ள யூதர்கள் எல்லோருக்கும் பிழைப்பில்லாமற் செய்துவிடும்.

யூதர்கள் பார்க்குகளில் தென்படுவது ஜனங்களுக்கு இடைவிடாத ஆத்திரம் ஏற்படுவதற்கு ஹேதுவா யிருப்பதால், இனிமேல் யூதர்கள் பார்க்குகளுக்குள் வர அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## ஜப்பானிய விமானங்கள் அட்டகாசம்

இந்தோ - சீனவையும், சீன உள்நாட்டுப் பிரதேசத்தையும் இணைக்கும் பாதையில் 1250 மைல் தூரத்துக்கு ஜப்பானிய விமானங்கள் பறந்து விமான நிலையத்திலிருந்த 12 சீன விமானங்களை நாசம் செய்து விட்டனவாம்.

## "வெளிநாட்டிலிருந்து விமானங்கள் வாங்கோம்"

ஜூன் 15-ந் தேதியன்று பார்லிமெண்டில் விமானப்படை மந்திரி சர். கிங்ஸ்லி உட் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், இனிமேல் வெளிநாடுகளிலிருந்து விமானங்கள் வாங்குவதாக இப்போது உத்தேசமில்லையென்றும், கானடாவில் விமானங்கள் உற்பத்தி செய்வது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், ஆனல் ஒன்றும் முடிவு செய்யப்படவில்லையென்றும் சொன்னர்.

# யுத்தகிலி

## அமெரிக்கா :

### 4 பெரிய யுத்த கப்பல்கள் கட்டும்

தலைவர் ரூஸ்வெல்டைக் கடற்படை தளபதி அட்மிரல் லியாஹி பேட்டி கண்டார். நான்கு 35,000 டன் யுத்தக் கப்பல்கள் இவ் வருஷக் கடைசிக்குள் கட்டப்படுமென்று அவர் அறிவித்தார்.

## பிரிட்டன் :

### கிடங்குகளில் தான்யங்களைச் சேமிக்கும்

பூசாரத்தை மேம்படுத்தவும் கிருஷிகர்கள் ஆங்காங்கு தங்கள் கோதுமை மகசூலை சேமித்து வைக்கவும், யுத்த கால தேவையை உத்தேசித்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக விவசாய மந்திரி கூறினர்.

## துருக்கி :

### 60 லக்ஷம் பவுன் கடன் வாங்கும்

துருக்கி யுத்த தளவாடக் கடன் வசதி மசோதா பிரசுரமாயிருக்கிறது. பிரிட்டனில் யுத்த தளவாடங்களைத் துருக்கி வாங்குவதற்குக் கஜானுவிலிருந்து 60 லக்ஷம் பவுனைக் கடனாகக் கொடுக்க வேண்டும். 1952 ஜனவரி முதல் 1962 ஜனவரி வரை கூடுமான ஷாத்து வட்டியுடன் சேர்த்து 20 அரை வருஷத் தவணைகளில் துருக்கி, கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும். முந்தியே வேண்டுமானுலும் கடனைத் திருப்பிவிடுவதற்கு மசோதாவில் ஏற்பாடுகள் இருக்கின்றன.

## எகிப்து :

### ராணுவத்தைப் பெருக்கும்

“ராணுவத்தைப் பெருக்குவது நமது மகத்தான, புனிதமான கடமைகளில் ஒன்றெனச் சர்க்கார் கருதுகின்றனர். எகிப்து போராடி வந்த லட்சியமான சுதந்திரத்தை அடைவதற்கு அதுவே மிகச் சிறந்த சாதனமாகும்” என்று எகிப்திய பிரதம மந்திரி மாமூத் பாஷா கூறினர்.

## இந்தியா :

### ராணுவப்பயிற்சி வேண்டும்

சனுதன தர்ம மண்டலில் ஜூன் 20-ந் தேதி யன்று நடந்த வாலிபர்கள் கூட்டமொன்றில், ஸ்ரீ. வி. டி. சவர்க்கார், பேசியவை இவை.

"உலகில் பெரும்பான்மை நாடுகள் ஆயுத பலத்தை மிகவும் அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறபடியால், பலவீனமான தேசங்களை எந்த வல்லரசும் வம்புக்கென்று தாக்கக் கூடும். இந்தியர்கள் கோவில்களிலும் மசூதிகளிலும் பிரார்த்தனை செய்வதன்மூலம் படையெடுத்துவரும் ராணுவத்தை எதிர்க்க முடியாது. தேசம் வாழவேண்டுமானால், அது தேக பலமுள்ளதாகவும் ஆயுத பலமுள்ளதாகவும் இருக்கவேண்டும்."

**ஜப்பான் :**

பெரிய ராணுவ பட்ஜட்

நிதி மந்திரி, ஜப்பானின் 1938-39ஆம் பட்ஜெட்டைப் பிரசுரித்திருக்கிறார். அதன் விவரம் கீழே தரப்படுகிறது. வருமானம், 3,720 லக்ஷம் பவுன்; செலவு, 3,580 லக்ஷம் பவுன்; சென்ற வருஷத்தைவிட 200 லக்ஷம் வருமானம் குறைவு, செலவு 170 லக்ஷம் அதிகம். 2,830 லக்ஷம் பவுன் விசேஷ ராணுவ பட்ஜெட், மேலேயுள்ள கணக்கில் சேர்க்கப்படவில்லை.

**சைனா :**

போரைத் தடுக்க தீவிரமான ஏற்பாடு

வெள்ளத்தினால் போர் நின்றிருப்பதை அனுகூலமாய் உபயோகித்துக்கொண்டு, 7 லக்ஷம் சீனத்துருப்புகள் ஹாங்கோ தற்காப்புக்கு வேண்டிய அணி வகுப்புகளாக மாறி வருகின்றன. ஹாங்கோவுக்கு வெளியே 3 வரிசை அணி வகுப்புகள் உண்டு. புதிய இயந்திர சாதன பீரங்கிப் படைகள் உட்புற வட்டத்தைக் காத்துக்கொள்ளும்.

**பிரான்சு :**

முன்னெச்சரிக்கையான பல ஏற்பாடுகள்

யுத்தகால ரீதியில் தேசத்தில் தொழில்களையும், இதர வசதிகளையும் அமைக்க அதிகாரமளிக்கும் மசோதாவை, செனேட் ஏகமனதாக நிறைவேற்றியது. கடற்படைப் போர் முறை சம்பந்தமாக கடற்படை அதிகாரிகளுக்கு ஓரளவு சுதந்தரம் அளிக்கப்படுகிறது.

**ஆஸ்டிரியா :**

கட்டாய ராணுவ சேவை அமுல்

ஜெர்மனியிலிருப்பதுபோலவே ஆஸ்ட்ரியாவிலும் கட்டாய ராணுவ சேவை உத்தரவு அமுலுக்கு வரவேண்டுமென்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்துள்ளனர். யுக்த வயதடைந்தவர்கள் இரண்டு வருஷ கட்டாய ராணுவ சேவைக்கு வந்தாகவேண்டும்.

# உள்நாட்டுச் செய்திகள்

---

## டால்மியா சிமன்ட் தொழிற்சாலை

டால்மியா சிமன்ட் தொழிற்சாலையைச் சிந்து கவர்னர் சர். லான்ஸ்லட் கிரஹாம் ஜூலை 4-ந்தேதி திறந்து வைப்பார். இது தான் இந்தியாவிலேயே மிகவும் பெரியது. தினசரி 500 டன் சிமன்ட் தயாரிக்க முடியும்.

## துப்பாக்கி குறி பழக

துப்பாக்கிக் குறி பழகி, சுடுவதற்குப் பயிற்சியளிப்பதற்கு வார்தாவிலுள்ள கிராடாக் ஹைஸ்கூலுக்கு மாகாண சர்க்கார் அனுமதி கொடுத்து விட்டார்கள். இம் மாகாணத்தில் இத்தகைய அனுமதி கொடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை.

## பட்டமும் தேசபக்தியும்

"பட்டம் பெற்றால் தேச பக்தி போய் விடுமாக்கும்" என்கிறார் சமீபத்தில் சர் பட்டம் வாங்கின பர்மா உள்நாட்டு மந்திரி சர். பா-டன்.

## நித்திரை ஜ்வரத்தால் விபத்து

கீர்த் கிராமத்தில் 'நித்திரை ஜ்வரம்' என்ற ஒரு மர்மமான வியாதி ஜனங்களைக் கொள்ளை கொள்கிறது. ஒரு மாதத்திற்குள் இக்கிராமத்தில் 300 பேர்கள் மாண்டனர்.

இந்த நோய் கண்டவர்களுக்குத் தூக்கம் வருவதுபோல ஒரு விசித்திரமான உணர்ச்சி வரும். உடனே இவர்கள் மூன்று நாள் தூங்குகிறார்கள். கொஞ்சம் ஜ்வரமும் இருக்கிறதாம். பிறகு மாண்டு விடுகிறார்கள்.

"ஜ்வார்" என்ற தானியத்தை நன்கு தீட்டி சமைத்து உண்பதால் இவ்வியாதி ஏற்படுகிறதென, பராபரியாக பொது ஜனங்கள் பேசிக் கொள்வதைத் தவிர, 'இவ்வியாதி என்ன காரணத்தினால் வருகிறது? இதனை தடுக்க மருந்தென்ன?' ஆகியவைகள் இன்னும் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

## சமாதானப் படை

மகாத்மா காந்தி, 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதியிருந்தபடி சமாதானப் படை ஒன்று ஸ்தாபிக்க கராச்சி மேயர் ஸ்ரீ. ஹாத்திம் ஆலவி முயன்று கொண்டிருக்கிறார். மகாத்மா காந்தியின் விருப்பப்படி ஒரு சமாதானப் படை அமைப்பது சாத்தியந்தானென்றும், அவருடைய திட்டத்தைக் கராச்சி நிறைவேற்றி வைக்க வேண்டுமென்றும் மேயர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## நமது நாட்டின் வெற்றி

### ஆப்கன் சர்க்கார் பணிவு

ஆப்கன் பழங்களை விற்பதற்கும், வாங்குவதற்கும் ஏகபோக உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. இதை இந்திய வர்த்தகர்கள் ஆக்ஷேபித்தனர். இந்த உரிமையைக் கண்டித்துக் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. அந்த உரிமையை ஆப்கன் சர்க்கார் ரத்து செய்து விட்டதாக, ஜூன் 20-ந் தேதியன்று எல்லைப்புற கவர்னர், எல்லைப்புற வர்த்தக சங்கக் காரியதரிசியிடம் தெரிவித்தாராம்.

## தாயின் அன்பு

ஜூன் 21-ந் தேதியன்று முற்பகல் மதுரையிலிருந்து புறப் பட்டுச் சென்ற 105 நெ. ரயில் வண்டியில் சோழவந்தானிலிருந்து திருமங்கலம் சென்றுகொண்டிருந்த சின்னம்மாள் என்னும் ஸ்திரீயின் 2 வயது குழந்தை மதுரைக்கும் பசுமலைக்கு மிடையே கீழே விழவே, குழந்தையின் தாயார் அதைக் காப்பாற்ற பின்னாலேயே கீழே குதித்தாளாம்.

## டில்லியில் அடக்குமுறை

### தலைவர்களுக்கு வேண்டுகோள்

“காங்கிரஸ் மந்திரி சபைகளால் ஆட்சி புரியப்படும் மாகாணங்களில் ராஜீயக் கைதிகளெல்லாம் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், டில்லி மாகாணத்தில் இதுவரை ஒரு ராஜீயக் கைதிகூட விடுவிக்கப்படவில்லை. இதோடு மாத்திரமல்ல. இந்தியாவில் மாகாண சுயாட்சி அமுலுக்கு வந்த பின் அனேகர் டில்லியிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள்.

### விசாரணைக் கமிட்டி அவசியம்.

“சென்ற 12 மாதங்களில் டில்லியில் அடைக்கப்பட்டவர்கள், டில்லியிலிருந்து வெளியேற்றப் பட்டவர்கள், டில்லியில் கைது செய்யப்பட்டவர்கள் இவர்களின் ஜாப்தாவைத் தயாரித்து வருகிறோம். இதை உங்களிடம் சமர்ப்பிப்போம். இந்த விஷயத்தில் தலையிட்டு ஒரு விசாரணைக் கமிட்டியை நியமிக்குமாறும் அல்லது எங்கள் குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள சத்யாக்ரஹம் ஆரம்பிக்க அநுமதி கொடுக்குமாறும் உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்” என்று டில்லி ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர், காந்திஜி முதலிய தலைவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

## மந்திரி ராஜனின் நன்கொடை

பிரதம மந்திரி ஸ்ரீ. சி. ராஜகோபாலாசாரியர், கீழ்க்கண்ட செய்தியைப் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ளார்.

"டாக்டர் ராஜன் ஸ்ரீரங்கத்தில் தமக்குச் சொந்தமான கீழ்சித்திரை வீதியில் உள்ள வீட்டை மேற்படி புண்ணிய பூமியாகிய ஸ்ரீரங்கத்திலிருக்கும் சிறுமிகள் கல்வி கற்கும் பொருட்டு தானம் செய்து விட்டார் என்ற செய்தியை ஸ்ரீரங்கம் முனிசிபல் சேர்மனுக்குத் தெரிவிக்கும்படியாக என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஷை தர்மத்தைச் செய்த தங்களூர் வாசியாகிய ஸ்ரீ. டாக்டர் ராஜனின் உதாரண குணத்தைப் போற்றுவார்கள் என்று நம்புகிறேன். தவிர ஷை பாடசாலை தர்ம கைங்கர்யத்தைத் தங்களூர் வாசியின் உதாரகுணத்தை வரவேற்று, பாடசாலையை நன்கு பரிபாலித்து வர உதவி செய்வார்களென்றும் நம்புகிறேன்"

## விளையாட்டே வினையாயிற்று

சென்ற சனிக்கிழமை கிரிக்கட் விளையாடுகையில் நாஜிர் என்ற வாலிபன் மீது கிரிக்கட் பந்து பட்டதனால் ஆஸ்பதிரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பிரக்ஞை திரும்பிவராமலே ஆவி பிரிந்தது.

## ரூ. 15,000 அபேஸ்

ஹைதராபாத் (சிந்து) ஜில்லா போட்டு பாடசாலை குமாஸ்தா ஒருவனைக் காணவில்லை. ரூ. 15,000 மாயமாய் மறைந்தது. ஆடிட்டர் வந்து கணக்கைத் தணிக்கை செய்வார் என்று குமாஸ்தாவுக்கு அறிவிக்கப்பட்டது. மறுநாள் நபர் ஆபீசுக்கு வரவில்லை. சந்தேகத்தின் பேரில் போலீஸார் கணக்குப் புத்தகங்களைத் தணிக்கை செய்ய தொகை காணுமல் போயிற்று என்று தெரிகிறது. டி. எஸ். பி. தாமே இவ்விஷயத்தில் புலன் விசாரித்து வருகிறார்.

## ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் கொள்ளை

சுல்தான்கஞ்ச் ரயில்வே ஸ்டேஷனில், ஒரு கொள்ளைக்கூட்டம் மெயில் சேவகனிடமிருந்து தபால் பையைக் களவாடிச் சென்றது என்று பகல்பூரிலிருந்து டெலிபோன் செய்தி கிடைத்திருக்கிறது. கொள்ளைக்கூட்டம் அவனை லத்தியால் தாக்கி அடித்துப் போட்டுவிட்டு, ஒரு பையைத் தூக்கிச் சென்றதாம்.

## 'போலீஸ் பாரா வேண்டாம்'

சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது தங்கள் பாதுகாப்புக்காக இருந்துவரும் போலீஸ் பாராவை, ரத்து செய்துவிடுவது என்று ஒரிஸா காங்கிரஸ் மந்திரி சபை தீர்மானித்திருக்கிறது.

## சீனவிற்கு இந்திய வைத்தியப் படை

ஜுலை மாதம் முதல் வாரத்தில் சீனவுக்கு வைத்திய உதவி அளிக்க இந்தியாவிலிருந்து முதல் வைத்தியக் கோஷ்டி கிளம்பும். முதலில் 4 இந்திய சர்ஜன்கள் சீன போர் முனைக்குச் செல்வார்கள். இவர்கள் அங்கு சென்று சீன சர்க்காருக்கு ஊழியம் புரிவதுமின்றி இன்னும் எவ்வளவு வைத்தியர்கள் வேண்டுமென்பதையும் அவர்கள் கவனித்து விவரம் அறிவிப்பார்கள். இவர்கள் தகவல் கிடைத்தவுடன் அ. இ. கா. கமிட்டி இன்னொரு வைத்தியப்படை அனுப்ப ஏற்பாடு செய்யும்.

இந்த சர்ஜன்களுக்கு, சம்பளம் கிடையாது எனத் தெரிகிறது. இவர்கள் அங்கு போக இரண்டாவது வகுப்பு பிரயாண படிச் செலவும், வருஷத்திற்கு ரூ. 1,200 அலவன்சும் கொடுக்கப்படுவார்கள்.

இவ்விதம் போவதற்குத் தயார் என பலரிடமிருந்து அ. இ. கா. க. விற்குப் பல மனுக்கள் வந்திருக்கின்றன. டாக்டர் சுனீல் போஸுக்கு 15 மனுக்கள் வந்திருக்கின்றன. இவர்களில் இருவர் தேர்ந்தெடுக்கப்படலாம். பாக்கி இருவர், அ. இ. கா. க. வினல் தேர்ந்தெடுக்கப்படுவர். இம்மாத முடிவிற்குள் இது முடியும் எனத் தெரிகிறது.

## இந்திய தேசிய பத்திரிகைகள்
### வில்லிங்டன் பாராட்டு

"நான் வைஸ்ராயாயிருந்த காலத்தில், பல தேசபாஷை பத்திரிகைகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தது. இப்பத்திரிகைகள் மிகவும் தீவிரமான தேசீயக் கொள்கைகளைப் பரப்பிக்கொண்டிருந்தன. இருந்தாலும், எனக்கு எப்போதும் இவைகளிடம் கொஞ்சம் அனுதாபம் உண்டு. ஆனல், தேசீயப் பத்திரிகைகள் எந்தச் சமயத்திலும் நியாயமான அளவுக்கு மீறிப் போனது கிடையாது" என்று லார்ட் வில்லிங்டன் லண்டனில், "டைம்ஸ் ஆப் - இந்தியா" பத்திரிகையின் நூற்றாண்டு விழா விருந்தின்போது சொன்னர்.

கண்களுக்கும் செவிகளுக்கும்
ஓர் புதிய விருந்து

முதல் முறையாக தமிழ் பட உலகில்
முதல்தரமான மேனாட்டு ஆசிரியரின்
முதன்மையான நன்மை பயக்கும் நாவலை
மும்முரமாக பல அரிய காட்சிகளுடன் தயார்
செய்யப்பட்ட

# அற்புதத் தமிழ் பேசும் படம்

ரேய்நால்ட்ஸ் இயற்றிய இணையில்லாக் கதையைத்
தழுவிய திவ்விய திரைப்படம்

# போர்வீரன் மனைவி

தென்னாட்டு நடிக மணிகள்
எம். வி. கிருஷ்ணப்பா
மிஸ். டி. ஆர். காந்தாமணி
(மேனகா புகழ்)
இன்னும் திறமையுள்ள
நடிகர் பலரும் தோன்றும்
இணைப்பில்லாக் காக்ஷி.

வினையின் பயன்
பணத்திமிரின் கொடுமை
காதல் வேகத்தின் வீரம்
ராணுவ உத்தியோகஸ்தர்களின்
அட்டூழியம் - காமவெறியின்
கோரம்-குடியின் கேடு -
தரித்திரத்தின் கொடுமை -
கற்பின் வெற்றி
முதலியவைகளை
நிதர்சனப்படுத்தும் காக்ஷி.

இத்துடன்
(டி. எஸ். கிருஷ்ணவேணி நடித்த)

# அசட்டு வீரன் மனைவி

மேல்நாட்டு முறையில் முதல் தடவையாக
தயார் செய்த வேகம் நிறைந்த தமிழ்
நகைக் களஞ்சிய ஹாஸ்யப் படம்

இவைகளை உங்களூர் தியேட்டர்களில்
கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்.

எஸ்ஸெல் பிலிம் கம்பெனி
எழும்பூர், மதராஸ்.

ஸ்ரீ

# "பெண்களும் உலகமும்"

---

## எங்கள் ஓய்வு நேரம்

["ஜகன்மோகினி" ஆசிரியை ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் 24—6—38-ல் அகில இந்திய ரேடியோவில் பேசியது.]

" அன்னை தயையும் அடியார் பணியுமலர்ப்
பொன்னி யழகும் புவிப்பொறையும்—வன்னகலை
வேசி துயிலும் விறன்மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்."

என்று பெரியார்கள் பெண்ணின் கடமைகளை வரையறுத்துப் பெருமைபடுத்திக் கூறி இருக்கையில், பெண்கள் ஓய்வு நேரங்களை வீணாகக் கழிக்கின்றார்கள் என்கிற அபவாதம் பொருந்துமா! இத்தனை பாரங்களையும் வகித்து நடத்தும் சக்திவாய்ந்த பெண்கள் எப்படிச் சோம்பேறிகளாய் இருக்க முடியும்? மேற்குறித்த பாட்டில் கண்டுள்ளபடி பண்டைய காலம் முதல் பெண்மணிகள் நடத்தியே காட்டி இருக்கிறார்கள். இதற்கு அத்தாட்சி ரஜபுத்திர வீரப் பெண்மணிகளின் சரிதைகளே போதுமல்லவா?

லக்ஷ்மிதேவி என்கிற ஓர் பெரிய குடும்பத் தலைவி ஆறு குழந்தைகளுக்குத் தாயாயும், தன் பதிக்கு மனங்கோணாமல் சேவை செய்தும் தன் ஓய்வு நேரத்தில் அற்புதமான சட்ட புத்தகம் கூட எழுதியிருக்கிறாள். அதேபோல் கவித் திறமை வாய்ந்தவர்கள் அழியாத பொன்போன்ற பாக்களை எழுதி, புதையல் போல் நமக்கு உதவி இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி இங்கு ஏன் சொல்ல வேண்டும் எனலாம்.

அத்தகைய பெண்மணிகளின் இனத்தைச் சார்ந்தவர்கள் இக்காலத்திலும் அந்த வாசனையுடன் பலவிதமாகத் தம் ஓய்வு நேரங்

களைப் பயன்படுத்துகிறார்கள் என்கிற பெருமையைத் தெரிவிக்கத்தான் சொன்னேன். ஒவ்வொரு பெண்ணும் தன் வீட்டிற்கு ராணியாயும், கணவனுக்கு மந்திரியாயும், பணியாளாயும் விளங்குகிறாள். படித்தும், அனுபவ அறிவும் பெற்ற சில பெண்மணிகள், தம் கணவன் வைத்தியராயின் தாம் நர்ஸாகவிருந்து ஒத்துழைக்கிறார்கள். வக்கிலாயின் அவர்களுக்குச் சமயோசிதமான புத்தகங்களை எடுத்துக் கொடுத்தும், விஷயங்களிலும்கூடச் சிலர் கலந்துகொண்டும் பயன்படுவதையும் பார்க்கிறோம். புருஷன் எழுத்தாளனாயிருந்தால், அதற்கும் சில புத்திசாலிப் பெண்கள் கூட இருந்து உதவி செய்கிறார்கள். இதுபோல, இன்னும் எத்தனையோ இருக்கின்றன. இவைகளெல்லாம் "விறன்மந்திரி மதியும்" என்பதற்குப் பொருத்தமா யிருக்கின்றனவல்லவா?

கிராமத்திலுள்ள குடியானப் பெண்களுக்கு ஓய்வு என்பதே கிடையாது. சாதாரணப் பெண்களும் ஓய்வு நேரத்தில் இலை தைத்தல், புளிக் கொட்டை வாங்குதல், தானிய காலங்களில் தானியங்களை உலர்த்தி எடுத்தல், துவரை முளைக்கட்டி உடைத்தல், மாடு கன்றுகளைத் தாமே பிரத்தியேகமாகப் பார்த்தல் முதலிய வீட்டு வேலைகளைச் செய்து வருவதை இப்போதும் பார்க்கிறோம்.

கிராமத்திலேயும் கொஞ்சம் படித்த பெண்கள் புராண இதிகாஸ புத்தகங்களைப் படித்து, தாங்கள் சந்தோஷப்படுவதோடு நிற்காமல், பிறருக்கும் படித்துக் காட்டி மகிழச் செய்கிறார்கள். இன்னும் கொஞ்சம் அதிகம் படித்தவர்கள், பத்திரிகைகளைப் படித்து உலக விஷயங்களையும், சமூக சீர்திருத்த விஷயங்களையும் நன்றாக அறிந்து, கால தேச வர்த்தமானத்திற்குத் தகுந்தபடி தம் குடும்பத்தையும் சீர்திருத்திக்கொண்டு, அந்தக் கிராமத்து ஜனங்களும் அறிந்துகொள்ளும்படிச் செய்வதோடு, தங்களிடம் வேலை செய்யும் பணியாட்களுக்குப் புத்தி சொல்லி, 'கள்ளைக்குடித்துக் கடனாளியாகாதீர்கள்; கசடனாகாதீர்கள்' என்று போதிப்பது வெகு சகஜமாக நடக்கிறதை நாளையும் கிராமத்தில் பார்க்கலாம். அதேபோல வேலைக்காரப்பெண்களிடமும் அவர்களிடம் வேலையை வாங்கியபடியே, 'கணவனை மதியாமலும், அலக்ஷியம் செய்தும் நடக்காதே; அவன் வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்; வீணாக

அவனை உபத்திரவிக்காதே. அவனைக் குடிக்காமலிருக்கும்படித் தடுத்து அன்புடன் நடத்து' என்றெல்லாம் போதிக்கிறார்கள்.

நகரத்துப் பெண்மணிகள், தம் ஓய்வு நேரங்களைக் கழிக்க அனேகவிதமான வேலைகள் இருக்கும்போது எப்படி வீணாக பொழுதைக் கழிக்கக்கூடும்? சிலர் தம் வீட்டுக்கான துணிமணிகளைத் தாமே மெஷினில் தைத்துக்கொள்கிறார்கள். விதவிதமான பூவேலைகளும், தலையணை உரை, மேஜை விரிப்பு, கர்டன் க்ளாத், சவுக்கங்கள், குழந்தைகளுக்குக் கம்பிளி நூலால் மேஜோடு, குல்லாய், சட்டை முதலியவைகளைச் செய்வதில் அநேகர் ஈடுபடுகிறார்கள். ஜிகினா வேலைகளும், துணியில் இழை எடுத்து விதவிதமான தையல் வேலைகளும் அழகாகப் பலர் செய்கிறார்கள். பிரம்பு, ஓலை, நெல்லுமணி முதலியவைகளால் கூடை, தட்டு, பெட்டி முதலிய பலவித சாமான்களைச் செய்கிறார்கள் சிலர்.

மணிகளால் தோரணங்களும், விளக்குகளுக்கு உபயோகமான கவர்களும், புட்டியில் பலவிதமாக பொம்மைகளுடன் மணிகளால் செடி, கொடி, புஷ்பம் முதலியனவும் அருமையாய் செய்வதில் சிலர் சாமர்த்தியசாலிகள். ப்ளைவுட்டில் விசித்திரமான வேலைப்பாடுகளுடன் கடியாரப் பெட்டிகள், போட்டோ பிரேம்கள் முதலியவைகளைச் செய்கிறார்கள் சிலர். நவராத்திரி கொலுவுக்காகக் கையினால், களிமண்ணாலும் தகரங்களாலும் காகிதங்களாலும் வீடு போலும், ரயில்வே ஸ்டேஷன்கள்போலும், குடிசைகள் போலும், நாடக மேடைகள்போலும், நந்தவனங்கள்போலும் இன்னும் எத்தனையோ விதமான ஆச்சரியமான வேலைகளும் செய்து வைக்கும் பெண்மணிகள் உண்டு. இதுபோல் ஓய்வு நேரங்களை ஸ்திரீகள், எத்தனையோ முறைகளில் பயன்படுத்தலாம்.

மேற் குறித்தவைகள் எல்லாம் தம் சொந்தத்திற்கான வேலைகள். அம்மட்டும் நிற்காமல், பிறருக்கு உதவும்படியான முறையிலும் எத்தனையோ செய்யலாம். தனது தாய்ப்பாஷையைத் தவிர இதரபாஷைகளாகிய தெலுங்கு, ஹிந்தி, சம்ஸ்கிருதம், இங்கிலீஷ், கன்னடம், மலையாளம் முதலிய பலவிதமான பாஷைகளில் தங்களுக்கு இஷ்டமானவைகளைக் கற்றுக் கொள்ளலாம். தெலுங்கு கற்றதன் பயனால் சாஹித்திய சுத்தமாயும், அர்த்த புஷ்டியுடன்

பதச்சேதமில்லாமலும் ஸ்ரீ த்யாகராஜரின் கீர்த்தனங்களையும், மற்ற கீர்த்தனைகளையும் தாம் பாடுவதோடு, அதைப்பற்றிப் பிறருக்கும் சொல்லி உதவக்கூடும். பல பாஷைகளிலுள்ள சாரமான விஷயங்களை மொழிபெயர்த்து வாசகர்களை மகிழ்விக்கலாம்.

செல்வம் நிறைந்த சில சீமாட்டிகள் தொழில் முறையில் அல்லாமல் தாம் கற்றறிந்துள்ள பாஷைகளைச் சிறிய ஏழைப் பள்ளிக்கூடங்களில் இலவசமாக ஏன் கற்றுக் கொடுக்கக்கூடாது? தம் வீட்டிலேயே சில பெண்களைச் சேர்த்துப் பாஷாபிவிருத்தியின் பொருட்டு கற்றுக்கொடுக்கலாம். இம்மாதிரி கற்றுக்கொண்டு எத்தனையோ பெண்கள் முன்னுக்கு வரலாம்.

அதேபோல் சங்கீதத்திலும் பலவிதம் இருக்கிறதல்லவா? கர்னாடக சங்கீதம், தேசீயங் கலந்த சங்கீதம், ஹிந்துஸ்தானி, கிராமாந்தரப் பாடல்கள், கல்யாண காலத்தில் பாடும் நலங்கு, ஊஞ்சல் முதலிய பத்ததிப் பாடல்கள், உயர்ந்த வித்வாம்சம் நிறைந்த கச்சேரிப் பாடல்கள் ஆகிய இத்தனை விதங்களிருக்கின்றன. இவற்றிலும் நன்கறிந்த சில பெண்கள், தமக்கு வந்த பாடல்களை பிறருக்குச் சொல்லிக் கொடுக்கவில்லையா?

வித்வான்களின் கச்சேரிகளை எத்தனைதரம் கேட்டாலும் ஒரே மாதிரியாக அமைவதும், மனப்பாடமாகக் கற்பதும் சாத்தியமில்லையாதலால், பிளேட்டுக்கள் வந்தபிறகு ஒய்வு நேரங்களில் திரும்பத் திரும்ப அவைகளை வைத்து மனப்பாடம் செய்கிறார்கள். அதையே தம் குழந்தைகளுக்கும், பிறருக்கும் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

நாலு பெண்களாய்ச் சேர்ந்து பேசுவதைப் பார்ப்போருக்கு வீண் அரட்டை யடிப்பதாகத் தோன்றலாம். அம்மாதிரி கூட்டங் கூடிப் பேசுவதிலிருந்தே அனேக விஷயங்கள் வெகு சுருக்கமான வழியில் பிரசாரமாகின்றன. அதாவது, சில வருடங்களுக்கு முன்பு ஸினிமா, டாக்கி என்றால், அநேகமாய் பெண்களுக்கு அடியோடு தெரியாமலிருந்தது. நாடகமும் அப்படியேதான். ஆனால், இப்போதோ ஸினிமா, நாடகம் முதலியவைகளைப் பார்த்துவிட்டு வந்த பெண்கள் ஒன்று கூடிப் பேசும்போது அவற்றைப்பற்றிய குற்றங் குறைகளைக் கூறி, சீர்திருத்த வேண்டிய யோசனைகளையும் பற்றித் தர்க்கிக்கிறார்கள்.

இதிலிருந்து அவர்களின் மனோபாவமும், கலாபிமானமும், கற்பனைசக்தியும், ஆராய்ச்சிபுத்தியும், விரிவடைகின்றன. இத்தகைய யோசனையினால் கதைகள் எழுத வேண்டுமென்ற ஆவலும் கூட உதயமாகிறது. இம்மாதிரி வாய்ப்பேச்சினால் கொடுக்கும் அபிப் பிராயமே வெகுஜனவாக்காகவும், விமர்சனமாகவும், சீர்திருத்த மாகவும் முடிகிறது.

இதேபோல் பாட்டுக் கச்சேரிகள் கேட்ட பிறகு அதைப் பற்றிப் பேசும்போது சங்கித ஞானம் விருத்தியாவதோடு வித் வான்கள் பாடியமாதிரியே பாடிக் காட்டவும், அப்யசிக்கவும் தைரியம் உண்டாகிறது. ராக ஞானம், ஸ்வர ஞானம், தாள ஞானம் முதலியவைகளும் தாமாகவே விருத்தியாகின்றன. இம்மாதிரியே விதவாவிவாகம், வரதக்ஷிணையின் கொடுமை, கிழவர்கள் அநியாய மாக பலதாரம் விவாகம் செய்து கொண்டு, சிறிய பெண்களைத் துன்புறுத்துவது, ஒரு மனைவி இருக்கையில் வேறு ஒருத்தியை மணப்பது, சீர்வகைகளுக்காகப் பெண்ணைத் தள்ளி வைப்பது பெண்கள், வீட்டுச் சாமான்களைச் சில்வானம் விற்று, புருஷனை, தண்ட குடியாக்குவது, புருஷனுக்குத் தெரியாமல் சீட்டுக் கட்டி பெண்கள் மோசம் போவது முதலிய பல முக்கியமான விஷயங் களைப்பற்றிக் கண்டித்தும், அவைகளைத் தைரியமாக எதிர்க்க வேண்டும் என்றும் நாலுபேர் கூடிப் பேசிக் கொள்வார்களே யானால், இது வீண் வம்பளத்தலாகுமா? இது முக்கியமான சிறிய பிரசாரமென்றே சொல்லலாம்.

இம்மாதிரி சாதாரணமாக மாதர்கள் கூடி நல்ல விஷயங்களைப் பேசுவதனால், அவைகள் சிரமமின்றித் தாமாகவே சில இடங்களில் அமுலுக்கும் வந்துவிடுகின்றன. இந்த வாய்ப் பிரசாரம் செய்யும் போதும் அவர்களின் கைகள் சும்மா இருக்குமா? சில கைகள் அப்பளம் இடும். சில கைகள் நூற்கும். சில கைகள் நூலினாலான வேலைகளைச் செய்யும். சில கைகள் பூஜா விளக்குகளுக்குப் பஞ்சு திரித்துக்கொண்டிருக்கும். இவைகள் எல்லாம் வீண் பொழுது போக்கு என்று சொல்லமுடியுமா?

உயரிய நீதிகளையும், சமூகத்திற்கு உதவக்கூடிய பல விஷயங் களையும் புகுத்தி எத்தனையோ பெயர்கள் அருமையான கற்பனைக்

கதைகளை எழுதுகிறார்கள். சாஹித்ய ஞானமும், கவி எழுதும் ஞானமும் உள்ள பெண்கள் பலவிதமான கும்மிப் பாடல்களையும், சரித்திரக் கீர்த்தனைகளையும், தனிக் கவிகளையும் எழுதி, நம்மை மகிழச் செய்யவில்லையா ?

அனேக ஊர்களில் மாதர்களின் சங்கங்கள்—கிளப்புகள்—என்று ஸ்தாபித்து, அதன் மூலம் எத்தனையோ பேர் உழைக்கிறார்கள். சங்கங்களின் மூலம் கதம்பக் கொண்டாட்டங்கள் நடத்தி, பணம் வசூலித்து வெள்ள நிவாரண நிதிக்கும், பூகம்ப நிவாரண நிதிக்கும் குப்பங்கள், சேரிகள் முதலியவைகளுக்கும், ஏழை அனாதைச் சிறுமி சிறுவர்களுக்கும் உதவுகிறார்கள்.

அச்சங்கங்களின் மூலம் சேரிகளுக்கும், குப்பங்களுக்கும் சிலர் சென்று அவர்களுக்குச் சுகாதாரங்களைப் போதித்தும், அவர்களின் குழந்தைகளைக் கட்டாயமாகப் படிக்கவைக்க வேண்டுமென்றும் வற்புறுத்தி, அவர்களுக்கு உதவியும் செய்கிறார்கள். புடவைகள், பாவாடைகள், ரவிக்கைகள், சொக்காய்கள் முதலியவைகளை அங்கத்தினர்களிடமும் பிறரிடமும் சேகரித்து, அந்த ஏழைகளுக்கு உதவுகிறார்கள்.

சங்கத்தில் மாதம் ஒரு முறையோ, இருமுறையோ உயர்தர உபந்யாசங்களை வைத்து நல்லவிதமாகப் பொழுது போக்கு உண்டாக்குகிறார்கள். அதேபோல் சில கிளப்புகளில் தர்க்க சபைகளை ஏற்படுத்தி, அதில் பல விஷயங்களைப்பற்றித் தர்க்கிக்கும் முறையில் மாதர்கள் நன்கு பேசப் பழகுகிறார்கள். அதே தர்க்கத்தின் மூலம் தற்காலம் பெண்களுக்காக வேண்டிய அதியவசியமான விஷயங்களைச் சட்டமாக்கும் யோசனையைச் சட்டசபையிலுள்ள ஸ்திரீ அங்கத்தினருக்கு எடுத்துக் கூறலாம். மனச்சந்துஷ்டியும், தேகாப்யாசமும் உண்டாவதற்காக பேட்மிண்டன், டென்னிஸ் முதலிய விளையாடுவதும் இப்போது சகஜமாகிவிட்டது. சில சங்கங்களில் பாடசாலையும் வைத்து ஏழைச் சிறுமிகளை ஆதரிக்கிறார்கள். பெண்களின் நன்மைக்கான சில முக்கிய விஷயங்களைச் சட்டமாகச் செய்வதற்கு எத்தனையோ படித்த பெண்மணிகள் பாடுபடுகிறார்கள். சமூக சீர்திருத்தத்திற்காகப் பலவித கட்டுரைகள் எழுதியும், உபந்நியாசங்கள் செய்தும் உழைக்கிறார்கள்.

கிளப்புகளுக்குப்போகாத எத்தனையோ பெண்கள், கோவிலின் நந்தவனத்திலுள்ள புஷ்பங்களைப் பகவானுக்கு மாலையாகக் கட்டி சமர்ப்பிக்கவும், கோவில்களில் கோலமிடவும், பிரதக்ஷணங்கள் செய்யவும், அங்கு நடக்கும் காலக்ஷேபங்களுக்குப் போகவும், வீட்டிலேயே பக்தி நிறைந்த மாதர்களைச் சேர்த்துக் கொண்டு பஜனைகள் செய்யவும், அவர்களுக்குள்ளேயே சத் விஷயங்களை உபந்யசிக்கவுமான வேலைகளைச் செய்து மகிழ்கிருர்கள். இதுபோன்ற அருமையான வேலைகள் செய்வதெல்லாம் ஓய்வுநேரங்களின் பலனல்லவா?

வீண் பொழுது போக்கிக் காலத்தை வியர்த்தமாக்கும் பெண்களும் சிலர் இல்லை என்று நான் கூறவில்லை. மார்க்கமில்லாமலும், சரியான வசதி இல்லாமலும் இருக்கும் பெண்மணிகள்தான் வீண் பொழுது போக்கமுடியும். அவர்களுக்கும் மேற்கூறிய விஷயங்களில் ருசியை உண்டாக்கிவிட்டால் ஒருகாலும் வீணுகக் காலத்தைக் கழிக்கவே மாட்டார்கள். கூடிய சீக்கிரத்திலேயே "பிரசார சங்கம்" என்று பிரத்தியேகமாகச் சங்கங்களை ஸ்தாபித்து, அதன் மூலம் சில பெண்மணிகள் வெளிக் கிராமங்களுக்குச் சென்று கிராமவாசிகளுக்கு உபயோகமான விஷயங்களைப்பற்றி எடுத்துச் சொல்லலாம்.

உலகம் தோன்றியது முதல் உலகத்தில் மக்கள் விருத்திக்குக் காரணம் பெண்களால்தான் என்பதை யாரேனும் மறுக்க முடியுமா? அதோடு உலகத்தில் சகல விதமான போக பாக்யங்களுக்கும் பெருமையளிக்கும் ஆதிமூலங்கள் பெண் தெய்வங்களல்லவா? செல்வத்தின் அதிபதி ஸ்ரீலக்ஷ்மி; கல்விக் கடலில் மக்களை மகிழ்விக்கும் தேவதை சாக்ஷாத் ஸரஸ்வதி, மக்களுக்கு அழியாத சக்தியைக் கொடுப்பவள் ஆதி பராசக்தி; மக்களின் பாபச் சுமையை நீக்கிப் புனிதத்துவம் கொடுப்பதற்காகவே தோன்றியுள்ளவர்கள் கங்கை, யமுனை, காவேரி முதலிய நதிதேவிகளாகும். எத்தனை பாரங்களையும் தாங்கி பொறுமையின் பெருமையை மக்கள் அறியச்செய்யும் தாயும் பூமாதேவியாகும். ஆகையால், இத்தனை மகிமைகளின் இருப்பிடமாகிய பெண் தெய்வங்கள், தம் இனத்தில் பிறந்துள்ள பெண்களின் மீது குறைகளின்றி, அவர்களின் லக்ஷ

யங்கள் ஜெயம் பெற்று ஓங்கவும், புகழ்தேவியின் அருள் தாங்கவும் கிருபை செய்வார்கள் என்பது எனது துணிபு.

இதிலுள்ள குற்றங்குறைகளை மன்னிக்க வேண்டுகிறேன்.

பெண்ணின் பேதமை வீழ்க!

பெண்ணின் பெருமை வாழ்க!

**வந்தனம்.**

## ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

### எழுதிய நாவல்கள்.

**ரூ. 2—8**
வைதேகி (2-பாகங்கள்)
ராதாமணி (2-பாகங்கள்)
சாருலோசனை
பத்மசுந்தரன்
காதலின் கனி

**ரூ. 2**
நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

**ரூ. 1—12**
சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

**ரூ. 1—8**
சோதனையின் கொடுமை

**ரூ. 1—4**
பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப் பெண்
வாழ்க்கையின் நாதம்

**ரூ. 1**
சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்

**அணா 14**
கோபாலரத்னம்
புத்தியே புதையல்

**அணா 12**
கதம்பமாலை

**அணா 10**
பட்டமோ பட்டம்

**அணா 8**
நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
மகிழ்ச்சி உதயம்

**அணா 6**
பக்ஷமாலிகா

**அணா 4**
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன்
உளுத்த இதயம்

## 11

ஒவ்வொரு நிமிடமும் சுரேந்திரனுடைய மனத்தில் ஆயிரக்கணக்கான தேள் கொட்டுவதுபோன்ற உபத்திரவம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அவனுடைய மனத்தின் உண்மை நிலையை அறியாத பெற்றோரும் அலமுவும் ஏதோ அவனுக்குத் தேக அசுகமென்று தீர்மானமாக நினைத்துவிட்டார்கள்.

கண்ணப்பன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு, அந்த அறைப் பக்கம் போவதைக் காண சுரேந்திரனின் வயிற்றுக்குள் ஆயிரம் பாணங்கள் புகுந்து துளைப்பதுபோன்ற சகிக்க வியலாத சங்கடம் உண்டாகியது. தானே சென்று சொல்லிவிடலாமாவென்றும் நினைக்கிறான். அடுத்த நிமிடம் அவனைத் திகிலும் பயமும் வெட்கமும் ஒன்று கூடித் தடுக்கின்றன. தாயார் இவனைப் பார்த்த ஒரு பார்வையானது, அவளுடைய புத்திர வாத்ஸல்யத்தையும் இவனுக்கு என்ன உடம்போ என்கிற ஆவலையும் விளக்கிக் காட்டியது.

இத்தகைய விலையிலா மாணிக்கம் போன்ற அன்பையுடைய தாயாருக்குத் தான் செய்து விட்ட காரியத்தின் அவக்கேடு தெரிந்து விடுமாயின், அவள் மனம் அடுத்த வினாடி என்னவிதமாக மாறிப் போய்த் தன்மீது கசப்பும் வெறுப்பும் உண்டாகுமோ என்பதை நினைக்கையில், விவரிக்க வியலாத வேதனையோடு பெருங்கல்லைப் போல் அவன் நெஞ்சில் வந்து அழுத்துகிறது.

கண்ணபிரான் சாப்பிட்டு விட்டுத் தன்னறையில் சென்று அப்பாடாவென்று சற்றுப் படுத்தார். சுரேந்திரன் தத்தளித்த இதயத்துடன் அந்த அறைப்பக்கம் வருகிறான். மனம் துணியாமையினால், மீண்டும் காலை இழுத்துக் கொள்ளுகிறான். தாயாரிடத்திலாவது தான் செய்துள்ள தவறுதலைக் கூறி விடலாமென்று அப்பக்கம் போகிறான். வயிற்றில் பகீரென்பதால், மீண்டும் முன் வைத்த காலைப் பின் வைக்கிறான்.

கண்ணபிரான் படுத்திருந்த படியே, "அலமு! பெட்டியைத் திறந்து பணங்களை எடுத்து 5 ரூபாய் நோட்டுக்களையும், 10 ரூபாய்

நோட்டுக்களையும், ரூபாய்களையும் தனித்தனியே எண்ணி வையம்மா! இன்று சாயங்காலத்திற்குள் கொண்டு கட்டியாகவேண்டும். தலைச் சுமையாக விருக்கிறது. ஏற்கெனவே ஆபீஸில் ஒருவன் செய்து விட்ட வேலையினால் மற்ற எல்லோர்மீதும் மிக உஷாராயும் கண்டிப் பாயுமிருக்கிறார்கள். இனிமேல் நான் அன்றாடம் வசூலாவதை அவ் வப்போது கட்டித் தொலைத்து விடலாமென்று தீர்மானித்து விட்டேன்" என்றார்.

இவ்வார்த்தை சுரேந்திரனின் காதில் காய்ச்சிய ஈயத்தைப் போல் விழுந்ததும் நிலையே புரண்டது. அலமு பெட்டியைத் திறக்கும் ஓசையைக் கேட்கும்போது செம்மட்டியால் இவன் மண் டையில், 'படார் படார்' என்று அடிப்பது போலிருக்கிறது. சில விநாடிகள் அப்படியே மூர்ச்சித்து விட்டான். அலமு கண்ணிய மான குரலில், "அப்பா! இன்று நீங்கள் பணத்தைக் கட்டவேண்டு மென்று நேற்றே சொன்னீர்களல்லவா! அதனால் இன்று காலையே தனித்தனியே எண்ணிக் கட்டி வைத்திருக்கிறேன்" என்று கூறிக் கொண்டே நோட்டுக்கள் ரூபாய்கள் முதலியவற்றை எடுத்து வைத்தாள். தான் பையில் கட்டிவைத்த 100 ரூபாய் நோட்டுக் களைக் காணாதது கண்டு திடுக்கிட்டவளாய்ப் பெட்டி முற்றிலும் தேடினாள்.

இவள் ஏதோ தேடுவதையும் பரபரப்படைவதையுங் கண்ட கண்ணபிரான், "அலமு! என்னம்மா தேடுகிறாய்? ஏன் முகத்தில் இத்தனை பீதி?" என்று கேட்டவாறு படுக்கையை விட்டு எழுந்தார். அதற்குள் அலமு பதைத்த முகத்துடன், "அப்பா! காலையில்தான் 500 ரூபாய்க்கு 100 ரூபாய் நோட்டுக்களாக 5 தனியே எண்ணி வைத்தேன்; அந்தப் பையே காணவில்லையே அப்பா! என்ன வேடிக்கை இது" என்று திகிலும் பயமும் கலந்த குரலில் கூறினாள்.

கண்ணபிரானும் அலறிப் போய் சடக்கென்று எழுந்து, "என்ன என்ன? 500 ரூபாயைக் காணவில்லையா! சரியாய்ப் பாரு. அலமு! இதென்ன இடி இடித்ததுபோலப் பேசுகிறாயே?" என்று கூறியவாறு, தானும் எழுந்து பெட்டியை முற்றிலும் தேடினார்.

பணத்தைக் காணுததால், அவர் வயிற்றில் செய்யும் சங்கடம் கூறவே முடியவில்லை. "அலமு! நீ சரியாக எண்ணி வைத்தாயா? ஞாபகமிருக்கிறதா! சற்று யோசித்துப் பாரு" என்ருர். அவர் முகத்தில் ஈயாடவில்லை.

அலமு :—என்னப்பா அப்படிக் கேட்கிறீர்கள்? நான்தானே நம்பர் முதல்கொண்டு எழுதி வைத்துத் தனி கவரில் போட்டுவைத்தேன். எப்படிப் போய்விடும்? மற்ற சகலமான பொருளும் இருக்கையில், இதுமட்டும் எப்படிக் காணுது போய்விட்டது!

ராஜம் :—அலமு! சத்தம் போட்டுப் பேசாதே. நம்ம வீட்டு இந்த ரகஸ்யம் வெளியில் தெரியவேண்டாம். வீண் சந்தேகமும் கலாட்டாவும் ஆகிவிடும். இது அயல் திருடன் திருடியதாகத் தெரியவில்லை. பூட்டியது பூட்டியபடியே இருக்கிறது. 500 ரூபாயைத் தவிர, மற்றது வைத்தபடியே இருப்பதால், உளவறிந்த கள்ளன் தான் எடுத்திருக்கவேண்டும். சற்று நிதானித்துப் பாருங்கள்.

அடுத்த அறையில் துவண்டுபோய் கிடக்கும் சுரேந்திரனின் காதில் இங்கு நடக்கும் வார்த்தைகள் விழ விழ, அவனுடைய சப்த நாடிகளும் அடங்கிக்கொண்டே வருகின்றன. மனமோ நிலை இடங்கொள்ளாது துடிக்கிறது. தான் இத்தனை நாளாய் வெகு உத்தமன் என்ற பெயரை வாங்கியதும், பெற்ருேருக்கு மகா யோக்கியமான பையன் என்ற நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்ததும் அரை விஞடியில் படுசூரணமாய்ப் போய்விடும்படி எவ்விதம் தான் களவாடினேன் என்று கூறுவது. அவ்விதம் கூறி அவமானப் பட்டுப் பெற்ருேரே வெறுக்கும்படியாகப் பிழைப்பதைவிட தான் எங்காவது சொல்லாமல் ஓடிப்போய்த் தற்கொலை செய்துகொள்ளலாம் என்ற எண்ணமே பெரும்பாலும் போராடுகிறது.

அடுத்த நிமிடம், "சீச்சீ! இதுவா உத்தமனுக் கழகு. பச்சாத் தாபத்தினுல் இழி தொழிலான திருட்டு வேலையும் செய்துவிட்டுப் பெற்ருேரை ஆபத்தில் சிக்க வைத்துவிட்டு, ஓடுவதும் இறப்பதுமா யோக்கியம். சீச்சீ! அப்படிச் செய்யாதே. உன்னுடைய கடமை அதுவல்ல. நீ நல்ல எண்ணத்துடன் தீய காரியத்தைச் செய்துவிட்டாய். அதற்கு உன் மனத்தைத் திறந்து கூறி மன்னிப்பு

183024

பெறுவதும் அல்லது தண்டனை பெறுவதுந்தான் உசிதம். அதை விடுத்து வீணுகப் பதருதே" என்று அவன் மனமே கூறுகிறது.

அதற்குள் அலமு, "அப்பா! இது கட்டாயம் திருடன்தான் கொண்டுபோயிருக்கிருன். இன்னும் கொஞ்சம் பணத்தையும் ஒளித்து, உள்ளேத் தாறுமாருக வைத்துவிட்டுக் கள்ளன் வந்ததாகப் பெரிய கலவரம் செய்துவிடலாமா! அல்லது தீப்பிடித்து எரிந்து விட்டதாகத் தீயை வைத்துவிடலாமா வென்று மெல்லிய குரலில் யோசனை கேட்ட வார்த்தையும் சுரேந்திரனின் காதில் விழாம லில்லை.

கண்ணபிரானின் உயிரே உடலை விட்டுப் பெரும்பாகமும் போய்விட்டது போலாய்விட்டது. இப்போதுதான் ஆபீஸில் ஒருவன் அகப்பட்டிருப்பதால், இனி எதைச் செய்தும் பலனில்லை யம்மா! முக்கியமான நோட்டுக்கள் வெளியே இருப்பதால், அதன் நம்பரைக்கொண்டு கண்டுபிடித்துவிடுவார்கள். இது ஏதோ அனர்த் தத்திற்குத்தான் இம்மாதிரி விபரீதம் நடந்திருக்கிறது. இந்தச் சோதனை எந்தமட்டும் கொண்டு விடுமோ தெரியாது. அலமு! எனக்கு மயக்கம்வரும்போலிருக்கிறதே. இந்த பெரிய அவமானத் தைத் தாங்கி உயிர் வாழ்வதைவிட என்னுயிர் இந்நிமிடமே போய் விட்டால், மிக்க சந்தோஷமாகவிருப்பேன். தீ வைப்பது வீட்டுக்கு மட்டுமல்ல. எனக்கும் சேர்த்து வைத்துக்கொண்டால் கவலை ஒழிந்துவிடும் என்று நினைக்கிறேன். என் வயிற்றில் செய்யும் சங் கடத்தைப் பார்த்தால், இது சாமான்ய நிலைமைக்கு வரும் என்று தோன்றவில்லை" என்று கூறுவதைக் கேட்ட சுரேந்திரனுல் அதற்கு மேல் தாங்க முடியாமல் அலறியடித்துக் கொண்டு எழுந்து ஓடி வந் தான். தன் நிலை கலங்கிய தன்மையில் பைத்தியக்காரன்போல், வெறி பிடித்தவன்போல் தகப்பனுரின் காலில் விழுந்து கோவெனக் கதறியவாறு, "அப்பா! திருடன் வெளியிலிருந்து வரவில்லை. நானே திருடன். நானே திருடினேன். தாங்கள் விதிக்கக்கூடிய தண்டனைகளுக்கெல்லாம் இலக்காக வேண்டியவன் நான்தான்" என்று மேலே பேச முடியாது விக்கியவாறு அவரது காலை கெட்டி யாகப் பிடித்துக்கொண்டான்.

கனவிலும் நினைக்காதவிதம் சுரேந்திரன் கூறிய வார்த்தைகளாகிய நெருப்பு அங்குள்ள மூவரையும் பொசுக்கி விட்டது. இன்னதென்று விஷயமே தெரியாமல் விழித்தபடியே கண்ணபிரான், "சுரேந்திரா! எழுந்திரு. இதென்ன நீ கூறுவது ஒன்றும் விளங்கவே இல்லையே! நீ ஏன் இப்படி புலம்புகிறாய்? விளங்கச் சொல்லு" என்று கூறி, சுரேந்திரனைத் தூக்கி நிறுத்தினர்.

சுரேந்திரன் திக்கித் திணறியபடியே "அப்பா! அம்மா! அலமு! கதவெச்சாத்து. நான் குற்றவாளி; அதிலும் பெற்ற தந்தைக்குத் துரோகம் செய்தவன்; என்னைத் தண்டித்தாலும், மன்னித்தாலும் என் குற்றத்தை மறைக்க முடியாது. பங்காருவின் குடும்ப பரிதாபத்தைக் கண்டு சகிக்காமல், நான் பச்சாத்தாபப் பட்டு, குற்றம் என்று அறிந்தும் அவனை மீட்கும்பொருட்டு நான் 500 ரூபாயைக் களவாடி மார்வாடிக்குக் கொடுத்து அவனையும் அவன் மனைவியையும் காப்பாற்றினேன்—என்று நடந்ததைக் கூறி—நானே திருடன் என்று ஒப்புக்கொண்டு விடுகிறேன்" என்றான்.

இந்தப் பேரிடிபோன்ற வார்த்தையைக் கேட்டதும் அம்மூவருடைய நிலைமையும் எப்படி இருந்தது என்று கூறமுடியுமா? உலகமே தலை கீழாகச் சுழன்று ஓடுவதுபோல் தோன்றிவிட்டது. தங்கள் மகனா இவ்விதம் செய்திருப்பான் என்ற பெரிய ஆச்சரியமும் அதிர்ச்சியும் பெற்றோருக்கு உண்டாகிவிட்டது. ராஜம் சுரேந்திரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "சுரேந்திரா! நீ சொல்வது உண்மையான விஷயமா! என் காதில் விழுவது நினைவா! நான் நம்பமாட்டேன். ஏன் இம்மாதிரி நீ சொல்லுகிறாய்?" என்று பெண்மை புத்தியின் உச்சஸ்தானத்துடன் கேட்டாள்.

கண்ண:—சுரேந்திரா! நீ செய்தது உதவிக்கு அல்ல; நம் குடும்பத்திற்கே பெரிய ஹானியும் நஷ்டமும் விலைக்கு வாங்கியது போலாயிற்று. அதோடு நீ பச்சாத்தாபத்துடன் செய்த காரியம் சத்பாத்திரத்திற்குச் செய்யப்பட்டிருக்குமாயின் புண்ணியமாவது உண்டு. ஐயோ! பங்காருவுக்கா செய்தாய்? உண்மையில் அவனை யோக்கியனென்று நம்பியா ஏமாந்தாய்? குடி முழுகி விட்டதே!

இது சாதாரணப் பணமல்லவே. கவர்ன்மெண்டு சம்பந்தப்பட்ட தாயிற்றே! இதை எப்படி நாம் ஈடு செய்வது? ஒன்ரு, இரண்டா, ஐம்பதா! நூரு! 500 ரூபாயைச் சாமான்ய மனிதர்களாகிய நாம் இன்று மாலை 5 மணிக்குள் எப்படி கட்ட முடியும்? இந்தச் சருக்கல் ஒரு சிறிது வெளியில் தெரிந்தால், நம் தலை போய்விடுமே—என்று பெரிய குழப்பத்துடன் கூறினர்.

கடிகாரத்தில் மணி சரியாய் இரண்டடித்தது. சுரேந்திர னுக்கு மனது கொதித்துக் கலங்குகிறது. "அப்பா! பங்காருவைப் பற்றி நீங்கள் கூறியது எனக்குப் புரியவில்லையே! என் அவன் நிலைமை உண்மையில் கஷ்டமானதல்லவா?" என்ருன்.

கண்ண:—கஷ்டமாவது, மண்ணுங்கட்டியாவது? எல்லாம் நாடகம். உன்னை ஏமாற்றிய கள்ள நாடகம். இன்று காலை நான் வருவதற்கு முன்னர்தான் தாசி கமலத்தின் வீட்டுக்கு வரி வசூலிக்கச் சென்றேன். அங்கு ஆனந்தமாக பங்காரு உட்கார்ந்து தாம்பூலம் போட்டுக் கொண்டிருந்ததை என் கண்ணுரக் கண்டேன். அந்தப் புண்ணியவதி வரி கட்டாமல் 'இன்று, நாளை' என்று என்னை இழுத்தடித்துக் கொண்டு வந்தாள். இன்று போன உடனே பணத்தைக் கொடுத்துவிட்டாள். அலமு! இன்று வந்திருக்கும் பணத்தில் நீ எழுதிய நோட்டின் நம்பரிருக்கிறதா பாரு. ஏனெனில் 80 ரூபாய் அவள் கட்ட வேண்டியது; 100 ரூபாய் நோட்டு ஒன்று கொடுத்தாள். நான் இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்கள் கொடுத்தேன். பாரு—என்ருர்.

உடனே அலமு பார்த்தாள். அதில் அந்த நூறு ரூபாய் நோட்டு ஒன்று இருப்பதைக் கண்டதும் சுரேந்திரனின் தலைமீது எரிமலையே புரண்டது போலாய்விட்டது. "அப்பா! நீங்கள் சொல்வது நிஜமாகவா! நீங்கள் பார்த்தது உண்மையா? ஐயோ! என்னை என்னமோ செய்கிறதே! நான் கண்ட மார்வாடியும் நோயாளியான பங்காருவின் மனைவியும் வெறும் தோற்றமா!

கண்ண:—சுரேந்திரா! என் கண்ணுல் கண்டுதான் சொல்கிறேன். பங்காருவின் மனைவி பிறந்தகத்திற்குப் போயிருக்கிருள். அவள் இங்கு இல்லவே இல்லை. மார்வாடியாவது மாய

மாவது; எல்லாம் ஹம்பக். நம் தலையில் இடி விழுந்ததை எவ்வாறு சமாளிப்பது? இன்று ரூபாயைக் கட்டியே தீரவேண்டுமே— என்று கண்ணீர் உதிர்த்தார்.

"அப்பா! நான் பங்காருவின் வீட்டிற்கே சென்று பார்த்து வருகிறேன். நீங்கள் இருங்கள்" என்று கூறியபடியே பங்காருவின்மீது ஒருவிதமான ஆத்திரத்துடன் ஓடினான். எந்த வழியைக் கடவுள் காட்டுவாரோ யார் அறிவது? மனித ஜீவியத்தின் சுழல் ஒன்று இரண்டா?

## 12

ஆனந்த பிம்பமாய்க் கட்டிலில் உட்கார்ந்திருந்த மைனர் எழுந்து வந்து காளியின் படத்தையும், துப்பாக்கியையும் கண்டு, மனம் பதறிப்போய் நடு நடுங்கி, தழதழத்த குரலால், "நிர்மலா! நிர்மலா! இதோ பாரு. இதென்ன இது? நீ சொல்வது, செய்வது ஒன்றும் விளங்கவில்லையே?" என்று குழறியவாறு கேட்டான்.

நிர்மலா அப்போதும் இந்த மைனருக்குப் பதில் சொல்லாமல் படத்தையே பார்த்து மைனரின் காதில் விழும்படியான சப்தத்துடன், "ஏ தேவி! உன்னுடைய நாடகந்தான் என்ன நாடகமோ! தாசி குலத்தில்தான் பிறப்பித்தாய். அதில் இத்தகைய கொலையையும் செய்து, பெற்ற தாயையும் உன்னையும் திருப்தி செய்யும்படி என் தலையில் ஏன் எழுதினாய்? அம்மணீ! முடியாது. கொலை செய்ய என்னால் முடியாது. உனக்குப் பிறர் உயிரைப் பலி கொடுத்து உன்னை மகிழ்விப்பதைவிட நானே என் மனப்பூர்வமான சந்தோஷத்துடன் உனக்கு என்னைப் பலி கொடுக்கிறேன். ஏற்றுக் கொள். என் ஒரு உயிருடன் உன் மனங் களிக்கட்டும். பெற்றத் தாயும், தந்தையும், உடன் பிறந்தவர்களும், உத்கிருஷ்டமான மனைவியும் கதறிப் பதறித் துடிக்க, அந்த மைனரின் உயிரை நான்

பலி கொடுக்கமாட்டேன். அவர் எங்கேனும் சென்று பிழைத்துப் போகட்டும்; அவர் மக்கள் மனிதர்கள் சந்தோஷமாயிருக்கட்டும்...

என்று கூறுவதைக் கேட்கக் கேட்க மைனரின் குலை நடுக்கம் எடுத்துக்கொண்டது. தன்னுயிருக்குத்தான் ஆபத்து வந்துவிட்டது என்று நன்றாகத் தெரிந்துவிட்டது. தனக்காக நிர்மலா தன்னைப் பலி கொடுப்பதாகக் கூறுவதைக் கேட்கப் பின்னும் வேதனை அதிகரித்தது. அவன் நிர்மலாவின் எதிர்முகமாக வந்து நின்று கொண்டு "நிர்மலா! உன் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும் பயங்கர பாணம் போலிருக்கிறதே! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. உன் கருத்துத்தான் என்ன? அதைச் சொல்லி என்னைக் காப்பாற்றிவிடு" என்று கெஞ்சினான்.

நிர்மலா :—ஐயா! நான் என்ன சொல்வது? என்ன செய்வது? என் தாயின் ரகசியமறிந்துதான் நான் இதுகாறும் பொட்டுக் கட்டிக்கொள்ளமாட்டேனென்று பிடிவாதம் செய்தேன். அந்த ரகசியம் யாருக்கும் தெரியாது. என் தாயார் ஒரு துர்தேவதையை உபாசித்து ஏதேதோ சித்தி பெற்றாளாம். அந்த உபாசனையின் பலனாலேயே நான் பிறந்தேனாம். அதனால் என்னை முதல்முதல் யார் நேசித்து மணக்க வருகிறார்களோ அவர்களைத் தாக்ஷிண்யமின்றி அந்தத் தேவதைக்குப் பலிகொடுத்துவிட வேண்டுமாம். இது முதல் பிரதிக்ஞையாம். எத்தனை ஜென்மாந்திரத்தில் நான் பாபத்தை அளவிலாது செய்தேனோ இப்பாழும் வேசி குலத்தில் பிறந்து விட்டேன்?

கட்டிய மனைவியைக் கதறவடித்து உத்தம குடும்பத்தின் கண்ணியத்தைச் சிதறவடித்து, கண்மூடித்தனமாக தாசி வீட்டில் ஏதோ தாங்கள் எங்கும் கண்டறியாத சொர்க்கப் பதவியைக் காணப்போகிறோம் என்று வரும் முட்டாள்களுக்கு இந்த ரகசியங்கள் என்ன தெரியும்? அநியாயமாய் உங்களைச் சாகவடிக்க என் மனம் வரவில்லை. உங்கள் புத்தி கெட்டு நீங்கள் கேவலம் குப்பைக்கு ஒப்பான தாசி வீட்டைத் தேடி வந்தாலும் உங்களைக் கொல்ல என் மனம் துணியவில்லை. உங்கள் மனைவியையும் பெற்றோரையும் நினைக்கையில், கல்லினும் கொடிய நெஞ்சு தாசிகளுக்கு

என்று பெரியவர்கள் பாடியிருப்பினும் எனக்குப் பரிதாபந்தான் முன்னே வருகிறது. ஆகையால், என்னையே நான் பதிலுக்குப் பலி கொடுத்துவிடத் தீர்மானித்து விட்டேன். நீர் இந்த விஷயத்தை வெளியில் சொல்லுவீரானல் அந்தத் தேவதை கட்டாயம் உம்மை பலி ஏற்றுக்கொண்டுவிடும். இதையும் வெளியில் சொல்லாமலும் உம்து கையினல் என்னையே சுட்டுவிட்டு நீர் ஓசை செய்யாது போய்விடும். இது ஒரு மார்க்கந்தான் நீர் தப்புவதற்கு உண்டு. இல்லையேல் அதோகதிதான்—என்று மூச்சு விடாமல் கூறினள்.

அந்தோ! அமிர்த தாரையை அள்ளிப் பருகப்போகின்ருேம் என்றுபேராவலுடனும், தனக்கு மிஞ்சிய பாக்கியசாலிகள் உலகத்திலேயே இல்லை என்கிற கர்வத்துடனும் வந்த மைனருக்கு இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அந்த ஆனந்தக் கோட்டை பொடி சூரணமாக இடிந்துபோய்விட்டது. சுவரை வைத்துக்கொண்டால் தானே சித்திரம் எழுத முடியும் என்றபடி தன்னுயிர் இருந்தால் தானே மற்றவைகள் என்ற பயம் பிடித்துவிட்டது.

இந்த மைனர் அசல் பட்டிக்காட்டிலேயே வெகு நாட்கள் இருந்து, பின் இங்கு வந்திருப்பதால், அவ்வளவாக சூதுவாதும், க்ரூரமும் தெரியாத அப்பாவியாகையால், இவ்வார்த்தையினல் மனம் குழம்பி விலவிலத்துப்போய்விட்டான். தேகம் முற்றும் குபீரென்று வியர்வை வெள்ளமாகப் பொங்கி தலைசுத்தலும் கண் பஞ்சடைப்பும் உண்டாகியது. பரிதாபகரமாக நிர்மலாவை நோக்கி, "நிர்மலா! நீ சொல்வது முற்றிலும் உண்மையா! அல்லது என்னை ஏமாற்றுவதற்குக் கூறுகிருயா?" என்று கேட்டான்.

நிர்மலா:—ஐயா! என்னிடத்தில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை யென்ருல், இதோ இந்தத் தெய்வத்தினிடத்தில்கூட நம் பிக்கை இல்லையா? நீங்கள் நாஸ்திகர்களா? தெய்வபக்தி என்பது இருக்கிறதா; அதுவும் இல்லையா?

மைனர்:—ஐயோ! தெய்வத்தின்மீது நீ ஏதும் சொல் லாதே! நான் தாசி வீட்டிற்கு வந்துவிட்டதனலேயே தெய்வமும் இல்லை, சாஸ்திரமுமில்லை என்று வாதம் செய்பவன் என்று நினைக்

8

காதே! நான் ஒவ்வொரு நிமிடமும் தெய்வத்தைத் துதிப்பவன். தெய்வமில்லையேல் உலகமே இல்லை என்பதுதான் என் நம்பிக்கை.

நிர்மலா:—ஐயா! உம்முடைய இந்த வார்த்தையைக் கேட்கும்போது என் மனம் பூரிக்கிறது. நீர் சொல்கிறபடியே சாஸ்திரங்களும், தெய்வமும் உண்டு என்கிற நம்பிக்கை இருக்கும் எந்த மனிதரும் அவ்வித நம்பிக்கையினால் தன்னைப் புனிதமாக்கிக் கொள்ளவும் தன்னைப் பார்த்த பிறர் தன்னைப்போல் நடக்கும்படியான படிப்பினையைக் கற்பிக்கும் நிலைமையிலும் தானே இருப்பார்கள். தாங்கள் மட்டும் ரதிபோன்ற மனைவியை விட்டுவிட்டு அயல் மாதை இச்சிப்பது தர்ம சாஸ்திரத்திற்கும் தெய்வ நம்பிக்கைக்கும் தகுமா? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

மைனர்:—நிர்மலா! நான் மூடன்போல மோகவலையில் சிக்கியபோதிலும் அதிலும் நீதி நெறி பார்த்துத்தான் இச்சித்தேன். பிறர் மனைவியை நான் இச்சித்துப் பெரும்பாவத்தைச் செய்யவில்லை. தாசியாகிய உன்னுடைய அன்பைத்தானே நான் கோரினேன். அது அத்தனை குற்றமாகாது என்று நினைத்தும், உன்னுடைய மோகத்தைத் தாங்காமலும் நான் இவ்விஷயத்தில் பிரவேசித்ததில் தவறென்ன?

நிர்மலா:—ஐயா! தாசிகள் என்கிற வகுப்பாரிடம் எப்படி நடந்தாலும் பாவமில்லை என்ற சித்தாந்தத்தை நீர் எந்தச் சாஸ்திரத்தில் படித்தீர்? அவர்களின் தொழில் நாளடைவில் இந்த நிலைமைக்கு வந்ததற்குக் காரணமே உங்களைப்போன்ற மானங்கெட்ட ஆண்பிள்ளைகளின் அக்கிரமத்தினால்தான் என்பதைக் கூறவேண்டுமா! ஐயா! அது ஒருபுறம் இருக்கட்டும். நிரபராதியான ஒரு பெண்ணைப் பல பேர்களின் முன்னிலையில் அக்கினி சாக்ஷியாயும், தெய்வசாக்ஷியாயும், அவளுடைய சுக துக்கங்களுக்கு நீரே கர்த்தன், அவள் மனம் நோகாமல் ஆதரிப்பது உமது கடமை என்று மந்திரத்தின் மூலம் வாக்குக் கொடுத்து மணஞ் செய்துகொண்டீரே! அந்தப் பெண்ணின் விஷயத்தில் நீர் துரோகம் செய்வது—தெய்வத்திற்கு அடுக்குமா? அப்பெண்ணின் வயிறெரிந்தால் அது உமக்கு க்ஷேமமா?

இம்மாதிரி புருஷர்கள் மானஹீனமின்றிப் பாவ புண்ணியத்திற்கும் அஞ்சாமல் தாசி விடுபோய் குலநாசம் செய்வதால்தான் மனமுடைந்தும், வெறுப்புற்றும், அன்றித் தானும் என் பாவத் தொழிலைச் செய்யக்கூடாதென்ற அசட்டுத் தைரியமும் ஆத்திரமும் பெண்களுக்கு ஏற்பட்டு விபசாரத் தொழிலில் அவர்களும் இறங்க நேருகிறது. அவர்களும் உங்களைப்போன்ற மனிதர்கள் தானே! உம்முடைய மனைவி உம்மைவிட அழகான ஓர் வீர வாலிபனை நாடிச் சென்றால், அதைக் கண்டு உமது மனம் எப்படி இருக்கும்? சகிக்குமா! யோசித்துப் பாரும்.

மைனர் :—ஹா! நிர்மலா! நீ ஏதோ என்னைச் சோதனைதான் செய்கிறாய். என் மூளையே குழம்புகிறது. உனது சுந்தரரூப வடிவத்திற்கு முன் எனக்கு எதுவும் தோன்றவில்லையே. என் மனைவி பிற புருஷனுடன் சம்பந்தப்படுவதைக் கண்டால், அவளை ஒரே வெட்டு இரண்டு துண்டாகத்தான் வீழ்த்துவேன். என் மனைவி அப்படிப்பட்டவள் அல்லவே.

நிர்மலா :—மைனர் பிரபுவே! எல்லா விஷயமும் எனக்கும் தெரியும். என்னுடைய சுந்தர ரூபமா உம்மைப் படுகுழியில் வீழச் செய்கிறது. இதோ இந்தப் பழத்தைப் பாரும். இது நேற்றுக் காயாயிருந்தது. இன்று பழம். நாளைக்கு இன்னும் அளிந்த பழம். அடுத்தநாள் அழுக வாரம்பிப்பது. அப்புறம் முற்றிலும் அழுகிப் பாழாய் விடுவது. இதை எதற்காக நமக்குக் கடவுள் காட்டி இருக்கிறார் தெரியுமா? இதைப் பார்த்து மனித ஜென்மாவை நாம் நல்வழியில் நடத்திச் செல்வதற்காகத்தான் என்பது நீர் அறியீரோ!

என்னுடையவும் உம்முடையவும் ரூபம் என்றும் இப்படியே இருக்கும் என்று சாச்வத வரம் பெற்று நாம் வந்தோமா? உம்மை அத்யந்த பிரீதியுடன் பாலூட்டிச் சீராட்டி மடியில் கிடத்தி வளர்த்த உம் அருமைத் தாயாரின் வடிவம் அன்று உமது கண்ணிற்கு இருந்தபடியே இன்று இருக்கிறதா! சரீரத்தின் கட்டு தளர்ந்தது. தலையின் கருத்த மினுமினுப்பு நீங்கி, நரை கண்டு விட்டது. தோலின் விரைப்பு மாறிச் சுருக்கம் ஏற்பட்டுவிட்டது.

மாம்பழ பத்தைகளைப்போன்ற கன்னம் ஒட்டிக் கண்கள் குழி விழுந்தன. உம்மை நெறித்து முத்தமிட்ட வாய் இன்று பல்களில் சிலவற்றை இழந்து வலிவு குன்றித் தளர்ந்து விட்டது. அப்போது உம்மைத் தேடிக்கொண்டு அதிவேகமாக ஓடிச் சென்ற கால்கள் இன்று சோர்ந்து மெல்லிய நடையில் இறங்கின. உம்மை வாரி யணைத்த கரங்களும் மார்பும் இன்று பலவீனத்தால் சளைத்து விட்டன. அன்று கணீர் என்று ஒலித்த குரல் இன்று சற்றுக் குறைந்த நாதத்துடன் விளங்குகிறது.

மைனர் பிரபுவே! இந்தப் பழத்தின் நிலைமையும், மனித தத்துவத்தின் நிலைமையும் சாச்வதமன்று என்பது இனியாவது தெரிந்ததா? தோல் சுருங்குவதுபோல் மனிதனின் ஆசாபாசங் களும் சுருங்கிக்கொண்டே வரவேண்டும். தலை நரைப்பதுபோல் மக்களின் மோகமும் நரைக்க வேண்டும்.

மைனர் :—நிர்மலா! நிர்மலா!........நீ இப்போ....

நிர்மலா :—பொறும்! பொறும்! நானுவது? நீயாவது? இரும். தொண்டரடிப்பொடியாழ்வார்,

வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப்போகும் நின்றவிப் பதினையாண்டு
பேதை பாலகனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டே னரங்கமா நகருளானே.

—திருமாலை

என்ற பாசுரத்தை வெகு அருமையாய்ப் பாடி இருக்கிறுர். அதைக் கவனியுங்கள். மனித ஜென்மாக்களின் பலவித அவஸ்தையால் கழிந்துபோன காலங்கள் செல்ல, மிச்சம் வெகு குறைந்ததே யாகிறது. அக் குறைந்த காலத்திலாவது பாபத்தைத் துலைக்கப் பரமனடி தொழுது முக்தியை வேண்டாமலும் பொதுஜன சேவை செய்யாமலும் மனிதப் பிறவியின் ஜீவியச் சுழலிலேயே உழன்று சாவோமேயானல், என்ன லாபம்? மனிதனுகப் பிறந்ததற்கு என்ன பலன்?

மைனரே! நான் ஏதோ அதிகப் பிரசங்கியாய் வெகு நேரம் பேசி விட்டேன் என்று நினைக்கிறேன். மன்னிக்க வேண்டும்.

நான் தாசி குலத்தில் பிறந்தாலும் அத் தொழிலுக்கு உடன்பட்ட வளல்ல என்பது ஞாபகமிருக்கட்டும். என்னைத் தாங்கள் இது காறும் பார்த்த காமக் கண்ணுல் பார்க்காமல், உமது மனைவி நான் தான் என்ற முறையில் என்னை ஒரு விஞடி பாரும். நீர் என்னை இச்சிப்பதுபோல் ஓர் அந்நியனுக பாவித்து உமது மனைவியின் பரிசுத்தமான கற்பை உரிஞ்ச வரும் கயவனைப் பார்ப்பதுபோன்ற மனேபாவத்துடன் பாரும். அப்போது அந்த அந்நியனை நீர் என்ன செய்வீரோ, அதே போல் இப்போது உம்மைச் செய்து கொள்ளும் பார்க்கலாம். உத்தம குணமும், தெய்வ பக்தியும் உம்மிடம் நிறைந்திருப்பது உண்மையாயின், இதோ இந்தத் தெய்வத்தினிடமே நீர் உமது தவறுதலை யுணர்ந்து மன்னிப்புப் பெற்றுக்கொண்டு, உமது தர்ம பத்தினியிடத்திற்குச் சென்று இன் புற்று மகிழும். இல்லையேல் என் தாயின் பிரதிக்கினை இருக்கவே இருக்கிறது" என்று முடுக்காகக் கூறினள்.

மைனரின் மனம் குழம்பிப்போய் நிலைபுரண்டுவிட்டது. நிர் மலாவின் மொழிகள் செவியில் படப்பட அவன் மோகமும், விகார புத்தியும் இருந்தவிடம் தெரியாமல் மறைய வாரம்பித்தன. சில விஞடிகள் பிரமை பிடித்தவன்போல் நின்றுன். உடனே மனம் தேறியவனுகி, சடக்கென்று அங்குள்ள படத்தின் முன்பு விழுந்து வணங்கி, "தாயே! எனக்கு நற்புத்தி பிறப்பித்த குருவைப்போன்று விளங்கும் நிர்மலாவின் மனத்தின் நிர்மலத்தை யறியாது மோசம் போனேன். நான் இச்சித்த கோமளாங்கியே எனது குரு வாகவும், தெய்வமாகவும் விளங்கி விட்டாள். அவளே என்றும் காப்பாற்று. வேசி குலத்தில் ஓர் வீரமணி பிறந்திருக்கிருள் என்ற மகிமையை நான் அறியச் செய்ததுபோல், உலகமறியச் செய்துகாட்டு. என்னுடைய அபராதத்தை க்ஷமித்து, உன் பலியின் மூர்க்கத்தையும் மாற்றிக்கொள்ளு" என்று அவன் வேண்டித் தொழுததைப் பார்த்த நிர்மலாவின் மனது மகிழ்ந்தது. ஆனந்தப் பரவசத்தால், கண்ணீரும் உதிர்ந்தது.

தைரியமாயும் கண்ணியமாயும் மைனரை நோக்கி, "ஐயா! நீர் தெய்வத்தின் முன்பு செய்துகொண்ட பிரதிக்கினையை இனி

மறக்கமாட்டீர் என்று நம்புகிறேன். எந்தப் பாபத்தை சம்ஹரிப்பதற்கும், எந்த ஆபத்தை ஜெயிப்பதற்கும் அந்த ஆதிமூர்த்தியின் துணையில்லாது வேறு எதனுலும் முடியாது என்ற தத்துவம் உலக மறிந்ததே யாகும். ஆதலால், நான் வேசி குலத்தில் பிறந்து விட்ட பாபத்தைப் போக்கிக்கொள்ள அவனடிதொழுது இறைஞ்சுவது கொஞ்சநஞ்சமல்ல. என் குலம் வேசி என்ற இழுக்கையுடையதேயன்றி, என் இதயம் பரிசுத்தமானது; என்றும் நான் உயர் குலத்து மங்கையைப்போலவே இருந்து, என் ஜீவியத்தை முடிக்கவே கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறேன்.

ஐயா! அந்த உறுதியைக் காப்பதற்கும் என் கற்பைக் காப்பாற்றிக் கொள்வதற்குந்தான் நான் தெய்வத்தின்மீதே பாரத்தைப் போட்டு என் தாயாருக்குப் பிரார்த்தனை என்றும் பலி என்றும் வெறுமை கூறினேனேயன்றி, அவை எல்லாம் உண்மையல்ல. ஆனல் ஒன்று மட்டும் உண்மை. என் கற்பை இழக்கும்படியான சந்தர்ப்பம் என்னை மீறி நேரிடுமாயின், என்னுயிரை இந்தத் தேவதைக்குப் பலி கொடுத்துவிடப் போவதென்னவோ உண்மையே யாகும். ஆதலால், என்னைக் காப்பாற்றிய அத்தேவதைக்கும் உமக்கும் என் வந்தனங்கள். இந்த ரகசியத்தை இதோடு கனவுபோல் மறந்துவிடும். இதோ நீர் கொடுத்த ஆபரணங்கள்" என்று எல்லாவற்றையும் கழற்றி வைத்தாள்.

மைனருக்கு, நிர்மலா இதுகாறும் செய்ததெல்லாம் வெறும் ஜாலவித்தை என்பது தெரிந்ததும் கூறத்திறனற்ற வியப்பும், தான் ஏமாந்ததனல் அவமானமும் உண்டாகியது. ஆனல், கேவலம் மானத்தை விலைக்கு விற்று ஜீவிக்கும் ஹீன ஜாதியில் பிறந்தும் உயர்ந்த நோக்கமும் குலமகளைவிட அதிகமான சீரிய ஒழுக்கமும் இருப்பது கண்டு உள்ளம் பூரித்து, தானும் பாபச் செயலிலிருந்து மீண்டு ஞானக்கண் திறக்கச் செய்ததற்காக அவள்மீது அபாரமான நம்பிக்கையும் உண்டாகியது.

"நிர்மலா! சோதனை போதும். உன் சாமர்த்தியத்தினல் என் ஜீவியத்தில் இன்று அடித்துப் புரட்டிய சுழல் காற்றின் கொடுமை போதும். உன்னை நான் என் குருவாக எண்ணியதி

விருந்து இனி என்னுயிர் போமளவும் மீறவே மாட்டேன். இந்த ஆபரணங்கள் உனக்கே குரு தக்ஷணையாக இருக்கட்டும். ஏனெனில், உன் தாயின் திருப்திக்கு இது ஓர் ஆதாரமாகும். இதை என் ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்" என்றான்.

நிர்மலா:—தாசி வீடு வரும் எந்தக் காமுகனும் முதலில் மதியை இழக்கிறான். பின்னர் நிதியையும் இழக்கிறான். மீளா நரகத்திற்கும் பங்குதாரியாக ஆகிறான். நீரோ, மதியை இழந்தும் மீண்டும் மதியைப் பெற்று விட்டதால், இழந்த நிதியையும் பெற்று இல்லம் சென்று இல்லாளுடன் இன்புற்று இவ்வழகிய ஆபரணங்களை அந்த உரிமை படைத்த பிம்பத்திற்குப் போட்டு உண்மை இதயத்துடனும், அன்புக் கண்களுடனும் பாரும். அப்போது அதனருமை தெரியும். உம். மணி 12 ஆகிவிட்டது. இதோ இந்தப் பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு போய் வாரும். இனி இப்பக்கம் திரும்பாதீர்—என்று ஆபரணப் பெட்டியை அவன் கையில் கொடுத்தாள்.

மைனர் :—நிர்மலா! இவைகளை உன் உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளக் கூடாதா! உனது நல்ல காரியங்களுக்கு இவைகள் உபயோகப்படக் கூடாதா?....நீ என்றும் இப்படியே சந்நியாசினி....

நிர்மலா :— ஓ! புரிந்துகொண்டேன். நிறுத்தும். நான் சந்நியாசினியாகவே என் காலத்தைக் கழிக்கும்படி நேருமாயின், பேஷாய்க் கழிப்பேன். அதற்குத் தயங்கவில்லை. ஆனால் ஒன்று. என் மனத்திற்குப் பரிபூர்ணமான அன்புடன் பிடிக்கும் வாலிபன் எவனேனும், என்றேனும் கிடைப்பானாயின்—அவ்வுணர்ச்சி எனக்குத் தோன்றுமாயின், அவனும் என்னைப் பகிரங்கமாக அக்கினி சாக்ஷியாய் மணந்து இல்லறம் நடத்தக் கூடிய நிலைமையில் ஒப்புவானாயின்—நான் மணந்துகொள்ளத் தடையில்லை. ரகஸியத்தில் வேசி வீட்டிற்குத் திருட்டுத்தனமாக நுழைந்து செல்லும் தீய பழக்கத்திற்கு இந்த இடத்தில் என்றுமே இடம் கிடையாது. ஐயா! நீர் போய் வாரும். 'நான் மணக்கிறேன்' என்று நீர் சொல்லும் வரையில் நான் எதிர்பார்க்கவில்லை. உம்மை மணந்தவள் உமது மனைவி. எனக்கு விவாக எண்ணமே உண்டாகவில்லை. என்றாவது எனக்கு உதவிக்கு ஏதேனும் வேண்டுமாயின், உங்களை நாடி உதவி பெறுகிறேன். நீங்கள் போய் வரலாம்—என்றாள்.

அதற்குமேல் அங்கு நிற்க முடியாத மைனர் மூட்டையுடன் வேறு வழியாய்ப்போய் விட்டான். நிர்மலாவின் தலைமீதிருந்த ஓர் பெரிய சுமை சற்றுக் கீழே இறங்கியது போலிருந்தது. நிம்மதியான மனத்துடன் பகவானைப் பிரார்த்தித்துப் பின் கட்டிலில் "அம்மாடீ!" என்று பெரு மூச்சுடன் படுத்தாள். புரண்டாள். தூக்கம் பிடிக்கவில்லை. மனது அமைதியற்றுக் கொந்தளிக்கும் கருங்கடலைப் போல் இருந்ததால், நிம்மதி எங்ஙனம் உண்டாகும்?

தன் பாழ் பிறவியின் அவக்கேடும், தான் ஏன் இக்குலத்தில் பிறந்தோம் என்ற வேதனையும் அவளைச் சித்திரவதை செய்து வாட்டுகின்றன. எந்தக் காலத்திலும் எந்தச் சமயத்திலும் எத்தகையோருக்கும் துக்கத்தை ஆற்றிச் சுகத்தை அளிப்பதில் சிறந்தது பகவன் நாமம் கலந்த இன்னிசை கானாம்ருதமல்லவா?

அந்தப் பயங்கரமான நடுநிசியில் நிர்மலாவின் செவியில் ஆனந்தகரமான வீணாகானத் தின்னொலி அற்புதமாக விழுந்தது. அதைக் கேட்ட உடனே அவளை யறியாத ஓர் இன்ப ஊற்று மனத்திடை சுரந்ததால், மலர்ந்த கண்களுடன் எழுந்து உட்கார்ந்தாள். இந்தக் கானம் எதிர்வீட்டிலிருந்து வருவதை யறிந்ததும் மேன் மாடத்தில் சென்று, இதை யனுபவிக்க வேண்டுமென்ற ஆவல் உண்டாகியதால், அந்த அறையை அடுத்துள்ள படிக்கட்டுகளின் வழியாகவே துவண்ட மேனியுடன் அவள் மேல் மெத்தைக்குச் சென்றாள்.

பால்போலக் காயும் நிலவின் ஆனந்தமும், சிலு சிலுப்பான காற்றின் மனோஹரமும் கர்ணாமிருதமாக வீணையுடன் குரலிசைத்துப் பாடும் சங்கீதத்தின் இணையிலா இன்பப்பெருக்கும் ஒன்று கூடி நிர்மலாவைப் பரவசமுறச்செய்துவிட்டன. அவள், அங்குள்ள ஆசனத்தில் அசையாத பொம்மைபோல் அமர்ந்து மகிழ்ச்சி மயமாக மாறினாள்.

## 13

நள்ளிரவில் வீட்டை நோக்கிச் செல்லும் மைனர், தனக்கு ஏற்பட்ட அவமானத்தினால், 'நாம் கால் நடையாகப் போகிறோமே' என்கிற வித்தியாசங் கூடத் தெரியாமல், வீட்டு வாசற்படியருகில் வந்தான். வேலைக்காரன் அசந்து தூங்கிக்கொண்டிருந்தான். எங்கும் நிசப்தமாக இருக்கும் வேளையில், வீட்டின் உள்புறம் விளக்கெரிவதும், ஆள் நடமாடும் சந்தடியும் தெரிந்ததால், ஒருகால் கள்ளர்தான் வந்துவிட்டார்களோவென்று சந்தேகம் உண்டாகவே, சந்தடி செய்யாமல் பின்புறமாக அடிமேலடி வைத்துக்கொண்டு சென்றான்.

தோட்டத்துப் பக்கமுள்ள கிணற்றின் சமீபத்தில் யாரோ ஆள் இருப்பதுபோல் தெரிந்து பின்னால் சென்று பிடித்துக்கொள்ள எண்ணுகையில், "ஹா! ஜகதீசா! பெற்றத் தாய் தந்தையர் தம் மக்களைத் தம் பாதுகாப்பிலிருந்து அக்னி சாக்ஷியாக ஒருவர் கையில் பிடித்துக்கொடுத்துத் தமது கடமையை முடித்துக்கொண்டார்கள். கை நீட்டி என் கையைப்பற்றிய மனிதனோ ஒரு கொடிய வேசிக்கு அடிமையாக மாறிவிடும் காலம் வந்துவிட்டது. 'தாசி வீடு புகுந்தவனின் குடும்பமும் யானை புகுந்த களமும் உருப்படுமா?' என்று கூறும் பழமொழியை இனி அனுபவித்துச் சாவதைவிட அனுபவிக்காமலேயே மாண்டுபோவது மேலல்லவா!

"ஏ குலதேவதையே! என் பாவத்தை க்ஷமித்து என்னை ஆட்கொள். எந்தச் சமயத்திலும் என் பர்த்தாவைச் சோதிக்காமல் காப்பாற்றி, நல்ல புத்தி வரும்படி அருள் செய். எத்தனை மோகத்தை யூட்டி வேசி நடித்தபோதிலும் மனைவியின் அன்பு அங்கு காணமுடியாது என்பதை அவர் அறியச் செய். இதுதான் எனது கோரிக்கை" என்று பலவிதமாக வாய்விட்டுக் கூறியபடியே தடாரென்று கிணற்றில் விழ எத்தனித்த சமயம், மைனர் ஓட்டமாக ஓடிக் கட்டிக்கொண்டு, "நில்லு, நில்லு, லக்ஷ்மீ! உன் அந்தரங்க அன்புடன் நீ கோரிய கோரிக்கை இப்போதே நிறைவேறிவிட்டது. நான் பெரிய மலைபோன்ற பாபத்தைச் செய்யப் புகுந்த நேரம்

அதே தாசிப் பெண்ணாலும், அம்பாளின் அருளாலும் தப்பித்துப் புத்துயிர் பெற்று வந்தேன். உள்ளே வா! லக்ஷ்மீ! ஏன் உன் கண்ணீர் இப்படி வழிகிறது? தேகம் பதறுகிறது?" என்று ஆவலுடன் கேட்டான்.

லக்ஷ்மி கூறத் திறமற்ற ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்து, "என்ன! நீங்கள்....நீங்கள்....தாசி...."

"லக்ஷ்மீ! முதலில் நீ உள்ளே வா! பிறகு பேசுவோம்" என்று அவளை அணைத்து உள்ளே அழைத்து வந்தான். அவளை ஆஸ்வாஸப் படுத்தி உட்காரவைத்துப் பின், "லக்ஷ்மீ! நீ எந்தத் தாசியினால் நம் குடும்பம் சிதறுண்டு போய்விடுமென்று நினைத்தாயோ அதே தாசியினால் எனது மூட மதி யகன்று, ஞானக்கண் திறந்தது. கட்டிய மனைவியின் அன்பின் சிகரத்தை அந்தத் தாசியினால் அறிந்தேன். இனிமேல் நான் அந்த எண்ணத்தை இந்த ஜென்மாவில் எண்ணவே மாட்டேன். இது சத்தியம். தாசி வீடு செல்லும் கயவர்களையும் நல்வழிப்படச் செய்யும் பிரசாரத்தி லீடுபடுகிறேன். என்னை நீ நம்பு. இதோ அந்த மாதரசியின் உதார குணத்தைப் பாரு. ஒரு நகை பாக்கி இல்லாமல் எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்து விட்டாள். இந்தா! இவைகளை நீ போட்டுக்கொண்டு எனக்கு ஆனந்தமாகக் காட்சி கொடு. என் பிரிய லக்ஷ்மீ! எழுந்திரு. அந்தப் பெண் சாமான்யமான தாசிப் பெண் என்று சொல்லவே முடியாது. அவள் பேசிய ஒவ்வொரு அக்ஷரமும் லக்ஷம் வராகன் பெறும். அத்தனை அருமையாக விஷயங்களை எடுத்துப் பேசியிருக்கிறாள். இருண்டு கிடந்த என் இதயத்திலும் ஒளி விளக்கு ஏற்றி வைத்தாள். லக்ஷ்மீ! இனி நான் உன்னடிமை. என்னை நம்பு" என்றான்.

காதலர்களிடையே கவ்விக்கொண்டிருந்த மேகம் விலகிவிட்டது. இன்ப மயமான பிரகாசம் உண்டாகியதும் அவர்களிருவரும் புதிய பிறவி எடுத்தவர்கள்போலவே மாறினார்கள். ஆனால், அதே நேரத்தில் நிலையற்ற மனத்துடன் தத்தளிக்கும் நிர்மலாவின் மனத்திற்கு நித்யமான ஆனந்தம் உண்டா! வீணா கானம் கேட்கும் திசையை நோக்கினாள்.

சில தினங்களுக்கு முன்புதான் ஒன்று சேர்க்கப்பட்ட தம்பதிகளின் ஆனந்த வெள்ளத்திற்குக் கரைதான் உண்டா! கணவன் கட்டிலில் படுத்தபடியே ஆனந்தமாகப் பாட்டைக் கேட்டுக் கொண்டே அந்த ஆனந்தத்தினால், "பேஷ்! பேஷ்!" என்று தலையாட்டிப் பரவசமாவதும், அந்த ஆனந்த முதிர்ச்சியினால் வீணை வாசிக்கும் வனிதையின் தலையில் தடவி முதுகில் தட்டி அவளை உத்சாகப்படுத்துவதுமாக உள்ள காட்சியைக் காணக் காண நிர்மலாவின் மனத்தில் பொங்கி எழும் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை.

இந்த அற்புதக் காட்சியைப் பார்க்கப் பார்க்கத் தன் குலத்தின் அவக்கேடும் மானங்கெட்டத்தனமும் இத்தகைய ஒற்றுமையான தம்பதிகளின் அன்பின் பிணைப்பைக் கலைக்கும் கத்திபோல் இந்தக் குலம் அமைந்துள்ள வயிற்றெரிச்சலும் நன்றாக கண்ணாடியில் தெரிவதுபோல் தெரிந்து, அவள் மனத்தில் ஏற்கெனவே உள்ள வெறுப்பையும் ஆத்திரத்தையும் கிளறியது.

கரைகாணாத வெள்ளம்போல் ஓடினும் கடலின் நீர் ஒரு துளியாவது பருகுவதற்கு எப்படிப் பயன்படுவதில்லையோ அதே போலத்தான் தாசிக் குலத்தின் செல்வமும், பெருமையும், ஆனந்தமும் உபயோகமற்றது. சிறிய வாய்க்காலாயினும் கரும்புச் சார் போன்று தெளிந்த நீரை அது மக்களுக்கு உதவுவதுபோல் ஏழைக் குடும்பமாயினும் கண்ணியமும், உண்மையான ஆனந்தமும், சமூகத்தில் பகிரங்கமான மதிப்பும் உண்டாகிறது. தாசிப் பிழைப்பு ஓர் பிழைப்பா?

அன்பு இல்லை. நீதி இல்லை. நிர்ணயமில்லை. முறை இல்லை. ஒழுக்கமில்லை. சத்தியமில்லை. அந்தோ! எல்லாம் இல்லை பாட்டாக வன்றோ முடிகிறது. மானத்தை விற்று இந்தச் சாண் வயிற்றைப் போஷிக்க இத்தனை அநீதியா! இதற்கும் ஒரு ஜாதியா! கண்டவர்கள் காறியுமிழ்ந்து, 'அதோ அவள்தான் வேசி. அவள்தான் தாசி' என்று இழிவாகப் பேசும்படியான விதியமைந்த குலமும் ஒரு குலமா! அன்பு நிறைந்த இதயத்துடன்—கண்களுடன்—நோக்கி இன்புற ஓர் தனி சுதந்திரமற்ற கட்டைகளன்றோ இவ் வேசிகள்.

பொருள் கொடுக்கும் எந்த மனிதனுயினும் அவனுக்கு நன் மதிப்புக் கொடுப்பதும், பொருள் வரண்ட எத்தகையோனையும் அடித்துத் துரத்துவதும், தான் பெற்ற குழந்தைகளுக்குத் தகப்பன் இன்னார் என்பதை அறிய முடியாத வெட்கக் கேடான பிழைப்புப் பிழைப்பதையும் அறியாது, சந்தோஷப்பட்டு இறுமாப்பும் அடை கின்றனர். அந்தோ! இந்த ஜாதியைப் பூண்டோடு தொலைத்துத் தலை முழுகும் நன்னுளை கடவுள் என்றுவது காட்டுவாரா!

"ஆஹா! அதோவிருக்கும் தம்பதிகளின் கரைகாணுத ஆனந்த வெள்ளத்திலிருந்து சிதறும் ஒரு திவலை ஆனந்தமாவது இப் பாழுங் குலத்தினர் அனுபவிக்க முடியுமா? ஒருவன் குலாவும் போதே 'மற்றவன் எப்போது வருவான். இவனுக்குத் தெரியா மலிருக்க வேண்டுமே, தெரிந்தால் கறவை கறக்க முடியாமல் இவனுக்குக் கோபம் வந்துவிடுமே' என்கிற எண்ணத்தில் மனம் தோய்ந்து கிடக்கும் அல்ப நெஞ்சிற்கு ஆனந்தமும் உண்டா!

சீச்சி! அநாசாரக் குப்பை. அற்பப் பிசாசுகள். இனிமேல் என்னுயிரையே விட்டாலும் விடுவேன். என் தாயின் காலைப் பிடித்துக் கெஞ்சி அவளையும் நல்வழியில் திருத்த நான் பிரம்மப் பிரயத்தனங்கள் செய்து, அவளுடைய கண்களை—அவளுடைய மனமே—இப்பாழுங் குலத்தின் அவக்கேடான பேமானித் தனத்தை யறியும்படிச் செய்து காட்டுகிறேன். அதற்கும் அவள் நெஞ்சம் திரும்பவில்லையெனில், அவள் யாரோ, நான் யாரோ என்கிற வேதாந்தசாரத்தின்படியே நடக்கட்டும் என்று விலகி விடுகிறேன். இதுதான் எனது முடிவான தீர்மானம்.

கடவுள் என்னையும் ஒரு ஜென்மாவாகப் பிறப்பித்தார். மானிட தர்ம சாஸ்திர முறைப்படிக்கு நானும் உண்மையான இன்பத் துடனும் ஒழுக்கத்துடனும் குலமகளைப்போன்று ஆனந்தப் பிறவி யாயிருக்க வேண்டிய அருளை அக் கடவுள் என்றைக்காவது எனக்குக் கொடுப்பாரானல், என் ஜென்மம் சார்த்தகமாகட்டும்; இல்லையேல், என் தலையில் எழுதியிருக்கிறபடி நடக்கட்டும். நான் எதற்கும் அஞ்சவில்லை. என்னை இக் குலத்தின் வழக்கமாகிய வியாதியில்—நரகில்—தள்ளாமலிருந்தால், அதுவே போதும். என்

கண்களாவது பாக்கியத்தைச் செய்யட்டும். இந்தத் தம்பதிகளின் இணையற்ற ஆனந்தத்தைக் கண்டு ஆனந்திக்கட்டும்" என்று பைத்தியக்காரியைப்போல் தன் போக்காக அவள் எண்ணமிட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

"ஒருதரம் சரவணபவா" என்கிற மிகச் சிறந்த அதிமனோகரமான பாடலை அந்தப் பெண்மணி வீணையுடன் இசைத்துப் பாடுவதை ஆனந்த மேலீட்டால் தன்னை அடியோடு மறந்து பரவசமுற்றுக் கேட்டுக் கொண்டே நிர்மலா அந்த நிர்மலமான சந்திர கிரணத்தின் கீழ் நிர்மலமான இதயத்துடன் கண்களை மூடிவிட்டாள். ஹா! எல்லையற்ற இன்பத்தை அள்ளிக் கொடுக்கும் ஆனந்தம் நிறைந்த சங்கீதாம்ருதத்தை அதன் சுவை யறிந்து அனுபவிப்பவர்களுக்கன்றோ அதன் மகிமை—அதன் ருசி, அதன் சாரம்—தெரியவரும்?

நிர்மலா கண் விழித்துப் பார்க்கையில், புள்ளினங்கள் ஆனந்தமாக ஆடிப் பாடி சுயேச்சையாய்க் களிக்கவும், தொழிலாளிகள் தம் தம் தொழில்களைச் செய்யப் புறப்பட்டு விட்டதையும் அறிந்தாள். பனியினால் அவள் தேகம் முற்றும் சில்லென்று நனைந்து போயிருந்தது. கண்ணை விழித்ததும் வழக்கம்போல் கடவுளின் பாதத்தை எண்ணித் தொழுது பின்னர் எழுந்தாள். எதிர் வீட்டை நோக்கினாள். இரவு தன் துயரத்தைக் கானத்தினாலும் கண் கொள்ளாக் காட்சியினாலும் போக்கிய அந்த தம்பதிகளைக் கவனிக்கையில் கணவன் நாற்காலியில் உட்கார்ந்து கையில் ஒரு தினசரிப் பத்திரிகையை வைத்துப் படித்துக்கொண்டிருக்கவும், மனைவி அன்பு வெள்ளமான இதயத்துடனும், புன் சிரிப்புத் தவழும் மலர்ந்த முகத்துடனும் தன் அன்பு முற்றிலுமே ஒரு பானமாகக் கோப்பையில் நிரப்பியதுபோல் காப்பிக் கோப்பையை அவன் வாயில் வைத்து, தன் ஒரு கையால் அதைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் அவன் கழுத்தை வளைத்துக்கொண்டு, நாற்காலியின் பிடியில் உட்கார்ந்து, அவனைக் குடிக்கும்படிச் செய்யும் காட்சியைக் கண்டு, நிர்மலாவின் உள்ளம் பரமானந்தமடைந்தது.

கடவுள் இந்தத் தம்பதிகளின் அன்பை வளர்த்து அருள் புரிவாராக என்று அவர்களுக்காகப் பிரார்த்தனையும் செய்து

கொண்டு பின்னர் கீழே தன் பள்ளியறைக்கு வந்தாள். அந்த அறையைக் கண்ணால் காணவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. அங்கு செய்யப்பட்டிருந்த அலங்காரங்களை எல்லாம் பிச்சி எறிந்தாள். கைத் துப்பாக்கியை எடுத்து ஒளித்துப் பெட்டிக்குள் வைத்தாள். "தாயே! அம்பிகே! என்னை நேற்று ஒருநாள் காப்பாற்றியதுடன் கைவிடாதே! என்றுமே என்னை இவ்வாபத்திலிருந்து காப்பாற்றி, நித்தியமான இன்பத்தை நிலையாகக் கொடு. என்னை இழிகுலத்தில் பிறப்பித்தும் உயர் குல புத்தியை ஏன் கொடுத்தாய்? ஆகையால், அந்தப் புத்திக்குத் தக்கபடி என் மனோபீஷ்டத்தை நிறைவேற்று. மனித ஜீவியச் சுழலில் சிக்க வைக்காதே" என்று வேண்டி நமஸ்கரித்த பிறகு வெளியே வந்தாள்.

எதிர்வீட்டுத் தம்பதிகளின் இன்ப வாழ்வைக் கண்டு மனம் பூரித்து உள்ளுக்குள் பொங்கும் இதயத்துடன் வருகையில் ஜீவாவை நாடி நடுநிசியில் வந்த ஆசாமி எழுந்து போகும்போது தன் ஜாதியின் தளுக்கு மினுக்குச் சாஸ்திர முறைப்படியே ஜீவா அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு, "என்ன? நான் கேட்டது ஞாபகமிருக்கட்டும். இன்று வரும்போது அதை மறக்காமல் வாங்கிக்கொண்டு வரணும். தெரிந்ததா! இதையும் இதற்கு மேலானதையும் வாங்கிக் கொடுக்க எத்தனையோ கனவான்கள் காத்துக்கொண்டிருக்கையிலுங்கூட உங்களிடம் உள்ள அன்பினால் அதை வெறுத்துவிட்டேன். நீங்கள்........

இதைக் கேட்டும், பார்த்தும் சென்ற நிர்மலாவின் நெஞ்சு துடித்தது. "சிச்சி! மானங்கெட்ட மிருகமே!" என்று தனக்குள் தான் நினைத்தபடியே சலிப்பும் வெறுப்பும் கொண்டு சடக்கென்று தன் தனியறைக்குப் போய்விட்டாள். ஒயிலாம்பாளும் நிர்மலா எப்போது எழுந்து வருவாள் என்றே எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். ஆதலால், ஆசை ஆசையாக நிர்மலாவிடம் வந்து சந்தோஷம் தாண்டவமாடிய முகத்துடன், "நிர்மலா! இப்பதான் என் மனம் குளிர்ந்தது. வேறு ஏதாவது ஸ்பெஷல் வரும்படி உண்டா?

இதோ பாரு. அந்தக் காலத்திலே எனக்கு முதல் முதல் வந்தவர், ஒரு பெரிய கோமுட்டிச் செட்டியார். அவர் பேசிய

தொகையைத் தவிர, கை நிறைய சொளை சொளையாய் 5,000 ரூபாயை ராத்திரியே எண்ணிவிட்டார். அதுபோல் உனக்கு.... என்று முடிப்பதற்குள், நிர்மலா சர்ப்பத்தினுங் கொடிய சீற்றத்துடன் சிள்ளென்று சீறி விழுந்தபடியே, "அம்மா! போதும்! உன் ஜம்பமும் பெருமையும் என்னிடம் இனி பேச வேண்டாம். பெற்ற தாயாயின் அந்த மரியாதை யொருபுறம் இருக்கட்டும். இவ் விஷயங்களைப்பற்றி இனிமேல் என்னிடம் வாய் திறந்தால் எனக்குக் கெட்ட கோபம் வரும். வீணாக மனஸ்தாபப்படுவதில் உபயோகமில்லை" என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டு, முடுக்காக வேறொரு பக்கம் திரும்பிக்கொண்டாள்.

ஒயிலாம்பாள் ஏதோ பெரிய எதிர்பார்ப்புடன் ஆவலே வடிவமாக வந்ததற்கு இங்கு கிடைத்த பதிலும், முகச் சுளிப்பும் அவளைத் திடுக்கிடச் செய்துவிட்டன. "ஐயையோ! அடிப் பாவிப் பெண்ணே! ஏண்டீ ஒனக்குக் கேடுகாலம் இப்படிப்பட்ட புத்தி மீண்டும் வந்து விட்டது?" என்று முடிப்பதற்குள் நிர்மலா ஆவேசத்துடன், "மீண்டுமா வந்துவிட்டது. இல்லை! இல்லை. ஒரு போது என்னைவிட்டு மாறி இருந்தாலல்லவோ இன்று மீண்டும் வருவதற்கு? உங்களுக்குத்தான் என்றும் பன்னியின் புத்தி. 'நறகலே சொர்க்கம்; நறகலே சகலமும்' என்று அது நினைப்பது போல் நீங்கள் பாவமே சகல சாம்ராஜ்ய சுகபோக மோக்ஷ வாஸம் என்று நினைக்கிறீர்கள். என் புத்தி அப்படி இல்லை. இது பற்றி வீண் தர்க்கம் வேண்டாம். நீ புறப்பட்டுப் போய்விடு" என்றாள்.

நின்ற இடத்திலேயே கதிகலங்கி விட்ட ஒயிலாம்பாள் தபீர் என்று வயிற்றிலடித்துக்கொண்டு, "அடி பாவீ! நானடீ பன்னி! நானடீ பாவி. பன்னியின் குட்டி நீ என்ன கொம்பு முளைத்தவளாகிவிட்டாயோ? ஐயையோ! குடி முழுகிப் போச்சே! அந்த மைனர் எங்கேடீ! நகை நட்டுக்களெல்லாம் எங்கேடீ?" என்று மிகுந்த தடுமாற்றத்துடன் கேட்டாள்.

நிர்மலா:—என்ன? மைனரா! அவனும் பன்றியின் குணத்துடன் நறகலை நாடித்தான் மதி இழந்து வந்தான். ஆனால், மதி

பெற்று, அவன் நிதியும் பெற்று, உத்தம மனைவியின் சந்நிதிக்குப் போய் இரவே சேர்ந்தான். உங்கள் வாசனை அவனை ஒன்றும் அசைக்கவில்லை....என்று முடிப்பதற்குள், ஒயிலாம்பாள், "ஐயையோ! நகையும் நட்டும் போய்விட்டதா! பிழைப்பின் வாயில் மண் விழுந்துவிட்டதா! அடி குடிகேடீ!" என்று இடிந்துப்போய் ஒன்றுந் தோன்றாது கல்லாய் நின்றுவிட்டாள்.

உள்ளத்திலிருந்து பீறிக்கொண்டு வரும் உணர்ச்சியுடன் நம் நிர்மலாவின் வாயிலிருந்து கலகலவென்று ஒரு சிரிப்பு கணீரென்று ஒலித்தது. இந்த ஓசையானது ஒயிலாம்பாளின் அபாரமான ஆவலை, அப்படியே விழுங்கி ஏப்பம் விடும் கொடிய பூதத்தின் த்வனிபோல் கேட்டதால், கண்கள் பிதுங்க விழித்துக்கொண்டு நின்றாள்.

## 14

அலையக் குலைய சுரேந்திரன் பங்காருவின் வீட்டிற்கு ஓட்டமாக ஓடிவந்தான். காலையில் அங்கு நோயாளி படுத்திருந்த இடமே இப்போது காலியாக இருப்பதைக் கண்டதும் சுரேந்திரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "பங்காரு! பங்காரு" என்று அவசரமாகக் கூப்பிட்டுக்கொண்டே பார்க்கையில், பங்காரு டிபன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவனை நோக்கி, "பங்காரூ!" என்று வயிற்றிலிருந்து பொங்கி வரும் ஆத்திரத்துடன் கூப்பிட்டான்.

பங்காரு சற்று அலக்ஷியமான குரலுடனும், பார்வையுடனும் "ஓ! சுரேந்திரனா! வா வா! டிப்பன் சாப்பிடு. எங்கே இந்த வெயிலில் களைத்து வந்தாய். என் இப்படி ஏதோ பயந்தவன் போல் இறைக்கிறது. நீ சர்க்கார் பணத்திலிருந்து திருடியதை, நான் வெளியில் சொல்லிவிடுவேனோ என்று பயப்படுகிறாயா என்ன? அதைச் சொல்லவா ஓடி வந்தாய்? சீச்சீ! நானென்ன முட்டாளா? அப்படி எல்லாம் வெளியில் சொல்லுவேனா என்ன?" பயப்படவே

வேண்டாம்." என்று இவனே முன்கூட்டிச் சரமாரியாகப் பேசுவதைக் கேட்ட சுரேந்திரனின் ஆத்திரம் பின்னும் பதினாயிரம் பங்கு பெருகியது.

அவன் பல்லைக் கடித்துக்கொண்டு, "அடேய்! பங்காரு! என்ன கேள்வி கேட்டாய்? உன் மூளை உன் வசமில்லாமல் பேசுகிறாய்போல் தெரிகிறது.....

பங்காரு :—(இடை மறுத்து) என்ன சுரேந்திரா! நான் தவறாக ஒன்றும் கேட்கவில்லை. சர்க்கார் பணத்தைத் திருடியது மகா குற்றமாயிற்றே! அது வெளியில் தெரிந்துவிட்டால், பேராபத்தாக முடியுமே என்று நீ பயப்படுவதை யறிந்து, உன் நன்மைக்காகத் தான் சொன்னேன். இதற்காகவா இத்தனை கோபம் வருகிறது.

சுரேந் :—பங்காரு! உன்னை நான் ஆதியில் என்னுடன் மனமொத்து நேசித்த அதே பங்காரு என்று எண்ணி, நம்பிக்கை மோசம் போனேன். அடேய்! தெய்வம் ஒன்று உண்டு என்பதையே நீ மறந்தா பேசுகிறாய்? காலையில் நீ நடித்ததெல்லாம் உண்மையில் வெறும் கள்ள நாடகமா! எனக்கு அது எப்போதுமே தெரியாமல் போய்விடும் என்றாடா பார்த்தாய்?

பங்காரு :—ஓஹோ! ஏதேதோ பெரிதாகப் பேசுகிறாயே! நீ செய்ததல்லவோ கள்ள நாடகம். நான் நடித்தது கபட நாடகம். இரண்டும் சரியாய் போய்விட்டது. இப்போது நீ இங்கு என்ன காரியமாக வந்தாய்? அதைச் சொல்லு.

சுரேந் :—ஐயோ! பாம்புக்குப் பால் வார்த்ததுபோல் ஆகிவிட்டதே! பங்காரு! இந்த அக்கிரமம் உனக்குத் தகுமா! இதை நீ ஜெயிக்க முடியுமா! நீ எதற்காக இந்த விபரீத நாடகம் ஆடி என்னை மோசம் செய்தாய்? உண்மையைச் சொல்லு.

பங்காரு :—இதென்ன கேள்வி? என்னுடைய கஷ்டத்திற்காகத்தான் கேட்டேன். என்னுடைய விஷயம் பொய்யல்லவே; நிஜந்தானே.

சுரேந் :—என்ன! நிஜந்தானா! இங்கு படுத்திருந்த உன் மனைவி எங்கே? உண்மையில் அவள் உன் மனைவியா! அந்த மார்வாரி உண்மையில் உன் கடன்காரனா? உண்மையைக் கூறிவிடின்....

பங்காரு :—ஓஹோ! கூறுவிடின் என்ன செய்துவிடுவாய்? திருடியதுபோல் கொலையும் செய்துவிடுவாயோ! ஹி! ஹி! ஹி! ஹி! அந்தப் பாச்சாவெல்லாம் இங்கு பலிக்காது. நான் சொல்வதைக் கேள். எனக்கு அவசரம் என்று சொன்னது என்னவோ வாஸ்தவந்தான். அது என்னவிதமான அவசரமென்றுமட்டும் கேட்காதே! என்மேல் நீ ஏதோ குற்றங் கண்டுபிடிக்கலாமென்று எண்ணி இங்கு வந்தாய். உனக்கு இங்கு ஒருவிதமான ஆதாரமும் கிடையாது. இதைக் கிளறப்போனால், நீதான் அகப்பட்டுக்கொள்வாய். நீ சர்க்கார் பணத்தைத் திருடினாய் என்பதை நான் சொல்லாமல் காப்பாற்றுகிறேன். நீ வீணாக ஏதாவது கலாட்டா பண்ண வேணுமென்று ஆரம்பித்தால், அது உன்னையே கலாட்டாவில் கொண்டு புகுத்தும் என்பது மட்டும் ஞாபகமிருக்கட்டும். அதற்கு மேல் நான் சொல்லவேண்டியதில்லை.

சுரேந் :—ஐயோ! பங்காரு! நீ உன் நெஞ்சும் மனமும் துணிந்தா பேசுகிறாய்? தெய்வம் ஒன்று இருக்கிறதென்பதை மறந்துபோய் உளறுகிறாயா! உன்னை........

பங்காரு :—ஓகோ! அடேயப்பா! என்னைத் தெய்வம் விழுங்கி விடும் என்று சொல்ல வாயெடுத்தாயோ! ஐயோ! பாவம். நீ தெய்வத்தைக் கரைகண்டுவிட்டவன். அப்படிப்பட்ட சத்தியசந்தனாயின், நீ ஏண்டா திருடினாய்? இதிலிருந்தே உன் பக்தி தெரியவில்லையா? தெய்வமாம், தெய்வம்! தெய்வத்தை வைத்துக் கொண்டு கோவிலில் கோவிலைச் சேர்ந்தவர்கள் செய்யும் அநியாயங்களை எல்லாம், அக்கிரமங்களையெல்லாம் சகித்துக்கொண்டிருக்கும் தெய்வம் என்னை மாத்திரம் என்னடா செய்துவிடும்?

சுரேந் :—சிச்சி! துஷ்டா! நிறுத்து. உன்னுடைய அயோக்கியத்தனத்தை யறியாமல், நான் உயர்ந்த எண்ணத்துடன் உனக்கு உதவி செய்ய வேண்டுமென்று செய்ததற்குப் பலன் போதும். பாம்புக்குப் பால்வார்த்ததுபோலும், நெருப்புடன் விளையாடியது போலும் உனக்கு நான் உதவி செய்தது முடிந்தது. அடே பாவி! பங்காரு! இத்தகையச் சண்டாளனாக நீ மாறிவிட்டாய் என்பதை யறியாமல் நான் மோசம் போய்விட்டேன். நீ செய்த அநியாயத்

திற்குத் தக்க தண்டனையை மனிதர்களால் உனக்குத் தற்சமயம் விதிக்க முடியவில்லை எனினும் உன்னுயுளுக்குள் கடவுளால் அத் தண்டனையை, நீ அடைந்தே தீருவாய் என்பதை மறக்காதே! என் வயிற்றெரிச்சல் வீணாகிவிடாது.

பங்காரு :—அடாடா! நீ மகா யோகீச்வரன். சாபம் கொடுத்தால் அப்படியே பலித்து நான் எரிந்துவிடுவேன் பாரு !....ஹி ! ஹி! ஹி! ஹி! போடா பேசாமல். என் கையில் கிடைக்கும்போது கொடுக்கிறேன். அதுதான் பதில்—என்றான். அதற்கு மேல் சுரேந்திரனால் அங்கு நிற்க முடியவில்லை. ஆத்திரமும், துக்கமும் பொங்கி வந்துவிட்டதால், "நீ நாசமாய்ப்போக. கடவுள் உனக்குக் கூலி கொடுப்பார்" என்று கூறிக்கொண்டே வயிறெரியச் சாபமிட்டவாறு போய் விட்டான்.

## 15

கண்ணபிரானின் உள்ளக் கோதிப்பை அளவிட்டுக் கூறச் சாத்தியமா? என்ன செய்வதென்பதே தெரியாமல், சில விநாடிகள் புழுவைப்போல் துடித்தார். மனைவியின் உடம்பிலோ இன்றைக்கெல்லாம் இருந்தால், 100 ரூபாய் மதிப்பிற்கு மேல் நகைகள் இருக்கமுடியாது. அலமு உடம்பில் அதுகூட இல்லை. யாரிடம் இப்போது தன்னுடைய ஆபத்தைக் கூறிக் கேட்கமுடியும்? சாயங்காலத்திற்குள் கணக்கை ஒப்பித்தாக வேண்டுமே என்ற பெரிய திகிலுடன், "ராஜம்! இங்கே வா!" என்று கூப்பிட்டார்.

கண்ணில் நீர்வடிய ராஜம் அங்கு வந்து நின்ற பரிதாபத்தைப் பார்க்கும்போதே அவன் வயிற்றில் கபீரென்றது. "ராஜம்! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். வெளியில் சென்ற சுரேந்திரன் இன்னும் வரவில்லை. அவன் சென்றுள்ள வேகத்தைப் பார்த்தால், எங்கே தன் குற்றத்தைப் பிறர் எதிரில் சொல்லிவிடுவானோ என்று பயமாக விருக்கிறது. இது நமக்கு ஏதோ பெரிய சோதனைக்கால

மென்றுதான் திட்டமாய்த் தெரிகிறது. அவன் செய்தது பெருங் குற்றமாயினும் அதை அவன் சொல்லி வருந்துவதால், அவனுடைய மனுேபரிசுத்தத்தைக் காட்டுகிறது. பங்காரு அயோக்கியனென்றதைச் சுரேந்திரன் அறியாது மோசம்போய் விட்டதானது, நமது போதாக்காலக் கொடுமையைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

ராஜம்! என் மனத்திலென்னவோ பெருந் திகிலும், கெட்ட எண்ணமும் அதன் தோற்றமுமே உண்டாகி வாட்டுகிறது. எனது ஆபத்து நிலையில் ஒரே சமயத்தில் இவ்வளவு பெரிய தொகை கடன் கொடுப்பாரும் கிடையாது. ஆதலால், இது ஏதோ விபரீதத்தில் தான் முடியுமென்பது என்னுடைய தீர்மானமாகும். ஆகையினுல், சுரேந்திரன் இப்படிச் செய்துவிட்டான் என்பது வெளியில் வரவே கூடாது. அவன் விருத்தியாகக்கூடிய சிறுவன். அவனுடைய இந்த விஷயம் வெளியில் பரவி விடுமாயின், விஷம் பரவுவதுபோலத் தாகுைம். இன்னும் எத்தனேயோ காலம் அவன் நன்ருகவிருந்து வளரவேண்டியதை, இச்செயல் அடியோடு சிதைத்துவிடும்.

ஆகையால், ராஜீ! நான் சொல்லப்போவது என்னவோ உனக்குத் தெரிந்தே இருக்கிறது. நான் இவ்வுலகத்தில் அனுபவிக்கவேண்டியதை அனுபவித்துவிட்டேன். பந்தபாசத்தைப் பற்றி நினேத்துக்கொண்டிருந்தால், அதற்கு விமோசனமே இல்லே. இனி, வேதாந்தத்தை எண்ணி மனத்தை முறித்துக்கொள்ள வேண்டியதுதான். பழியை நானே ஏந்தி அனுபவிக்கிறேன். குழந்தைகளே ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். சாமர்த்தியமாகக் குடும்பத்தை நடத்து. இதற்குமேல் நான் சொல்வதற்கு ஒன்றுமில்லே. வீணுகக் கண்ணீர்விடாதே! என் சிநேகிதனிடம் சென்று ஓராசைப் பார்த்துவிடுகிறேன். அங்கும் கிடைப்பது துர்லபம் தான். இருப்பினும் போகிறேன். சுரேந்திரன் வந்தால், நீ அவனே வீட்டிலேயே இருக்கச்சொல்லு. வேறு யாரிடமும் இதைப்பற்றிச் சொல்லவேண்டாம் என்று அவனுக்கு நீயே சொல்லி, சமாதானம் செய். இதோ வருகிறேன். அலமு! இச்செய்தியைப்பற்றி வெளியில் மூச்சுவிடப்போகிருய். பத்திரம்" என்று கூறிவிட்டு வெளியில் சென்று விட்டார்.

* * * * *

மேற்குறித்த சம்பவங்கள் நிகழ்ந்து ஒரு வாரமாகிவிட்டது. இன்று சுரேந்திரனின் வீட்டில் காணும் காட்சி யாது? கண்ண பிரான் ரிமாண்டிலிருப்பதும், இந்த மூன்று ஆத்மாக்கள் துடிப் பதும் ஊரார் 'பரம யோக்கியன்போல் நடித்த மனிதனின் கதி இது தானு? இக்காலத்தில் யாரையும் நம்பக்கூடாது' என்கிற வார்த்தை களைக் கொட்டியளக்கவுமாக ஆகிவிட்டது.

"நான் செய்த குற்றத்திற்காக, நானே தண்டனை யடையாது என் பொருட்டு, பெற்ற பிதாவிற்கு ஆபத்தாக முடிந்ததே! பெற் ருேரை இன்புறச் செய்வதற்குப் பிள்ளைகள் பிறப்பது போக என் போன்ற பாவிகள் யாரேனும் பெற்ருேரைத் துன்புறுத்தும் பொருட்டுப் பிறப்பார்களா! ஐயோ! அடேய் சண்டாளா! பங் காரு! உன்னலன்ருே எங்கள் குடும்பம் அதோகதியாகிவிட்டது. நீ கடவுளிடத்திலிருந்து தப்பிவிடலாமென்று மனப்பால் குடிக் காதே! அது ஒருநாளும் முடியாது. மனிதனை ஏய்த்துவிட்டது போல் உன்னைப் படைத்த மாயனையும் ஏய்த்துவிடலாமென்று அகக்கோட்டைக் கட்டாதே. என்னை வஞ்சித்து என் குடும்பத் தைச் சிதறவடித்தது யாவும் இறைவனின் பதிவுப் புத்தகத்திலிருந்து உன்னலழிக்கமுடியாது. ஐயோ! என்ன செய்வேன்? இம் மாதிரி உயிர் வாழ்வதைவிட எங்கேனும் விழுந்தாவது சாகலா மென்ருல், என்னையும் இழந்துவிட்ட தாயாரின் கதியும் அலமுவின் கதியும் என்னவாகும் என்று நினைக்கையில், அந்த உறுதியும் மறை கிறதே! ஐயோ! கடவுளே! இந்த அவமானத்தையும் கஷ்டத் தையும் சகிக்க முடியவில்லையே! எங்கெங்கோ பூகம்பம் வருவ தாகப் பத்திரிகையில் படிக்கின்ருேமே! அந்தப் பாழும் பூகம்பம் இங்கு வந்து எங்களை ஒரேயடியாய் விழுங்கிவிடலாகாதா!" என் றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கி, மனம் புண்ணுகி மெலிந்துவிட் டான். 'சர்க்கார் பணத்தையே சூறையாடியவன் ஜமீன் பணத் திற்குக் கேட்கவேண்டுமா? ஆகையால் இனி வேலை இல்லை' என்று ஜமீந்தார் நிர்த்தாக்ஷிண்யமாய்க் கூறிவிட்டார்.

எந்த மனிதர்களுக்கும் ஒரு சிறிது சறுக்கல் இருப்பதை யறிந்தபின் எல்லோரும் அவர்களை இழிவுபடுத்தவும் மற்ற கடன்

காரர்களையும் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கவும், விரோதி களுடன் சேர்ந்துகொண்டு பரிகசிக்கவும் தலைப்படுவது சகஜ மல்லவா? அம்முறையில் சுரேந்திரன் குடி இருக்கும் வீட்டுக் காரர்கள் நோட்டீஸ் கொடுத்துவிட்டார்கள். திடீரென்று இம் மாதிரி அசந்தர்ப்பம் ஏற்பட்டால் இவர்கள் என்ன செய்வார்கள்?

ராஜியின் சிறிய தாயார் வெளியூரில் இருப்பது ஞாபகத்திற்கு வந்தது. ராஜி, தற்சமயம் இந்தச் சங்கடமான நிலைமையில் தன் பெண்ணையழைத்துக்கொண்டு, சித்தி வீட்டிற்குச் செல்வதென்றும் சுரேந்திரன் வேறு வேலை எங்கேனும் கிடைத்த பிறகு வருவ தென்றும் தீர்மானித்துக்கொண்டு, சிற்றன்னையின் வீட்டை நோக் கிச் சென்றாள். சுரேந்திரனின் நிலைமை, 'உயிர் இருக்குமா போய் விடுமா' வென்ற கதியில் பித்துப் பிடித்தவன்போலாகிவிட்டான்.

திருட்டுக் குற்றமே மகா கொடியது. அதிலும் சர்க்காரின் பணத்தையே திருடிவிட்டது பெரிய குற்றமாகையினால், எத்தனை பிரயத்தனங்கள் செய்தும் பலியாமல் சட்டப்படி தண்டனையே கிடைத்துவிட்டது. சுரேந்திரன் ஜமீந்தாரின் வீட்டில் வேலைக் கிருப்பதையே விலக்கிவிட்ட பிறகு இனி இத்தகைய கஷ்ட நிலை மையில் அலமுவை மணப்பதற்கு ஒருவரும் ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்கள் என்பது கூறாமலேயே விளங்குமல்லவா? தான் செய்த குற்றத்திற்காகத் தகப்பனார் துன்புறவும், உலகோர் அவர் மீதே பழி கூறி நிந்திக்கவும், அதே காரணத்தினால் அவன் எத்தனை இடங்களுக்கு ஏறி இறங்கினும், 'தகப்பனார் சர்க்கார் பணத்தையே திருடியபோது, மகனை எவ்விதம் நம்புவது? ஆத லால், வேலை இல்லை' என்ற பாட்டை வெகு தாராளமாகப் பாடவும் விதியமைந்ததை நினைக்க நினைக்க சுரேந்திரனின் இதயமே வெடித்துவிடும்போலாகி விட்டது.

தகப்பனார் சிறையில் தவிப்பதும். தாயும் சகோதரியும் அன் னியர் வீட்டில் அவதியுறவும், தான் இங்கு நடைச்சவம்போல் சுற்றியலையவும் ஒருகாலத்தில் விதியின் ஆட்சியில் நடக்கும் என் பதை யாரேனும் எண்ணியாவது இருக்க முடியுமா! சிநேகிதன் என்று நம்பவும், மனத்தால் நினைக்கவுங்கூட சுரேந்திரனின் மனம்

வெறுத்தது. மாதம் மூன்று ரூபாய்க்கு ஒரு சிறிய அறையை வாடகைக்கு வைத்துக்கொண்டான்.

அவ்வறையிலோ காற்றும் வெளிச்சமும்கூட நுழைய இடமில்லாது அத்தனை பந்தோபஸ்தாக விருந்தது. டஞ்ஜன் போன்ற அவ்வறையில், தன் சாமான்களை எல்லாம் ஒருபுறம் அடுக்கிக்கொண்டு ஒரு கயிற்றுக் கட்டிலில் தானும் படுத்து அழுது அழுது முகம் வீங்குவதைத் தவிர, வேறு லாபம் ஒன்றும் உண்டாகவில்லை.

ஏற்கெனவே மனக்கொதிப்புடன் இருக்கும் அவன், சூரியனின் மிகக் கொடுமையான உஷ்ணத்தைத் தாங்காமல் தவித்தான். இந்த வேதனையைச் சகிக்கமாட்டாது, அவ்வூரிலுள்ள ஆற்றங்கரையிலேயே வெகு நேரம் படுத்திருந்து நடு நிசி சமயத்தில் வீட்டிற்கு வருவான். தெருத் தெருவாய் அலைந்தும், கட்டிடங்கள் ஏறி ஏறி இறங்கியும் காலும் ஓய்ந்துவிட்டது.

பங்காருவைக் கண்டு பலதரம் கேட்டும் பயனற்றுவிட்டதுடன், கடைசியில் அவனும், தாசி கமலமும் ஊரைவிட்டே போய் விட்டார்கள் என்று தெரிந்தது. இந்த மகா பாதகனுக்கு உதவி செய்ததன் பலனை இத்தனை கஷ்டங்கள் அனுபவித்தபோதிலும், அந்தப் பணமாவது திரும்பி வந்தால் தன் குடும்பத்தின் தரித்திர காலத்திற்கு உபயோகப்படுமே என்று எண்ணியிருந்த ஆசையும் நாசமாயிற்று. என்ன செய்வது என்று வேதனையுடன் சலிப்புற்று உட்கார்ந்திருக்கும்போது, ஒரு கடிதம் வந்தது. அதைப் பார்த்த உடனேயே அலமுவின் எழுத்துத்தான் என்பதை யறிந்துகொண்டு ஆவலுடன் கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானான்.

"என் அன்பெல்லாம் ஒருருக்கொண்ட அண்ணா, திருவடிகளில் அலமு அனேக வந்தனம் செய்து தெரிவித்துக்கொள்ளும் விஞ்ஞாபனம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுதவும்.

அண்ணா! ஏற்கெனவே அலைந்து திரிந்து மனம் நொந்து பரிதவிக்கும் உன்னை நானும் வருத்தக்கூடாதென்று எண்ணியே பேசாமலிருந்தேன். என்னையும்

மிஞ்சிவிட்டதால் இன்று துணிந்து எழுதுகிறேன். அம்மாவை நீ இப்போது பார்த்தால் கொஞ்சங்கூட அடையாளமே கண்டு பிடிக்கமுடியாது. அப்படி துரும்பாய் உருகிப் போய்விட்டாள். இங்கு நடக்கும் அநியாயத்தை எழுதுவதற்குச் சாத்தியமே இல்லை. சொந்த மனிதர்களிடத்தில் சிறுமைப்பட்டுச் சாவதைவிடக் கிணறு குளங்களில் விழுந்து சாகலாம் என்ற ஒரேவார்த்தையில் அடக்கி எழுதிவிட்டேன். விடியற்காலை 4 மணிக்கு அம்மாவும் நானும் எழுந்தால், இரவு 11 மணிக்குத் தரையில் படுப்பதும் துர்லபமாக விருக்கிறது. நடு நிசியிலும் நிம்மதியான தூக்கமில்லாமல், அழும் குழந்தைகளை ஆட்டவும் தூங்க வைக்கவும் சரியாகிவிடுகிறது.

அண்ணா! எத்தனை கஷ்டப்பட்டாலும் படலாம். சொந்த மனிதர்கள் என்று நம்பி ஆபத்தில் அண்டுவதற்காக வந்த எங்களைக் கேவலம் ஓர் வேலைக்காரியை நடத்துவதுபோல் நடத்துகிறார்கள். பிறர் கேட்பதற்கு வாய் கூசாமல் வேலைக்காரி என்றே கூறுகிறார்கள். இதைக் கேட்கும்போது அம்மாவின் இதயமே வெடித்து விடும்போல ஆகிவிடுகிறது. இம்மாதிரி இவர்களிடம் அன்பில்லாமல் அலக்ஷியப்பட்டும் வேலைக்காரி என்றும் பெயர் பெற்றுப் பிழைப்பதை விட பகிரங்கமாகவே நாலு வீடு கூட்டி வேலை செய்து சிறுமைப்படாமல் பெருமையாய் வாழலாம். சுதந்திரமாய் உலாவலாம். கடவுளின் சோதனை விபரீதமாயினும், இந்த ஒரு கஷ்டத்திலிருந்தேனும் விடுதலை யடையலாம் என்று அம்மா எழுதச் சொன்னாள்.

அண்ணா! இப்போது நீ வைத்துக்கொண்டிருக்கும் சிறிய அறையே நமக்குப் போதும். இங்கிருந்து இன்னும் பழியும் பாவமும் ஏற்காமல், விலகிவிட வேண்டுமென்று அம்மாள் சொல்வதால், நீ அதற்கான ஏற்பாடு செய்து ரயில் செலவுக்காவது அனுப்பினாயானால்,

நாங்கள் வந்துவிடுகிறோம். இங்கிருக்கும் இம்சை தாங்காமல் நான் இத்தனை எழுதிவிட்டேன். நீ கோபிக்காதே. மனவருத்தப்படாதே. நான், உன் கடிதத்தை அடுத்த தபாலில், இதில் கண்டுள்ள விலாசத்திற்கு எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம் உன் பிரியமுள்ள

அலமு"

அதைப் படிக்கும்போதே சுரேந்திரனின் தலை சுழன்றது. கண்களில் கண்ணீர் அருவிபோல் பெருகுகிறது. அவன், தனக்கு இத்தகைய கடிதம் ஒன்று வரும் என்று எதிர்பார்க்கவே இல்லையாதலால், அவன் தாயும் தங்கையும் கஷ்டப்படுவதாகக் கடிதத்தில் படிக்கும்போதே அவன் கண் முன்பு தெரிவது போன்ற தோற்றமும் உணர்ச்சியும் அவனை வதைக்கின்றன. 'அடேய்! பங்காரு! உன்னை நான் பழைய ஒழுக்கமுள்ள மனிதன் என்று நம்பி உதவி புரிந்ததனாலன்றோ என் கதி—என் குடும்பத்தின் கதி—இம்மாதிரியாயிற்று.

'பாத்திர மறிந்து பிச்சை இடு, கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு' என்று ஆன்றோர் கூறிய வாக்குப் பொய்யாகுமா? உத்தமனுக்கும் தர்ம சிந்தையுடையவனுக்கும் காலணா கொடுத்தால், அக்காலணாவில் அவன் ஒரு தம்பிடி பிறருக்குப் பசி தீர்க்கக் கொடுத்துதவும் புண்ணியம் இக்காலணா கொடுத்தவனையும் சாருகிறது. அதமனுக்கும் குடிகாரனுக்கும் வேசிக் கள்ளனுக்கும் கொடுக்கும் காலணாவினால், அவன் செய்யும் அக்கிரமங்கள் முற்றும்—பாபங்கள் முற்றும்—இவனையும் பாதிக்குமன்றோ? அதை யறிந்துதான் பெரியோர்கள் 'பாத்திரமறிந்து பிச்சை இடு' என்று கூறினார்கள்.

அந்தோ! பங்காருவின் ஒழுக்கமறியாது அவனுக்கு உதவி புரிந்ததன்மூலம் முதலில் நானே திருடனானேன். அவன் அப்பணத்தைக் கொண்டு செய்யும் தீயகாரியத்தின் பாபத்திற்கு நானும் பங்குதாரியானேன். என் மூலமாகப் பல நன்மைகளையும் சந்தோஷத்தையும் எதிர்பார்த்திருந்த என்னுடைய பெற்றோர்களையும் பரிதவிக்கச் செய்தேன். மகா உத்தமரான பிதாவுக்குத்

துரோகம் செய்ததுமல்லாமல், அவரே திருடர் என்கிற பட்டத்தையும் வாங்கிக் கொடுத்தேன். குலத்திற்கே தலைமுறைக்கும் அழியாத இழுக்கையுந் தேடி விட்டேன். ஐயோ! என் பிழைப்பை நானே வெறுக்கையில், இதைபிறர் என்னதான் கூறமாட்டார்கள்? ஐயோ! என் செய்கையே என்னை யழித்துவிட்டதே! நான் என்ன செய்வேன்? எந்த வழியில் என்னுருயிர் அன்னையின் துயரத்தை நான் தீர்க்கப்போகிறேன்?" என்று தனக்குள் எண்ணிப் பெருமூச்சு விட்டபடியே சாய்ந்துவிட்டான்.

## 16

நிர்மலாவின் சிரிப்பில் வெறுப்புற்று நின்ற ஒயிலாம்பாளின் ஆத்திரத்தின் எல்லையைக் கூறத் திறமில்லை. விழிப் பிதுங்க நின்றவள், சில வினடிகள் சென்ற பிறகே கண்களைக் கொட்டினள். இரண்டு கைகளையும் ஓங்கி நிர்மலாவைத் தடார்புடார் என்று அறைந்து விடலாமா என்றும் துணிந்தாள். பிறகு சற்றுச் சமாளித்துக் கொண்டு, அவளை நோக்கி, "எண்டீ! நீ எந்தத் தைரியத்தையடீ கொண்டு இம்மாதிரி பதில் சொல்லுகிருய்? நம் ஜாதி வழக்கப்படிக்கு ஒரு ஆட்டக் கச்சேரியா! பாட்டுக் கச்சேரியா! அபிநயமா ஒரு எழவும்தான் செய்யமாட்டேனென்று மறுத்துவிட்டாய். இதுவரைக்கும் உன்னை வைத்துக்கொண்டு நான் எத்தனை கஷ்டப்பட்டு இந்தக் குடும்பத்தைப் போஷித்திருப்பேனே அது அந்த வேணுகோபால மூர்த்திக்குத்தான் தெரியும்.

எனக்குப் பணம் சுரக்கிறது என்று பார்த்தாயா! அல்லது புதையல் அகப்பட்டதென்று நினைத்தாயா! உடம்பை உழைத்தால் தானேடீ வயிறு வளர்க்கமுடியும். ஒருவிதத்திலும் வருவாய் இல்லாத நான் 'அம்மா! தாயே!' என்று பிடிக்காதவர்களின் கால்களை எல்லாம் பிடித்துக் கெஞ்சிக் கடன் வாங்கி இந்தக் குடும்பத்தை

நடத்தி வருகிறேன். கோயில் மானியமும் அரை வயிறு கஞ்சிக்கான நெல்லும் நமக்கு எப்படியடீ போதும். உன்னால் தலையெடுத்து, சல்லியங்களைத் தொலைத்துவிட்டுப் பழையபடி பெருமையா யிருக்கலாமென்று நினைத்ததையெல்லாம் பாழாக்கி விட்டாயே! இந்தக் கடன்களை எப்படியடீ திருப்பித் தருவது. நீ உன்........

நிர்மலா ஆத்திரத்துடன், "போதும். போதும். உன் உபதேச ரத்தின மாலையை நிறுத்து. அம்மா! நீ இதுவரையில் கடன் வாங்கினாய் என்று ஏன் என்னிடம் தெரிவிக்கவில்லை. நீ மகா தர்மமான முறையில் சம்பாதித்த காசை வைத்துக் கொண்டு செலவழிக்கிறாய் என்றும், அந்தப் பாழப்போன பணம் சீக்கிரம் செலவாகித் தொலையட்டும் என்றும், அதைப் பிறரும் தின்றுவிட்டுப் போகட்டும் என்றுந்தானே நான் பேசாமலிருந்தேன். உனக்கே நீ லாட்டரியடிக்கும்போது வீட்டில் ஏன் 'தண்ட கூட்டத்தைக் கூட்டி விபசாரத் தொழிலுக்கும் இடங் கொடுத்து வரவேண்டும்? ஜீவாவையும், மணியையும் வீட்டைவிட்டுத் துரத்திவிடு. நான் பிச்சை எடுத்து உன்னை என்னுயுள் உள்ளளவும் காப்பாற்றுகிறேன். இந்தா! இந்தாப் பாழாப்போன சரீரத்திற்கு இவ்வாபரண அலங்காரங்கள் ஒரு கேடா? வேண்டாம். வேண்டாம். இவைகளை விற்றுக் கடனுக்குச் செலுத்திவிட்டு வா. இனி இரண்டாவது பேசாதே!

ஒயிலா:—ஐயையோ! அடி நிர்மூடியே! இதுவரைக்கும் நமக்கு ஆபத்துச் சம்பத்துக்களில் உதவி புரிந்தும் வீட்டில் பெரிய துணையாயும் அலங்காரமாயும் இருக்கும் என் குழந்தைகளையாடீ நீ துரத்தச் சொல்கிறாய். அவர்களாடீ உன் கண்ணில் உறுத்துகிறார்கள். அவர்களால்லல்லவா நமது குடும்பம் இம்மட்டுமாவது இருக்கிறது. அட வயித்தெரிச்சலே. பிச்சையாடீ எடுக்கப் போகிறாய்? அடீ! நிர்மலா! இதோ பாருடீ! இந்த ஒயிலாம்பா உயிரோடு இருக்கும் வரையில் உன்னைப் பிச்சை எடுக்கவும், பறையாய்த் திரியவும், ஜாதியை நிந்திக்கவும் விடமாட்டேண்டீ! உன்னையும் சமுத்திரத்தில் தள்ளிவிட்டு, நானும் சாவேண்டீ!

நிர்மலா :—அம்மா! அம்மா! இப்போது கடைசியாகச் சொன்னீர்களே அந்தப் புனிதமான காரியத்தை இதோ, இப்போதே செய்து விடுங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டாகும். எடுத்த ஜன்மம் இன்னும் அதிகமான பாதகத்தைச் செய்யாமல் இதோடு முடிந்தது என்கிற பெருமையாவது அடையட்டும். வாம்மா! உம். கிளம்பு.

ஒயிலா :—அடியே! அடீ பாவீ! என்னையாரென்றுடீ பார்த்தாய். நான் ஒயிலாம்பாளடீ! கேவலம் மூஞ்சூறுக்குச் சமானமான நீ சொல்கிறபடி நானடி ஆடுவேன்? உயிருக்குக்கூட துணிந்த கள்ளீ! நீ வேறு....

நிர்மலா :—(இடைமறுத்து) அம்மா! மானத்தைவிடப் பிராணன் பெரிதன்று. தெரியுமோன்னோ! நீங்கள் நினைக்கிறபடி மானத்தை அலக்ஷியம் செய்து வெட்கங்கெட்டு வாழ வேண்டுமென்று கங்கணங் கட்டிக் கொண்டவர்களுக்கல்லவோ பிராணன் பெரிதாகத் தோன்றும். எனக்கு மானந்தான் பெரிது. அதைக் காக்க நான் பிராணனையும் தாராளமாகவிடத் தயாராக விருக்கிறேன். அம்மா! நான் மறுபடியும் சொல்கிறேன். நீ இனிமேல் இந்த விஷயங்களில் என்னிடம் பேச்சுக் கொடுக்காதே. பேசாமல் போய்விடு.

ஒயிலா:—அடீ! இந்தப் பேச்சு நீ சொல்வதற்காகவா உன்னைப் பெற்று வளர்த்து, இத்தனை பாடும்பட்டது. அடியே! ஒரே வார்த்தை கேட்கிறேன். நீ பெத்த தாயார் என்று நினைத்தாயா அல்லது தெருவிலே போகும் பிச்சைக்காரி—வேலைக்காரி—என்று என்னை நினைத்தாயா! நாளைக்கே கோவிலில் உன்முறை தெரியுமா! அதற்கு நீ சென்று செய்யாவிட்டால் நம்முடைய கவுரவமே அழிந்துபோய்விடும். உன் துர்ப்புத்திகளை எல்லாம் மூலையில் கட்டி வைத்துவிட்டு, பகவானுக்குச் செய்யவேண்டிய கைங்கர்யத்தை யாவது செய். அதற்குமேல் உன்னிஷ்டம். என்னை அலக்ஷியம் செய்தும் என் பேச்சை கேட்காமலும் நீ நடப்பாயானல், நீ என்னை அதிக நாளைக்கு உயிரோடு காணமுடியாதுடீ காணமுடியாது. இந்தப் பிராணனைப் படுக்கென்று விட்டுவிடுவேன். அதன்

பிறகு உன் ஆட்சியிலேயே நீ செங்கோல் செலுத்தலாம்—என்று முடுக்காகக் கூறிவிட்டு, உள்ளே போய்விட்டாள். தனியாக விடப்பட்ட நிர்மலாவின் மனத் தவிப்புக்கு எல்லைதானுண்டா! 'என்ன செய்வது?' என்று யோசித்தபடியே பதுமைபோலாய்விட்டாள்.

## 17

"ஏண்டாப்பா! மணீ! காரியம் ஒன்னும் கைகூடாது போலிருக்குதே! அந்தப் படுநீலி மகாராக்ஷஸித் தனம் செய்கிறாள். எத்தனையோ பிரயாசைப் பட்டு அந்த மைனரைச் சரிப்படுத்தியும், வலையிலகப்பட்ட பக்ஷியை அந்தச் சிறுக்கி, பறக்கவிட்டுவிட்டாளே. இனிமேல் அவளைக் கொண்டு என்ன செய்வது? வைதேகியாம், பாதாளியாம். ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துவிட்டாளாம். பிரமாதமாகக் கொட்டி யளக்கிறாள். அவளைக் கல்லியாணம் செய்து கொடுக்கவேண்டுமாம்.

ஐயையோ! வெட்கக்கேடே! இந்த எண்ணம் ஒரு தேவடியாப் பெண்ணுக்கு அடுக்குமா! எந்தக் கம்மனாட்டியும் ரகசியமாக வந்து சீராடுவானே யன்றி, எவன் பகிரங்கமாக மணந்து குடும்பத்துடன் இருக்க ஒப்புவான்? கச்சேரி செய்யவும், நாட்டியம் ஆடவும் வக்கில்லாத இவள் எப்படியடா பிழைக்கப் போகிறாள்? என் கடன்களெல்லாம் வெளியாகி விடுமாயின், என் கதி என்னடா ஆகும்? மணீ! இதற்கோர் வழி சொல்லேன்" என்று ஒயிலாம்பாள் மனம் வருந்திக் கூறினாள்.

இதைக் கேட்ட மணி, முகத்தை யொருமாதிரி சுளித்துக் கொண்டே, "அத்தே! நிர்மலா மஹா கைகாரி. அந்த மைனரின் புத்தியை அடியோடு மாற்றியல்லவோ அனுப்பி விட்டாளாம். அவன் என்னவென்றால் தேவடியா வீடு போகும் ஒவ்வொருவனையும் தடுத்துப் புத்தி கூறப் போகிறானாம். தேவடியாள் வீடு

சென்று கெட்டழிந்து, ரோகங்களுக்கும் தரித்திரத்திற்கும் இருப்பிடமாகி மக்கள் மனைவியைத் தவிக்க விட்டுக் குடும்பத்தைச் சிதறவடித்த மனிதர்களின் தொகையை அவன் கணக்கெடுக்கப் போகிறானாம்.

"சன்மார்க்க சங்கம்" என்று ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கப் போகிறானாம். தேவடியா வீடு சென்று கெட்டுப்போன மனிதர்களின் அனுபவங்களை எல்லாம் அவர்களைக்கொண்டே ஒரு புத்தகமாக எழுதி, அதை இனமாக விநியோகிக்கப்போகிறானாம். அடேயப்பா! ஒரே இரவுக்குள் அவனுக்கு இத்தனை ஞானம் பிறந்து போய்விட்டதைப் பார்த்தால், ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

ஒயிலா :—(இடைமறுத்து) ஐயையோ! இதென்னடா சமாசாரம். புத்திகெட்ட கம்மனாட்டிகளை எல்லாம் இந்தப் பிரகஸ்பதி திருத்திவிடப் போகிறானே! உம். தேவடியாள் வீடு போகிறவனை இவன் திருத்தினாலும் நிற்கமாட்டான். இவன் பாட்டன் நிறுத்தினாலும் நிற்கமாட்டான். அவன் கிடக்கிறான் கழுதை! இப்போது கடன் ரகசியம் வெளியாகிவிடாமல், அதை அடைக்க வழி என்னடா செய்வது. அதைச் சொல்லுடா!

மணி :—அத்தே! நானும் இன்று எப்படியாவது உன்னிடம் சொல்ல வேண்டுமென்றே நினைத்திருந்தேன். நீயே கேட்டுவிட்டாய். அதாவது நம்ப குமாரசாமி இருக்கிறாரல்லவா! அவரும் அவருடைய சகாக்கள் சிலரும் சேர்ந்து ஓர் சினிமா கம்பெனி ஏற்படுத்தினார்கள். அதில், என்னை நடிக்க வரும்படி கட்டாயப் படுத்திக் கூப்பிடுகிறார்கள். நானும் சரி என்று ஒப்புக்கொண்டு விட்டேன். அவருடைய கண்ணோட்டம் முற்றிலும் நமது நிர்மலாவின்மீதுதான் இருக்கிறது. அவளைக் கதாநாயகியாயும் என்னைக் கதாநாயகனாகவும் போட்டு ஒரு முதல்தரமான படம் எடுக்க வேண்டுமாம். அதில், ஆயிரம் ஆயிரமாக லாபம் வரும் என்பதில் சற்றும் சந்தேகமே இல்லையாம். பண விஷயத்தில் நிர்மலாவுக்கு மட்டும் சொளை சொளையாய் 10,000 ரூபாய் உடனே எண்ணி விடுகிறாராம்.

ஒயிலா :—(வெகு சந்தோஷமும் ஆச்சரியமும் பொங்கிய முகத்துடன்) ஐயையோ! அந்தப் பாவிப் பெண்ணா நாசமாய்ப் போக இதற்கு ஒப்புக்கொள்வாளா! இந்தக் காலத்தில்தான் சினிமாத் தொழிலை ஒரு வியாபாரம் போல் செய்கிறார்களே! அதில், ஏதாவது சான்ஸ் கிடைக்குமா என்றுதான் நானும் எதிர்பார்த்திருந்தேன். நம்ம ஜாதியில் எத்தனையோ தேவடியாக்கள் போய் ஆடுகிறார்கள். என் உயர்ந்த குடும்பத்தினர்கள்கூட இப்போது சினிமாவில் நடிக்கிறார்களாம். இந்த மூதேவியோ எந்தவிதமான கச்சேரி செய்வதற்கும் லாயக்கில்லை. ஜாதித் தொழிலையும் வெறுத்து வேதாந்தம் பேசி, என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்கிறாள். இப்போது தானாக வந்திருக்கும் தொழிலையும் அந்தப் பாவி மறுக்காமலிருக்கவேண்டுமே! இதற்கென்ன தந்திரம் செய்யலாம், நீதான் சொல்லேண்டா மணி!

மணி :—அத்தே! அவசரப்படாதே! முரட்டு மாடுகளுக்கு அது போற வழியே விட்டுப் பிறகு மூக்கணாங் கயிற்றை மாட்டிவிட்டால், பிறகு அதை நாம் போகிற வழியே இழுத்துவிடலாம். ஆகையால், ஆத்திரப்படாமல் நாளையதினம் முறை நடக்கவேண்டியதற்கான ஏற்பாட்டை முதலில் செய்துவிடு. அதற்குப் பிறகு நானே வழி சொல்கிறேன்—என்று உபதேசம் செய்ததைப் பெற்றுக்கொண்டு ஒயிலாம்பாள் போய்விட்டாள்.

வெறும் வாயை மெல்லுகிற அம்மையாருக்கு ஒரு பிடி அவல் கிடைத்ததுபோல், ஒயிலாம்பாளுக்கு இந்தப் புதிய சமாசாரம் தெரிந்த உடனே தான் எவ்விதம் நிர்மலாவைத் திருப்பலாம், என்ன விதமான தந்திரம் செய்யலாம்; முத்திரைபோடுவதற்குத் தான் சாமி வந்துவிட்டதாக ஆடியாயிற்று. இதற்கு எப்படி வழி செய்வது என்ற எண்ணத்திலேயே லயித்துப்போய்விட்டாள்.

## 18

நிர்மலாவின் முறை இன்று நடந்தே தீரவேண்டும். ஏனெனில், கடவுளுக்கு மனைவியாக முத்திரை போட்ட பிறகு இன்று முறைதான் முதல் முறையாகையினால், அதற்குப் போகாவிட்டால், அவளை ஜாதியார்கள் ஏளனமாகப் பேசுவதுமல்லாமல், கோவிலதிகாரிகளுக்கும் கோபம் வரும். பிறகு மான்யத்திற்குத் தகராறு ஏற்படும். ஆகையால், அவள் மனத்தில் பல எண்ணங்களும், தாயின் உபத்திரவமும் சலடை போட்டுச் சலிக்கிறது. அவளால், ஒருவிதமான முடிவுக்கும் வர முடியவில்லை. 'நாம் ஏன் இந்த ஹீன ஜாதியில் பிறந்தோம்' என்கிற கவலையும் 'தன்னுயிர் போய்விடாதா' என்கிற எதிர்பார்ப்பும் அவளை வதைத்து வாட்டி விட்டது.

"ஏண்டீ நிர்மலா! நேரமாயிற்று. ஸ்நானம் செய்துவிட்டு, மடியாக மடுசார்புடவை கட்டிக்கொண்டு வைதீகமாய்த் தலையைக் கோடாலி முடிச்சுபோட்டுப் புஷ்பம் வைத்துக்கொள். குட விளக்கை சுத்தப்படுத்தி, திரி போட்டு வைத்திருக்கிறேன். அதை எடுத்துக்கொண்டு புறப்படு. நீ வீதியில் நடந்து வரமாட்டாயோ என்று பழைய செட்டியார் மகனிடமிருந்து மோட்டார் கேட்டேன்; அனுப்பிவிட்டார். ஊம். நேரமாயிற்று. எழுந்திரு. இன்று முதல் நாளே என்னை முக்கை குலைக்காதே" என்றாள் ஒயிலாம்பாள்.

நிர்மலா :—அம்மா! நான் கண்டவர்களின் காரில் ஏறமாட்டேன். அந்த அல்ப கழுதைகளெல்லாம் நம் காரில் சற்று உட்காரமாட்டாளாவென்று நொட்டை விட்டுக்கொண்டு காத்திருக்கும். அதில் உட்கார்ந்ததையே ஒரு பெருமையாக எண்ணி, அதையே ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு, அடிக்கடி இங்கு வரவும், பல்லிளிக்கவும் ஆரம்பிப்பார்கள். என் மனப்பூர்வமாக ஸ்வாமிக்குக் கைங்கர்யம் செய்யப் போகையில் வண்டி எதற்கு நொண்டி எதற்கு? கால் எங்கே ஒடிந்துவிட்டதா? கோவிலில் நடக்கும் அநியாயத்தைக் கண்டு சகிக்க முடியாமலல்லவா நான்

பகவானுக்குச் செய்யவேண்டிய கைங்கர்யத்தையும் வெறுக்கிறேன். எனக்கு ஒருவருடைய வண்டியும் வேண்டாம். உன் உபத்திரவத்திற்காக நான் இன்று வருகிறேன். இனிமேல் என்னைத் தொந்திரவு செய்யாதே. என் மனத்திற்குப் பிடித்தால், நானே செய்கிறேன். எனக்குத் தெரியும்" என்று முடுக்காகக் கூறிவிட்டு எழுந்து சென்றாள்.

அடுத்த நிமிடமே பகவானின் கைங்கர்யத்துக்கானபடி அலங்கரித்துக்கொண்டு கிளம்பினாள். குடத்தைத் தானே கையிலெடுத்துக்கொண்டு பக்கத்திலேயே கோவிலிருப்பதால், நடந்தே போக வாரம்பித்தாள். 'கலீர் கலீர்' என்று சப்திக்கும் பாதசரத்தின் ஒலியும், அவளுடைய தேஜஸும் காண்போர் மனத்தைப் பிரமிக்கச் செய்தன. அவள் குனிந்த தலை நிமிராமல் செல்லும் போதே, வீதியில் செல்லும் ஆடவர்களின் கண்கள் அவளுடைய எழிலைப் பருகி, நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டே இருந்ததை ஒயிலாம்பாள் அறியாமலில்லை. ஆனால், அதில் அவளுக்குப் பிரமானந்தமல்லவா!

நிர்மலா, தலை குனிந்திருந்த போதிலும், அவளுடைய கூரிய விழிகள் இந்தக் காக்ஷிகளைக் காணாமலில்லை. உள்ளுக்குள் வெறுப்புற்றபடியே அந்தத் திக்கில் காறியுமிழ்ந்தவாறு கோவிலை யடைந்தாள். இவள் வரவிற்கே எதிர்பார்த்துக்கொண்டிருந்த கோவில் அர்ச்சகர் பெரிதாக நகைத்துக்கொண்டே, "பேஷ் ஒயிலாம்பாள்! அந்தக் காலத்திலே நீ முறைக்கு வருவாயே. அது தோற்றுப் போயிற்று. நிர்மலாவைப் பார். ஜில் ஜில் மோஹனங்கியாய் சௌந்தரியக் கடலாக விளங்குகிறாள். பேஷ்! நிர்மலா! பலே ஜோர். உனக்கு இந்தக் கட்டும், இந்த வேஷமும் வெகு பொருத்தம். அதான் அந்தப் பயல் மைனர் உன்....

நிர்மலா, கண்கள் சிவக்க, ஒரு முழி அர்ச்சகனை விழித்துப் பார்த்துப் பல்லைக் கடித்து முகத்தைச் சுளித்தபடியே ஆத்திரத்துடன், "என் ஐயா நீங்கள் பகவத் கைங்கர்யம் செய்வதற்காக இங்கிருக்கிறீர்களா அல்லது எந்தத் தேவடியாள் எப்படி இருக்கிறாள், எந்தப் பெண்கள் எப்படி இருக்கிறார்கள் என்று வம்பளந்து

கள்ளப் பார்வைப் பார்க்க இருக்கிறீர்களா! போதும் உமது ஆசீர்வாதம். ஊம். தீபாராதனை ஆகட்டும். இந்த வீண் வம்புக்குச் செவி சாய்க்கும் நாய்க் குணமுள்ளவள் நானல்ல. ஜாக்கிரதை" என்று முடிப்பதற்குள்,

ஒயிலாம்பாள் அர்ச்சகரைப் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டே, "ஏண்டீ நிர்மலா! ஐயர்மேல் ஏன் இப்படிச் சீறி விழுகிறாய்? அவர் இன்னிக்கு நேத்திக்கு வந்த மனுஷ்யரா! என் தாயார் காலம் முதல் எனக்கு அவர்களின் பரம்பரையைத் தெரியும். உனக்கு நல்லதைத்தானே சொல்லுகிறார்கள். இதற்காக நீ பெரியவர்களைத் தூஷித்துப் பேசுவது அழகா?" என்றாள்.

இதற்குள் அர்ச்சகர் பல்லை இளித்துக்கொண்டு, "ஹி! ஹி! ஹி! குட்டிக்கு முறை செய்வது இன்றுதானே புதிது. அதனால் கோபம் வருகிறது. இரண்டு நாளைக்குப் பழகிவிட்டால், சரியாகி விடும். நீ கோபிக்காதே ஒயிலாம்பா! சிறிசுதானே!" என்று அசடு வழியக் கூறிக் கொண்டே ஸ்வாமியிடம் நகர்ந்தார். அதோடு அன்று சிறிய உத்ஸவமாயினும் வெள்ளிக்கிழமையாதலால், அதிகக் கூட்டமிருப்பதால், அர்ச்சகர் மேலும் பேசாமல் போய்விட்டார்.

அங்கிருந்த கும்பலில் சிலர் நிர்மலாவின் மனோபாவத்தையறிந்து ஆச்சரியப்பட்டார்கள். தேவடியாள் பெண்ணுக்கும் இத்தனை பரிசுத்தமான மனதிருக்கிறதை யார்தான் கொண்டாட மாட்டார்கள்? அங்குள்ள கூட்டத்தில் எத்தனையோ கண்கள் நிர்மலாவின் அழகைக் குடித்துக் கொண்டே இருந்தன.

நிர்மலா, தலை நிமிராமல் தான் கொண்டுவந்த குடவிளக்கை ஏற்றி, பகவானுக்குத் தீபாராதனை செய்துவிட்டு, ஒரு சிறிய பாடலைப் பாடி அபிநயம் செய்யவேண்டிய பத்ததிப்படிச் செய்ய வாரம்பித்தாள்.

பாட்டு

1. ஆனிரை மேய்ந்தாட ஆச்சியர் மகிழ்ந்தாட
வானவர் துதித்தாட வளர்கன் றோடியாட
தேனதாய் குழலையூதும் கோபாலன் சிரமாட
கானத்தின் இசையாட மானிலம் முற்றுமாட

2. நெத்தியில் திலகமாட நீலமயில் தோகையாட
முத்துமாலை அசைந்தாட முற்றிலும் அணிகளாட
சுற்றிலும் பாலராட சோகுசு பீதாம்பரமாட
ஒத்தை உருமாலாட உல்லாஸ கண்ணனுட

என்ற அற்புதமான பாடலை கமாஸ் ராகத்தில் வெகு மனோஹர மாய்ப் பாடிக்கொண்டே, தன் முறை கைங்கர்யத்தை முடித்தாள். அங்குள்ள ஜனங்களின் தேகமே ஆடிவிட்டது எனலாம். அர்ச்சகர் கம்பம்போல் அப்படியே தன்னை மறந்து நின்றுவிட்டார்.

உள்ளார்ந்த பக்தியுடன் நிர்மலா செய்த கைங்கர்யத்தினல் வேணுகோபாலனுடைய முகம் சந்தோஷத்தால் மலர்ந்து விட்டது போல் அவளுக்குத் தோன்றியது. அவள் அங்குள்ள ஆபாசங்களைக் கவனியாமல் எம்பெருமானின் திவ்ய மங்கள சுந்தர விக்ரகத்தில் ஐக்கியமானவள்போல் கண்களை மூடி மெய்ம்மறந்தாள்.

அங்கிருந்த ஒரு பெரிய செல்வச் சீமான், "ஆஹா! என்ன அபிநயம். என்ன பாட்டு. என்ன இனிமையான சாரீரம்? என்ன ஆனந்தம் போங்கோ! இது மாதிரி அபிநயம் நான் பார்த்ததே இல்லை. இதுமாதிரி சுந்தரவதியையும் நான் கண்டதில்லை. இந்த ஆனந்தத்திற்குப் பரிசாக உலகத்தையே தூக்கிக் கொடுத்தாலும் ஈடாகாது. இதோ! இந்த வைரமோதிரத்தை அந்த அழகிய விரலில் அலங்கரிக்கச் செய்யவேண்டும்" என்று கூறியவாறு கழற்றி நீட்டினர்.

ஒயிலாம்பாள் சந்தோஷப்பெருக்குடன் இரு கைகளையும் நீட்டி அதை வாங்கியபோது, இவ்வார்த்தைகளைக் கேட்டு மன முடைந்து கண்களைத் திறந்த நிர்மலா அலக்ஷியமாயும், பதட்ட மாயும் அந்தப் பிரபுவையும் தாயாரையும் ஒரு பார்வை பார்த்த படியே, மோதிரத்தை ஒயிலாம்பாளின் கையிலிருந்து வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டு, அந்தப் பெரிய மனிதரை நோக்கி, "ஐயா! உம் முடைய திறத்தை நான் அறிந்தேன். இந்த வைர மோதிரத்தை ஒரு குப்பைக்குச் சமமாக நான் மதிக்கிறேன்.

பகவான் சந்நிதானத்தில் வந்த சிறிது நேரங்கூட பரிசுத்த இதயத்துடன் பக்தி செய்து தரிசிக்காத உமது மனமும் உமது கண்களும் வீண் நரகக் குழியாயிருப்பதை நீர் வெட்கமென அறிய வில்லைபோலிருக்கிறது. தூத்தூ! நீங்களும் ஒரு சீமானு? இதோ இந்த மோதிரத்தை அந்தப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்தீரானுல், அதனுல் அவன் வயிறு குளிரும். உம்முடைய பாவம் துலையும். பகவானுக்கும் உகப்பாக விருக்கும். நீர் எடுத்த ஜன்மத்திற்கும் சார்த்தகமாகும். இகபர சுகத்தையும் புகழையும் அடையலாம். கேவலம் ஓர் தேவடியாளுக்குக் கொடுப்பதிலா இன்பம், கவுரவம், இல்லை! இல்லை. இந்த அல்பம் எனக்கெதற்கு? என்னப்பன் வேணுகோபாலன் கால்வயிறு கஞ்சிக்குச் சன்மார்க்கவழி காட்டுவான். இந்தப் பாப சொத்து எனக்கு வேண்டாம்" என்று கூறியவாறு வீசி எறிந்துவிட்டு, "அம்மா! வீட்டுக்கு வா" என்று அழைத்தபடியே விர் என்று நடக்க வாரம்பித்தாள். அங்குள்ள எல்லோருக்கும் உண்டாகிய ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. பிரமித்து விட்டார்கள்.

## 19

சினிமாக் கம்பெனி முதலாளிகளிடம் கொஞ்சம் சலுகை பெற்றவர்கள் அவர்களுக்கு ஹிதம் பேசுகிறவர்கள் போல் கூடவிருந்து அவர்களின் மனப்பான்மையை முற்றிலுமறிந்துகொண்டு, அவர்களுக் கனுகூலமாகவே பேசி ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்துவிடுவதுபோல், சவடாலடித்து அதன் மூலம் பெருச்சாளி சுரங்கம் அறுப்பதுபோல் பணத்தைச் சுரண்ட வாரம்பித்துவிடுகிருர்கள். இம்மாதிரியோர் வியாபாரத்தை ஸினிமா முதலாளிகளிடம் மட்டுமல்ல; பல பெயர்களிடத்தில் நடத்திய போதிலும் இத்தொழிலதிகாரிகளிடம் கறப்பதுதான் வெகு சுலபமாயும், பொருத்தமாயும் இருக்கிறதென்பது, அம்மாதிரி வயிறு வளர்க்கும் பேர்வழிகளின் அபிப்பிராயம்.

"அதோ அந்தப் பெண்ணைப் போய்ப் பார்த்தேன். இதோ இவனைப் பேசினேன். அதற்குக் கார் வேணும். பெட்ரோல் இத்தனை ஆயிற்று. அந்த நடி கொஞ்சத்தில் ஒப்புக் கொள்ளவில்லை. இத்தனை ரூபாய்க்குக் குறைந்து முடியவே முடியாது என்று பிடிவாதம் செய்தாள். அவளுக்கு வேண்டிய ஒரு ஆசாமியைப் பிடித்து அவனுக்கு ஸம்திங் கொடுத்து ஒரு வழியாய்ப் பேசி முடித்துவிட்டேன் சார்!" என்று பெரிய மூட்டையை அளப்பான்.

உண்மையில் என்னவோ, பணத்தை விழுங்கி ஏப்பம்விட்டு, நடிக்கும் குறைச்சலாகப் பேசி, ஏமாற்றிய பூதம் இந்தப் பேர் வழியே யாவான். அதை மறைக்க இத்தனை சப்பக் கட்டுகள் கட்டி ஏய்ப்பது. இதுபோல் இன்னும் எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. அம்மாதிரி உத்தியோகத்தில் மணி கைதேர்ந்த கெட்டிக்காரன் என்பதைக் கூறவேண்டுமா! ஜவுளிக் கடைக்காரன் முதல் காய்கறி விற்கும் சின்ன கடைக்காரன் வரையில் குல்லாய் போட்டு ஏமாற்றுவதில் பலே பேர் பெற்றவன். இந்தக் கடைக்கு வரும் சில பெரிய மனிதர்களின் பெயர்களைத் தெரிந்து கொண்டு, அதை ஜவுளிக்கடைக்காரனிடம் கூறி, "சார்! இவர்களை வரச் சொல்லியது நானுக்கும்; கூட எனக்கு வரமுடியாமல், அன்று ஒரு முக்கிய காரியமாய், திவான்பகதூர் பிள்ளையவாள் வீட்டிற்குப் போய்விட்டேன். இந்த மாதிரி இன்னும் பலரை நம்ப கடைக்கே நான் அனுப்புகிறேன்" என்று பொய்மூட்டையை அவிழ்த்துவிட்டு, ஒரு உத்தரியத்தை சுலபமாக இலவசமாய் அடித்துக்கொண்டு போய்விடுவான்.

இத்தனை கைதேர்ந்த மணி, ஸினிமா முதலாளியை ஆட்டி வைப்பது ஓர் வியப்பா? அவன் சரியானபடி தூபம் போட்டு அந்த முதலாளியின் தலையைத் தடவிவிட்டான். "சார்! உங்களுக்கு என் வார்த்தையில் சந்தேகம் ஏதாவது ஏற்படுமாயின் என் வீட்டுக்கு வாருங்கள்: என் அத்தையையே நேரில் வைத்துக்கொண்டு பேசிவிடுவோம். அப்போது சரியாகிவிடுமல்லவா! ஆனால் ஒன்று. திடீரென்று தங்கள் முன்பு வருவதற்கு நிர்மலா சிறிது சங்கோஜப் படுகிறாள். காரணம் என்னவெனில், தற்காலத்தைப்போல் உயர்ந்த

வைர நகைகள், ஸில்குப் புடவைகள் ஒன்றுமில்லாத அவமானமே யன்றி வேறில்லை. முதலில் நாலு புடவைகள் வாங்கிக் கொடுத்து விட்டால், பிறகு நகைகள் தானே செய்துகொள்ள நீங்களே பணங் கொடுத்துவிடுகிறீர்கள்" என்று கூறி, அதற்கான பணத்தை வாங்கிக்கொண்டு ஸ்வாஹா செய்துவிட்டான்.

எத்தனை நாளைக்குத்தான் வாய்ச்சொல்லால் வெல்ல முடியும்? ஸினிமா முதலாளி ஏராளமான செல்வ மிருந்தபோதிலும் பிசுனாரித்தனமும் கூடவே நிரம்பப் பெற்றவர். அத்தகைய மனிதரின் தலையையே மணி தடவி விட்டான் என்றால், அவன் சாமர்த்தியத்திற்கு வேறு அத்தாக்ஷி வேண்டுமா! அன்று அத்தையிடமும் சொல்லியாகிவிட்டதால், அவனுடைய சந்தோஷமும் உச்சநிலையை அடைந்து விட்டது.

ஸினிமா அதிகாரியிடம் வழக்கம்போல் சென்றான். இவனைப் போன்ற பல சுளை விழுங்கி சோதாக்கள் முதலாளியிடம் சில ஆண்களையும் பெண்களையும் அழைத்து வந்து அவர்களைப்பற்றி இந்திரன் சந்திரன் என்று வர்ணித்துக் கொண்டிருந்தார்கள். முதலாளி, சில முக்கியஸ்தருடன், அவர்களைப் பாடச் செய்தும் சில பாகங் கூறி நடிக்கச் செய்தும் பரீக்ஷித்துக் கொண்டிருந்தார்.

அவர் மணியைப் பார்த்ததும் சந்தோஷத்துடன், "மணீ! வா! வா! உட்காரு. இவர்களின் பாட்டுக்களை நீயும் கேளு" என்று கூறினர். மணியும் உட்கார்ந்தான். அங்கு வந்திருந்தவர்களின் அபஸ்வர பாட்டுகளைக் கேட்டு, மணி காதை கெட்டியாகப் பொத்திக்கொண்டு, "சார்! இதெல்லாம் என்ன தலைவலி பாட்டு? என்னால் கேட்கவே முடியவில்லை. நான் பிறகு வருகிறேன். இவர்களெல்லாம் வெறும் எக்ஸ்ட்ராவுக்குக் கூட சரிப்படமாட்டார்களென்று தோன்றுகின்றது. சரி. நான் முக்கிய விஷயமாக வந்தேன். பிறகு பேசுகிறேன்" என்று கூறிக்கொண்டே வெளியே போகக் கிளம்பினன்.

இவனுடைய துடுக்கான வார்த்தையைக் கேட்டு, அங்கு வந்திருந்தவர்களின் மனது நொந்து, இவன்மீது கடுங்கோபம் உண்டாகியது. முதலாளியும் மணியின் பின்னோடு எழுந்து வந்து

"இரு, இரு; மணீ! விஷயம் என்னவாயிற்று? அதைச் சொல்லி விட்டுப் போய்விடு" என்றார்.

மணி:—இன்றைக்கு ஏதோ ஒரு அம்மனின் பூஜையை முன்னிட்டு, சாயங்காலம் பத்துப் பெயர்களைக் கூப்பிடலாமென்று அத்தை ஏற்பாடு செய்திருக்கிறாள். அத்தையும் நானும் எத்தனையோ சொல்லி, இன்று நாலு பாட்டாவது அம்பாளுக்குப் பாடவேணுமென்று கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டதன்பேரில் ஒப்புக்கொண்டிருக்கிறாள். நீங்கள் சரியாய் சாயங்காலம் ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்துவிடுங்கள். உங்களை இன்னாரென்று அவளிடம் சொல்லாமல் மறைவான இடத்திலிருக்கும்படி உங்களுக்கு வசதி செய்கிறேன். நீங்கள் அங்கிருந்தபடி சங்கீதத்தைக் கேட்கலாம். பிறகு நீங்களே என் வார்த்தையின் உண்மையை அறிவீர்கள்—என்றான்.

முதலாளிக்கு உச்சி குளிர்ந்துபோய்விட்டது. சரியாகத் தான் ஆறு மணிக்கு அங்கிருப்பதாகச் சொல்லியனுப்பிவிட்டார். மணியும் வீட்டுக்கு வந்தான். ஒயிலாம்பாளை நோக்கி, "என்ன அத்தே! பெண் பிள்ளைகளுக்குச் சொல்லி விட்டாயா! சரியாக ஆறுமணிக்கு முதலாளி இங்கே வருவதாகச் சொல்லிவிட்டார். அவர் வந்து சங்கீதத்தைக் கேட்கவேண்டியதுதான் தாமதம். வாயைத் திறக்காமல், உன் கையில் நோட்டை எண்ணிவிட்டு, உன்னைக் கெஞ்சிக் கூத்தாடி வேண்டுவார். நீ சற்றுப் பிகுவாகவே இரு. சரியாக 20,000 ரூபாயில் நீ ஆரம்பித்தால் அவரிடம் சுலபமாக 10,000 ரூபாயை நாம் வாங்கிவிடலாம். என்ன தெரிந்ததா?" என்றான்.

ஒயிலாம்பாளின் சந்தோஷம் கரைகடந்து விட்டது. "மணீ! கெட்டிக்காரன்னு, நீதான் கெட்டிக்காரன். எனக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டுமா? 50 ஆயிரத்துக்கு முதலில் ஆரம்பித்து அடிபோட்டு விடுகிறேன். அது சரிதான்; எனக்குக் கூட நடிப்பதற்கு ஏதாவது ஒரு வேஷம் குடுக்கமாட்டாரா! அதில் ஏதாவது சம்பாதிக்கலாமே!" என்று மெல்ல இழுத்தாள்.

மணி:—அத்தே! பேஷ்! நீ சொல்லாமலேயே நான் தீர்மானித்துத்தான் வைத்திருக்கிறேன். இக்காலத்தில்தான் ஸினிமாவில் பல்விழுந்த கிழவி, கிழவன் முதல் பல்லு முளைக்காத

குழந்தைகள் வரை நடித்து, சக்கைப்போடும் போடச் செய்கிறார்களே. அப்படியிருக்க உனக்கென்ன குறைவு? முதலில் நீ நானா, ஜீவா, நிர்மலா நால்வருக்கும் சேர்ந்து சுமார் கால் ரூபாயாவது,—அதாவது 25 ஆயிரமாவது—அடித்து விடலாம் என்று முடிவு கட்டிவிட்டேன். அதோடு படம் பம்பாய், கல்கத்தா, பூனா முதலிய இடங்களில் எடுப்பதனால், காலணா செலவில்லாமே அந்த ஊர்களை எல்லாம் நாம் பார்த்துவிட்டு வரலாம். நான் சகல ஏற்பாடும் செய்து விடுகிறேன். நீ கவலைப்படாதே! முக்கியமானவள் நிர்மலா. தெரிந்ததா! அவளைச் சரிப்படுத்தி விட்டால், காரியம் முடிந்துபோனாற் போலத்தான். ஆகையால், நீ அவளைச் சரிப்படுத்தி, அவளை இன்று அழகாகப் பாடச்சொல்லு. அதுபோதும்" என்று பெரிய உபதேசம் செய்தான். நாக்கில் ஜலம் ஊறியவாறு, ஓயிலாம்பாள் ஆனந்தமாய் நிர்மலாவின் விடுதியை நோக்கி, சந்தோஷத்துடன் நடக்கலானாள்.

# நான்கு டாக்கி நாவல்கள்!

அனாதைப் பெண் ரூ. 1—4

(40 டாக்கி படங்களுடன் கூடிய புதிய பதிப்பு)

ராஜமோஹன் ரூ. 1—4

தியாகக்கொடி ரூ. 2—0

நவீனசேகரன் அணா 8

*

இவைகளை
உடனே வாங்கிப் படித்து
பிறகு
படமாகப் பார்த்துக் களியுங்கள்

183024

தமிழ் மக்களின் உள்ளங்களை கொள்ளை கொள்ள வரும்

பேரானந்த ஸங்கீத விருந்து




**விரைவில் ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்!**

---

புகிங்குகளுக்கும் ஜில்லா உரிமைகளுக்கும் :—

**ஸென்ட்ரல் ஸ்டூடியோஸ் லிமிடெட்,**

கோயம்புத்தூர்.

"JAGANMOHINI" Vol. XV No. 7 Regd. No. M. 2210




தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்




அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,
சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St. Triplicane, Madras.